விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு+பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-5884)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 09 ஞாயிற்றுக்கிழமை (25.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

# இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்த சக்தியாலும் வீழ்த்த முடியாது

## பேரெழுச்சி கொண்ட "எழுக தமிழ்" வரலாறாகியது








(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீதான தொடர்ச்சியான அடக்கு முறைகளைக் கண்டித்தும் தமிழ் மக்களின் அபிலாசைகளை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்ட **'எழுக தமிழ்'** மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி நேற்று யாழில் பல்லாயிரக்கணக்கான மக்களின் அணிவகுப்பில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேரணியினை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னின்று ஆரம்பித்து வைத்திருந்ததுடன், மதத்தலைவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என பல்வேறுபட்ட தரப்பினரும் தமது பேராதரவை வழங்கியுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு முதலமைச்சரின் முக்கியத்துவம் மிக்க உரை

### "எழுக தமிழின் கேள்விக்கு அதிகாரத்தில் உள்ளவர்களின் பதில் என்ன?"

(சங்குநாதம் 8,9 ஆம் பக்கம் பார்க்க)



## "எழுக தமிழ்" பிரகடனம் - 2016



(சங்குநாதம் 3 ஆம் பக்கம் பார்க்க)

## "எழுக தமிழ்" சுடர் ஏற்றல்



யாழ்.முற்றவெளியில் இடம்பெற்ற 'எழுக தமிழ்' பேரணி நிகழ்வில் போரில் இரண்டு கைகளையும் கண்பார்வையையும் இழந்த ஒரு பொது மகன் எழுக தமிழின் எழுச்சிச்சுடரை ஏற்றி வைப்பதை படத்தில் காணலாம்.

## மோ.சைக்கிள் - டிப்பர் விபத்து; இளைஞன் பலி

(பரந்தன்)

கிளிநொச்சி முறிகண்டி அக்கராயன் வீதியின் 2 ஆம் கட்டைபகுதியில் நேற்று மாலை 6.50 மணியளவில் ஏற்பட்ட டிப்பர் வாகன விபத்தில் ஒருவர் பரிதாபகரமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தொழிலிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பிரஸ்தாப நபரின் மோட்டார் சைக்கிளும் கிரவல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளின் பின்புறம் அமர்ந்து சென்ற குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் இரணைமடு பகுதியை சேர்ந்த வேலாயுதம் சதீஸ்கரன் என்ற 22 வயதுடைய இளை (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு கிழக்கை இணைக்கவே நாம் அரசுடன் போராடுகிறோம்

## த.ம.பேரவையின் இணைத் தலைவர் வசந்தராஜா கருத்து



(யாழ்ப்பாணம்)

வேறுபாட்டுடன் இருக்கும் தலைவர்களே நாம் செய்யும் காரியங்களை பாராட்ட மனமில்லை என்றால், அமைதியாக இருந்து நாம் போகும் பாதைக்கு வழிவிடுங்கள் என தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களுள் ஒருவரான ரி.வசந்தராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் “எழுக தமிழ்“ மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டம் நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது.

முற்றவெளியில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாங்கள் கிழக்கில் இருந்து வடக்குடன் இணைவதற்காக வந்துள்ளோம். நாங்கள் நீங்கள் வேறானவர்கள் அல்ல. வடக்கையும் கிழக்கையும் மீண்டும் இணைத்து தருமபடி தான் நாம் அரசிடம் கேட்கிறோம். இதை நாங்கள் அவர்களிடம் கேட்கும் சந்தர்ப்பத்தில வடகிழக்கு மக்கள் மனதாலும் செயலாலும் ஒன்று சேர்ந்து நிற்க வேண்டும்.

வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டும் என்பது எல்லோராலும் உணரப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளை நோக்கமாக கொண்டு கடந்த ஆண்டு ஆரம்பமாகிய தமிழ் மக்கள் பேரவை ஒரு இலட்சியத்தை மனதில் வைத்து தனது நகர்வுகளை புத்திசாலித்தனமாக நகர்த்திக்கொண்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் இலட்சியப்பாதையில் தனது இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கிறது.

அதன் முதற்கட்டமாக, 60 வருடமாக எமது கையில் இல்லாமல் எந்த தலைவராலும் உருவாக்கப்படாத தீர்வுத்திட்டத்தை ஆவண வடிவமாக உருவாக்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமர்ப்பித்துள்ளது.

அடுத்த கட்ட நகர்வாக வடக்கு கிழக்கை கலை மற்றும் மொழியினால் இணைப்பதற்காக முத்தமிழ் விழாவை அண்மையில் நடத்தியிருந்தோம்.

மூன்றாவதாக தமிழ் மக்களின் மொத்த பிரச்சினைகளையும் சர்வதேசத்துக்கும் அரசுக்கும் ஒருமித்து எடுத்துக்கூறி அதற்கான தீர்வை பெறுவதற்காக ஆரம்பகட்ட நடவடிக்கையை இப்பேரணி ஊடாக ஆரம்பித்துள்ளோம்.

நாம் எல்லோரும் இணைந்தால் ஒற்றுமைப்பட்டால் நமது இலக்கை நாம் அடைந்தே தீருவோம் என்பது உறுதி. கேட்காமல் எதுவும் கிடைக்காது . கேட்காத சமூகம் பெறுவதற்கு தகுதியற்ற சமூகம். முயலாத சமூகம் வெற்றியை அனுபவிப்பதற்கு தகுதியற்ற சமூகம்.

இந்த சந்தர்ப்பத்தில் கேட்க வேண்டாம் என சிலர் கூறுகிறார்கள். முயல வேண்டாம் என கூறுகிறார்கள். கேட்காமல் இருந்தால் எதுவும் எமக்கு கிடைக்காது. உரத்துக்கேட்போம். அதற்காகத்தான் இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

இது தொடர்சியாக இடம்பெறவேண்டும். அப்போதுதான் மற்றவரின் தலை திரும்பி எமது பக்கம் அவர்களின் பார்வை விழும். எனவே தொடர்ந்து போராட வேண்டும்.

பகிரங்கமாக நாம் கேட்கிறோம். மக்கள் அத்தனை பேரும் ஒன்றிணைய வேண்டும். நாம் பிரதேசத்தால் வேறுபட்டவர்கள் என்ற எண்ணம் வேண்டாம் அவ்வாறு தலைவர்கள் கூறுவதை கேட்கவும் வேண்டாம். நாம் ஒன்றாக இல்லாவிட்டால் எமது விடுதலைக்கு வெகு காலம் எடுத்தேயாகும்.

வேறுபாட்டுடன் இருக்கும் சில தலைவர்களே! எங்கள் பக்கம் வாருங்கள். நாம் செய்யும் காரியங்களை குறை சொல்ல வேண்டாம். நல்லதை செய்தால் பாராட்டுங்கள். பாராட்ட மனமில்லை என்றால் அமைதியாக இருங்கள்.அமைதியாக இருந்து நாம் போகும் பாதைக்கு வழிவிடுங்கள், ஒற்றுமையாக இருந்தால் வெற்றி நிச்சயம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

### இலட்சியத்தால்...

பூர்வமான உரைகளுக்கு அதை ஏற்றுக் கொள்ளும் முகமாக மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்து உற்சாகமூட்டினர்.

இறுதியில் அனைத்து மக்களினதும் ஒருமித்த உணர்ச்சிபூர்வமான எழுக தமிழ் கோசத்துடன் பேரணி நிகழ்வு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதேவேளை அத்தியாவசிய சேவைகள் கருதி இயங்கிய மருந்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், உணவகங்கள் தவிர்ந்த ஏனைய வடக்கிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் எழுக தமிழ் பேரணிக்கு பூரண ஆதரவைத் தெரிவித்து கதவடைப்பை மேற்கொண்டிருந்ததுடன், பல நூறு பொது அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து பேரணிக்கு ஒருமித்த பேராதரவை வழங்கியிருந்தமை தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான இலட்சியப் பாதைக்கான ஒற்றுமையான பயணத்தினை வெளி உலகத்திற்கு உறுதியாக வெளிப்படுத்தியுள்ளது.

பேரணியில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்கள் தமது எழுச்சி முழக்கத்தில் இராணுவமே வெளியேறு, பௌத்த மயமாக்கலை உடனே நிறுத்து, காணி சுவீகரிப்பு இனியும் வேண்டாம், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு, அரசியல் கைதிகளை விரைந்து விடுதலை செய், காணாமல்போன எம் உறவுகளுக்கு என்னவாயிற்று என பதில் சொல், நல்லாட்சி அரசாங்கமே நீயும் ஏமாற்றுகிறாயா, சுயாட்சியை வழங்கு, மீனவர்களின் கடல் வளத்தை சுரண்டாதே, சொந்த இடங்களில் எம்மை மீள்குடியமர்த்து, உள்ளக விசாரணைகள் தேவையில்லை, சர்வதேச விசாரணையே தேவை என பல்வேறுபட்ட உரிமை கோசங்களை எழுப்பியிருந்தனர்,

மேலும் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்காக பேரணி ஏற்பாட்டுக் குழுவினரால் போக்குவரத்து ஒழுங்குகள், குடிநீர் வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாத வகையிலும் பேரணி எழுச்சிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பேரணியில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த பெருமளவான பொலிஸார் வீதிக்கடமைகளில் ஈடுபட்டிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. (செ-4-9)

### மோ.சை...

ஞுன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந் நிலையில் விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது பிரேத பரிசோதனைகாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-312)


புதிய வெளிச்சம்

பேராசிரியர் Dr ஜெயந்தஶ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின்
M.A., M.Phil., Ph.D (English), M.Ed., M.A., Ph.D (Tamil).

“சிறப்பு நிகழ்ச்சி”
Motivational Speech

நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 02 ஒக்டோபர் 2016 மாலை 5.30 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்



ஏனைய நிகழ்வுகள் :
யாழ்ப்பாணம்,
வன்னி,
திருக்கோணமலை,
மட்டக்களப்பு.

(C-5887)

ஊடக அனுசரணை:
ஐதருவீ வலம்புரி

தொடர்புகளுக்கு :
நவஜீவன் அனந்தராஜ் 0772293366



வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் சுப காரியங்கள் செய்வதற்கும், வெளியூர்களில் இருந்து வருபவர்கள் தங்குவதற்குமான சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு. (6019)

077 285 0753



காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகில் மட்டுவில் தெற்கு, பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 3,2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (6016)

077 873 0129



அறிவித்தல்

கொக்குவில் - நந்தாவில்

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் மகாசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 16.10.2016 ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆண்டுச் சந்தா அங்கத்தவர்கள் தங்கள் அங்கத்துவம் முடிவடைந்ததால் அதனைப் புதுப்பிக்கவும், புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி 05.10.2016

ஆண்டுச் சந்தா ரூபா 20/-
ஆயுட் சந்தா ரூபா 200/-

குறிப்பு :- பிரேரணைகள் அனுப்ப விரும்பும் அங்கத்தவர்கள் 10.10.2016 இற்கு முன் பிரேரணைகளைச் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

(6018)

பரிபாலன சபை,
கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.

# உரிமை முழக்கத்துடன் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நல்லூரில் ஆரம்பம்





படங்கள்: உ.சாளின், பொ.சோபிகா












# விண்முட்டும் நீதிக்குரலோடு 'எழுக தமிழ்'
























# கொலைக் குற்றவாளியை மீட்க இன்னும் 3இலட்சம் தேவையாம்

## கூட்டு எதிரணி கூறுகிறது

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரை சுட்டுக் கொன்ற இராணுவ அதிகாரியை தண்டனையிலிருந்து மீட்பதற்கு இன்னும் மூன்று இலட்சம் ரூபா தேவைப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். கண்டியில் வைத்து நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தப்பிச் செல்ல முயற்சித்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக உயிரிழந்த புலி உறுப்பினரின் குடும்பத்திற்கு 20 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு அண்மையில் நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

இந்த இருபது இலட்சம் ரூபா நட்டஈட்டை செலுத்தி இராணுவ அதிகாரியை தண்டனையிலிருந்து மீட்கும் முயற்சியில் கூட்டு எதிர்க்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் கண்டியில் இராணுவ அதிகாரிக்காக நிதி திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நட்டஈட்டுத் தொகையை செலுத்த இன்னும் மூன்று இலட்சம் ரூபாவே தேவைப்படுகின்றது என இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். 1998ம் ஆண்டு மேஜர் கெமுனு விக்ரமகே புலிச் சந்தேக நபரை கைது செய்திருந்தார். குறித்த புலிச் சந்தேக நபர் தப்பிச் செல்ல முயற்சித்த போது மேஜர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவர் உயிரிழந்திருந்தார். இது தொடர்பிலான வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றம், ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையையும் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நட்டஈட்டையும் வழங்குமாறு உத்தரவிட்டிருந்தது. குறித்த காலத்திற்குள் நட்டஈட்டை செலுத்தத் தவறினால் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என்ற நிலையில் கூட்டு எதிர்க்கட்சியினர் முன்வந்து நட்டஈட்டுத் தொகையை திரட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


## புறோயிலர் இறைச்சிக்கோழி விற்பனை

புறோயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்தல்.சுத்தம் செய்யப்பட்டது 1kg 500 ரூபா மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவுகள்.

உயிர் நிரை மொத்தக் கொள்வனவுக்கு 1kg 320 மட்டும். சில்லறைக்கு வழங்கப்படமாட்டாது.

தொடர்பு:-U-S.A பாம்
குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை.
T.P- 077 868 9500

## வீடு தேவை

மூன்று அறையும் மண்டபமும் விசாலமான முற்ற வசதியும் மலசலகூடமும் குடிநீர் வசதியும் கொண்ட நல்ல நிலையிலுள்ள வீடு ஒன்று பணிமனை உபயோகத்துக்கு வாடகைக்கு குறைந்தது இரு வருடங்களுக்கு தேவை. பலாலி வீதியை அண்மித்ததாகவும் கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் உள்ள உரிமையாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும். வாடகையும் முற்பணமும் பேசித் தீர்மானிக்கலாம்.

விண்ணப்பங்கள் 30.09.2016 வரை ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுத்தபாலில் அனுப்புதல் நன்று. (5889)

முகவரி: ஆறுதல், இல. 51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## சித்த ஆயுர்வேத வைத்தியம்

சித்தர்கள் முறைப்படி கைநாடிப் பரீட்சையில் உங்களைப் பீடித்துள்ள நோய்கள் பற்றிக் கூறப்படும்.அதில் நீங்கள் திருப்தியுற்றல் காயகல்ப மூலிகைகள் மூலம் முறையான சிகிச்சையளிக்கப்படும்.மாதர் நோய்கள், குழந்தையின்மை,ஆண்,பெண் பாலியல் பலவீனம் போன்றவற்றிற்கு அதிசக்தி வாய்ந்த இராஜவஜீகரண லேகியம்,மூளைக்கு இரத்த ஓட்டம் பெறவும் ஞாபகசக்தி உண்டாகவும் அழகிய நீண்ட நீளமுடி பெறவும் கண்பார்வை ஒளி பெறவும் நேத்திரசிந்தாமணித்தைலம் பெற்றுப் பயன் அடையுங்கள்.

விபரங்களுக்கு
Dr.த.கிருஷ்ணபகவான்
கிருஷ்ணா சித்த ஆயுர்வேத
வைத்தியசாலை.

இல-11,3ம் குறுக்குத்தெரு,
கண்டிறோட்,
வவுனியா.
T.P. 077 972 3369
(5956)

## ஜோதிடத் தகவல்

### பெண்மையும் உண்மையும்

ஜெனன இலக்கினமும் சந்திர லக்கினமும் ஒரு பெண்ணின் ஜாதகத்தில் பெண் ராசிகளில் இருந்தால் அழகு உடையவள். மேற்படி ராசிகளை சுபர்கள் பார்த்தால் மிகுந்த அழகும் குணமும் செல்வமும் உடையவள்.





## சரசோதி மாலை நூல் வெளியீடு

கலாநிதி பால.சிவகடாச்சம் எழுதிய "சரசோதி மாலை , ஒரு சமூக பண்பாட்டுப் பார்வை மற்றும் "சரசோதிமாலை மீள்பதிப்பு" ஆகிய இருநூல்களின் வெளியீட்டு விழா நாளை 26 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் கலா சார மண்டபத்தில் நடைபெறும். கலாநிதி சிவகடாச்சம் யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் உயிரியற் றுறை தலைவராகப் பணியாற்றியவர். (இ-3)


## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி 8 மணி முதல் 6 மணி வரை

நாதன் இன்
394 1/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்தி]
072 681 6681, 076 557 5394


## இராசி பலன்

25.09.2016
(புரட்டாதி 09, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
தசமி பின்னிரவு 4.44 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 7.11 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
வளாவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந். |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம்<br>பகல் 1.16 இருந்து<br>கடக-சந் | | |
| | | | ராகு, புதன் |
| செவ் | சனி | சுக் | குரு சூரி |

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அக்கறை கூடும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், கௌரவம், அந்தஸ்து உயர்வடையும், உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கடகம்** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறும், உடல்நலனில் சீராகி உற்சாகப்படுத்தும், பயணமொன்றால் விரயங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வ நிலை உயரும் நாள், பயணங்கள் கைகூடும், யோகமான நாள்.

**துலாம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் பெற வாய்ப்புண்டு, சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**தனுசு** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் இடம்பெறலாம், எந்தக் காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** போசன சுகமுண்டு, நட்பு வட்டம் விரிவடையும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எடுத்த காரியங்கள் கைகூடும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

# மக்களால் மக்களுக்காக நடத்தப்பட்ட "எழுக தமிழ்" பேரணி பேரெழுச்சி

யாழ்.பல்கலையில் ஆரம்பம்




படங்கள்:-பொ.சோபிகா, உ.சாளின்

யாழ்.முற்றவெளியில் திரண்ட மக்கள்



# மரண அறிவித்தல்

## அமரர் ஜெயபாலன் சதீஸ்குமார்

## (தொழில்நுட்ப உத்தியோகத்தர்,CECB North)



கருணாகரப் பிள்ளையார் கோவில் வீதி (இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை முன்பாக) இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயபாலன் சதீஸ்குமார் அவர்கள் 22.09.2016 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் தணிகாசலம் ஜெயபாலன் (உரிமையாளர், கனகா வேளாண் களஞ்சியம், இணுவில்), சாரதாதேவி ஆகியோரின் அன்பு மகனும் அர்ச்சனாவின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான தணிகாசலம், கனகம்மா ஆகியோரினதும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாம்பாள் ஆகியோரினதும் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் 25.09.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகபவனம்
இணுவில் கிழக்கு

தகவல்:
குடும்பத்தினர்

(6014)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்
20
04
1943

ஆண்டவன் அடியில்
25
09
2015

## அமரர் அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகி (செல்வராணி)

அன்பின் சிகரமே பாசத்தின் திருவுள்ளமே!
குடும்பத்தின் குலவிளக்கே! எம் அன்புத்தாயே!
காலனவன் காத்திருந்து உனைக் கவர்ந்தானோ
சிறகிழந்த பறவைகளாய் தவிக்கின்றோம் நாம்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகளானாலும்
ஆறாதம்மா எம் துயரம்...

(6001)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தையா திருநாவுக்கரசு (பத்தர்)



நாவற்குழி கிழக்கை பிறப்பிடமாகவும்
கைதடி தெற்கை வசிப்பிடமாகவும்
கொண்ட கந்தையா திருநாவுக்கரசு
20.09.2016 செவ்வாய்க்கிழமையன்று
இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K.T.பிளாசா,
பிரதான வீதி,
சங்கானை.

ஆசைப்பிள்ளை அன் சண்ஸ் நகைமாடம்,
ஆ.குணசேகரம் குடும்பத்தினர்,
ஆசைப்பிள்ளை குடும்பத்தினர், ஊழியர்கள்.

(5893)

# புலிகள் மீதான ஐரோ. ஒன்றிய தடையை நீடிக்க முயற்சிப்போம்!

## மங்கள சமரவீர தெரிவிப்பு




*ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை தொடர இலங்கை தன்னாலான முயற்சிகளை மேற் கொள்ளும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.*

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில கலந்துகொள்ள நியூயோர்க் சென்றுள்ள மங்கள சமரவீர அங்கு இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு ஐரோப்பிய நீதிமன்றம் 2014 ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பை மேன்முறையீடு செய்திருந்த ஐரோப்பிய ஒன்றியம், அதற்காக முன் வைத்த காரணங்கள் திருப்திகர மாக இல்லாததால் மேன்முறையீட்டை இரத்துச் செய்ய தீர்மானித்துள்ள நிலையிலேயே ஐரோப்பிய உயர் நீதிமன்றத்தின் உயர் நிலை ஆலோசகரான எலோனோசாக்ஸ்டன் இந்த ஆலோசனையை வழங்கியிருந்தார்.

ஆனாலும், இந்தத் தடை இலகுவில் நீக்கப்படமுடியாதது என்றும், அது தொடரப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வீதிக்கு வந்த மகிந்த குடும்பம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவும் நுவரெலியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இந்த விஜயம் மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த நிலையில் நேற்றுக் காலை கிரகரி வாவியை சுற்றி மகிந்த மற்றும் அவரது மனைவி நடைபயிற்சி மற்றும் உடற பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு கூடிய மக்கள் சிரித்த முகத்துடன் இவர்கள் இருவரையும் வேடிக்கை பார்த்துள்ளனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் அங்கு கூடிய மக்களுடன் எடுத்துக் கொண்டுள்ள சில புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. (இ-7-10)


# தெற்காசியாவில் குறைந்தளவில் எயிட்ஸ் பரவும் நாடு இலங்கை

தெற்காசிய நாடுகள் வரிசையில் குறைந்தளவில் எச்.ஐ.வி. பரவும் நாடாக இலங்கையுள்ளதாகவும் 0.1 சதவீத அளவிலேயே இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுக் காணப்படுவதாகவும் தேசிய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எச்.ஐ.வி. நோய் தொற்றுதல் குறித்து அறியாமை மற்றும் முன் கூட்டியே அறிந்து கொள்வதில் ஏற்படும் தாமத நிலை நோய் முதிர்ச்சியடைவதற்கான அடிப்படைக் காரணிகள் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

எயிட்ஸ் நோயை உண்டாக்கும் மிக நுண்மையான எச்.ஐ.வி. வைரஸ் உடலினுள் ஒரு கலத்துக்குள் நுழைந்து பின்னர் அவை முதிர்ச்சியடையும் வரை வெளிப் படுவதில்லை. பலமடைந்து பெருக ஆரமபித்ததும் மிக வேகமாக செயற்படுவதால் இதன் தாக்கமும் அதிகமாகவே இருக்குமென அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

குடும்ப சுகாதார பணியகத்தில் நேற்று இடம்பெற்ற எயிட்ஸ் நோய் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக வியல் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)




- 1513 - ஸ்பானிய நாடுகாண் பயணி பாஸ்கோ நூனியெத் தே பால்போவா பசிபிக் பெருங் கடலை முதன் முதலில் கண்ட ஐரோப் பியர்.
- 1690 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப்பத்திரிகை (Publick Occurrences Both Foreign and Domestick) முதலும் கடைசித் தடவையாகவும் வெளி வந்தது. இது அரசினால் தடை செய்யப் பட்டது.
- 1789 - அமெரிக்கக் காங்கிரஸ் அரசியலமைப் பிற்கு மனித உரிமைகளுக்கான 10 திருத் தங்கள் உட்பட 12 திருத்தங்களைக் கொண்டு வந்தது.
- 1846 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் சாச்செரி டெய்லர் தலைமையில் மெக்சிக்கோவின் மொண்டெரே நகரைக் கைப்பற் றினர்.
- 1906 - கரையிலிருந்து படகை வழி நடத்தும் முறை ஸ்பெயினில் இயக்கிக் காட்டப்பட்டது. இதுவே தொலை இயக்கியின் பிறப்பு எனக் கருதப்படுகிறது.
- 1956 - அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்த முதலாவது தொலைபேசிக் கம்பித்திட்டம் வுயுவு-1 நிறுவப்பட்டது.
- 1957 - ஐக்கிய அமெரிக்காவில் ஆர்கன்சஸ் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9 கறுப்பின மாணவர்கள் 300 இராணுவத் தினர்களின் பாதுகாப்புடன் பாடசாலை சென்றனர்.
- 1959 - இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சோமராம தேரர் என்ற புத்த பிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து அடுத்த நாள் இறந்தார்.
- 1962 - அல்ஜீரிய மக்கள் சனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1978 - கலிபோர்னியாவில் சான்டியாகோ நகரில் இரண்டு விமானங்கள் மோதிக் கொண்டதில் 144 பயணிகள் கொல்லப் பட்டனர்.
- 1983 - வட அயர்லாந்தில் 38 ஐரியக் குடியரசு இராணுவக் கைதிகள் சிறையை உடைத்து தப்பினர்.
- 1992 - யாழ்ப்பாணம், பூநகரியில் 62 இராணுவக் காவலரண்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன.
- 2002 - குஜராத் மாநிலத்தில் இந்துக் கோயில் ஒன்றில் இடம்பெற்ற வன்முறையில் 32 பேர் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1897 - வில்லியம் ஃபாக்னர், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் . (இ. 1962)
- 1899 - உடுமலை நாராயணகவி, தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர், நாடக எழுத்தாளர். (இ. 1981)
- 1968 - வில் ஸ்மித், அமெரிக்க ராப் இசைப் பாடகர்.
- 1976 - சான்சி பிலப்ஸ், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

**இறப்புகள்**

- 1978 - ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை. (பி. 1923)
- 1986 - நிக்கலாய் செமியோனொவ், ரஷ்ய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1896)
- 2003 - எட்வர்ட் செயிட், ஆங்கில ஒப்பாய்வுத்துறை அறிஞர். (பி. 1935)

**சிறப்பு நாள்**

- மொசாம்பிக் - பாதுகாப்புப் படையினர் நாள்.

# புதிய கட்சியை உருவாக்கும் திட்டம் மகிந்தவுக்கு இல்லையாம் -டலஸ்

புதிய கட்சியை உருவாக்க எந்த முன்னெடுப்பும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என மகிந்த ஆதரவு அணி முக்கியஸ்தரான டலஸ் அலகப்பெரும எம்.பி. தெரிவித்தார். எதிர்வரும் ஒக்டோபர் 8 ஆம் திகதி எஹலியகொடயில் புதிய கட்சியை ஆரம்பிப்பதற்கான முதலாவது மாபெரும் கூட்டம் நடத்தப்பட இருப்பதாக மகிந்த ஆதரவு அணியிலுள்ள சிலர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் ஒன்றிணைந்த எதிரணியின் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதே போன்றே எஹலியகொட கூட்டமும் நடத்தப்படுகிறது. புதிய கட்சி அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக செய்திகள் பரவலாக தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் அதில் உண்மையில்லை. உள்ளூராட்சி தேர்தல் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# எயிட்ஸ் நோயாளர்களுக்கு இலவச சிகிச்சை வழங்கப்படும்

அனைத்து எச்.ஐ.வி. தொற்றுள்ள நோயாளர்களுக்கும் இலவசமாக சிகிச்சை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்தார்.

தற்போது நாட்டில் 2436 எச்.ஐ.வி.நோயாளர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ்நோயை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன், அதற்கான வேலைத் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்காக 30 சிகிச்சை மத்திய நிலையங்கள் சுகாதார அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

சுகாதாரக் கல்வி காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த அவர் இவ்வாறு கூறினார்.

பாலியல் விடயங்கள் தொடர்பாக மக்கள் அறிவூட்டப்பட வேண்டும் என்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# பழிவாங்க வேண்டாம் கோருகிறார் மகிந்த

(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை பழிவாங்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

"கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கண்மூடித்தனமாக பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பழிவாங்கல்கள் இடம்பெறுவதனால் சில அரச அதிகாரிகளும் பணிகளை மேற்கொள்ள அஞ்சுவார்கள். இது நாட்டின் அபிவிருத்திக்கு பாதகமானதாக அமையும்.

பழிவாங்கல்களில் ஓர் எல்லை இருக்க வேண்டும். இந்த பழிவாங்கல்கள் எப்போது முடிவடையும் என்ற கேள்வி எழுகின்றது. நான் முதல் தடவையாகவே இவ்வாறு அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கின்றேன். கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து தொடர்ந்தும் பழிவாங்கல்களை மேற் கொள்ள வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஜெனீவாத் தீர்மானம் குறித்து மங்கள-அலோக் சர்மா பேச்சு

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை அரசாங்கத்தினால் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது தொடர்பாக, இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் பிரித்தானிய நாடாளுமன்றத்தின், வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக விவகாரங் களுக்கான இணை அமைச்சர் அலோக் சர்மா, பேச்சு நடத்தியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் பிரித்தானிய இணை அமைச்சர் அலோக் சர்மாவுக்கும் இடையில், இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை அரசாங்கத்தினால் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

நல்லதொரு சந்திப்பாக இது இருந்தது என்று பிரித்தானிய இணை அமைச்சர் அலோக் சர்மா தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டேன் கோத்தபாய அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல்களில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களில் மகாநாயக்க தேரர்களை கோத்தபாய ராஜபக்ஷ சந்தித்து பேசினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகப் பரவிய வதந்தியால் நான் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டேன்.

இராணுவ அதிகாரியாக இருபது ஆண்டுகள் நாட்டுக்கு மிகச் சிறந்த சேவையை ஆற்றியுள்ளேன். பாதுகாப்புச் செயலராக மேலும் 10 ஆண்டுகள் பணியாற்றினேன். அரசியலில் எனக்கு அனுபவம் இல்லை.

கூட்டு எதிரணியால் இரத்தினபுரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரணி தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் அப்போது இரத்தினபுரியில் இருந்தாலும் கூட அந்தப் பேரணியில் கலந்து கொள்ள மாட்டேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வற்வரி முறைமை அவசியம் வருமான அதிகரிப்பும் தேவை

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

அரசாங்கத்தின் முறையான வரிக் கொள்கை முறைமை மற்றும் நம்பகத்தன்மை என்பன அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது.


தற்போது இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள வற்வரி முறைமை அவசியமான தேவையாக காணப்படுகின்ற போதும் அது மக்களை பாதிக்கும் வகையில் அமைந்து விடக்கூடாது என்பதை கருத்திற் கொண்டு வருமான அதிகரிப்புக்கு தேவையான ஆலோசனைகளையும், வரவு செலவுத்திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய உள்ளீடுகள் தொடர்பிலும் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழு தலைவர் ஜெவோ லீ தெரிவித்தார்.

இம்மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மத்திய வங்கி தலைமையகத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7-10)

# வடக்கு வர்த்தகர்களின் பூரண கடையடைப்பு காட்சிகள்

'எழுக தமிழ்' ஆதரவு
















# புதிதாய் வாழ்வோம் எனும் தலைப்பில் யாழ்.மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மகாநாடு

யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றவுடன் புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில் செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்னும் கருப்பொருளில் யாழ். மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மகாநாடு ஒன்றை நடத்துவதற்கான அழைப்பை வெளியிட்டார். இம்மகாநாடு செப்டெம்பர் மாதம் 29.30 மற்றும் ஒக்ரோபர் முதலாம் திகதி ஆகிய மூன்று தினங்களில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் இந்த மகாநாட்டு எண்ணக்கருவிற்கு அவரின் அனுமதியுடனும் வழிகாட்டலுடனும் உருக்கொடுப்பவராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் விளங்குகிறார்.

**இரண்டாம் வத்திக்கான் சங்கமும் புதுப்பித்தலும்**

கத்தோலிக்க திருச்சபையின் எந்த மூலையில் புதுப்பித்தல் - புதுவாழ்வு - மறுமலர்ச்சி என்ற பதங்கள் பேசப்பட்டாலும் அத்துடன் இணைத்துப் பேசப்படுவது இரண்டாம வத்தக்கான் சங்கமே ஆகும். கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் நடைபெற்ற பாரிய புரட்சி அது. தூய ஆவியால் தூண்டப்பட்டவராக திருத்தந்தை 23ஆம் அருளப்பர் யாரும் எதிர்பார்க்காத வேளை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டுங்கள் மூடிக்கிடக்கும் திருச்சபையின் யன்னல்கள் திறக்கப்பட்டு புதிய காற்று உள்ளே வரட்டும் என்றார். உலகக் கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியையும் புது மாற்றத்தையும் கொண்டுவர ஏதுவான 16 ஏடுகள் இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் உருவாக்கப்பட்டன.

**யாழ். மறை மாவட்டமும் புதுப்பித்தலும்**

இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் அப்போதைய யாழ்.ஆயரான எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை பங்கு பற்றி வந்த பின் செயற்படுத்திய பல மாற்றங்களின் தொடர்ச்சியாகவே யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தில் இப்போது புதிதாய் வாழ்வோம் என்னும் கருப்பொருளில் யாழ். மறைமாவட்டத்தில் அழைப்பு விடுத்துள்ள மேய்ப்புப்பணி மகாநாட்டை நோக்க வேண்டியுள்ளது. 1994ஆம் ஆண்டு யாழ்.



ஆயா மேதகு கலாநிதி தோமஸ சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில் யாழ் .மறை மாவட்டத்தில் நடைபெற்ற மேய்ப்புப்பணி மகாநாட்டின் பின்னர் இம் மகாநாட்டுக்காக அழைப்பு விடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**திருகோணமலை - மட்டக்களப்பு தமிழ் ஆயர்களுடன் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் சிறப்பு அதிதிகள்**

புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில் செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்னும் கருப்பொருளில் நடைபெறும் மேற்படி மகாநாடு நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் , நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் , நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் 3 பிரிவுகளில் நடைபெறும் என யாழ் . மறை மாவட்டக் குருமுதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

செப்டெம்பர் 29ஆம் திகதி வியாழக்கிழமை முதல்நாள் நிகழ்விற்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவல் ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வார். அன்றைய தினம் நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் என்ற முதற் கருப்பொருள் அலசப்படும். செப்டெம்பர் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்விற்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி பொன்னையா யோசப் ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வார். அன்றைய தினம் நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் என்ற இரண்டாம் கருப்பொருள் அலசப்படும். அன்றைய தினம மாலை நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் என்ற மூன்றாம் கருப்பொருளும் விவாதிக்கப்படும். ஒக்ரோபர் முதலாம் திகதி சனிக்கிழமை மூன்றாம் நாள் நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வார். காலை 8.30 மணிமுதல் மாலை 5மணி வரை நடைபெறும் முதல் இரண்டு நாள் நிகழ்வுகளின் போது மகாநாட்டு ஆயத்த காலங்களில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள்,கருத்துப்பகிர்வுகள் மற்றும் கேள்விக் கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட விடயங்கள் அடங்கி தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் மன்றில் படிக்கப்பட்டு விடயங்கள் அலசப்படும்.

**எதிர்வரும் 5 ஆண்டுகளில் முன்னெடுக்க வேண்டிய முதன்மைப்பணிகள்**

காலை 8.30 மணிமுதல் மாலை ஒரு மணி வரை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வுகளின் போது இந்த நிலைப்பாட்டு ஏடுகளின் அடிப்படையில் யாழ். மறைமாவட்டத்தின் நிலை எவ்வாறுள்ளது என்பதும் இந்த தீர்மானங்களின் அடிப்படையில் எதிர்வரும் 5 ஆண்டுகளில் யாழ். மறைமாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய முதன்மைப்பணிகள் என்ன என்பதும் தீர்மானித்து முடிவு எடுக்கப்படும் என்றார். இது தான் இந்த மகாநாட்டின் முக்கியமான பணியாகும்.



இந்த நிலைப்பாட்டை அறியவே இந்த மகாநாடு கூட்டப்பட்டது.

அடுத்த 5 ஆண்டுகளில் யாழ். மறைமாவட்டம் எந்தப்பாதையில் பயணிக்க வேண்டும ,எந்தப்பணிகளை மறை மாவட்டத்தில் முன்னுரிமைப்படுத்த வேண் டும் என்பன எல்லாம் இங்கு முக்கியமாக முடிவு எடுக்கப்படும.

**மகாநாட்டிற்காக இதுவரை நடைபெற்ற விடயங்கள்**

முதலில் யாழ். மறைமாவட்டக் குருக்கள் அனைவருக்குமான மகாநாட்டு விளக்கக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதற்கு வளவாளர்களாக களனி பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திருவாளர்கள் சேளி மற்றும் அன்ரன் மீமண ஆகியோர் கலந்து கொண்டு மகாநாடு நடத்தப்பட வேண்டிய முறைகள் மற்றும் விளக்கங்களைத் தந்தனர். அடுத்து துறவிகளுக்கான மகாநாட்டு விளக்கக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் இருபாலாருமாக ஏறக்குறைய 150 பேர் கலந்து கொண்டனர். அடுத்து யாழ். மறைமாவட்ட பொதுநிலையினருக்கான கூட்டம் நடத்தப்பட்டது. இதில் யாழ்.மறைமாவட்டத்தின் மறைக்கோட்டங்களான யாழ்., பருத்தித்துறை, இளவாலை, கிளிமுல்லை , தீவகம் ஆகிய 5 மறைக்கோட்டங்களில் இருந்தும் 200இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். வசதி கருதி தீவக மறைக்கோட்டத்தினர் யாழ். மறைக்கோட்டத்துடன் இணைந்து இக்கூட்டத்தில் பங்குபற்றினர். குருக்கள் துறவியர்களும் இணைந்து கொண்ட இக்கருத்தமர்விலேதான் இம் மகாநாட்டிற்கான ஆய்வு பொருளான மூன்று எண்ணக்கருக்களும் தெரிவு செய்யப்பட்டது. மேலும் இக்கூட்டத்தில் இம் மகாநாட்டை நெறிப்படுத்த தேவையான வளவாளர்கள் 6 அங்கத்தவர் கொண்ட குழுக்களாக 5 மறைக்கோட்டங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். யாழ்.மற்றும் தீவக மறைக கோட்டங்களில் இருந்து 3 குழுக்களுமபருத்தித்துறை மறைக்கோடடத்தில் இருந்து 2 குழுககளும இளவாலை மறைக் கோட்டத்தில் இருந்து 2 குழுக்களும் கிளிமுல்லை மறைக கோட்டத்தில் இருந்து 3 குழுக்களுமாகத் தலா 6 அங்கத்தவர்கள் கொண்ட 10 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் உரிய பயிற்சியுடன் மகாநாட்டின் 3 முக்கிய கருப்பொருளில் பேசவும் மகா நாட்டிற்கு இறைமக்களைத் தயார் படுத்தவும் தர்க் கப்பிரசங்கப் பாணியில் விடயங்களை விளக்கவும் பயிற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டனர். பங்கு மட்டத்தில் வளர்ந்தோர் - இளையோர் - சிறுவர் என மூன்று குழுக்களாக கேள்விக் கொத்து மூலமும் கருததுக்கள் பெறப்பட்டன.

**விளிம்புகளில் இருப்போரைச் சந்தித்து திரும்பவும கடவுளின் குடும்பத்திற்கு அழைத்தல்**

யாழ் .ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பரகாசம் ஆண்டகை மேய்ப்புப்பணி மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்தபோது திருச்சபையின் அங்கத்தவர்கள் தமது இருக்கைகளில் இருந்து வெளியே வந்து திருச்சபையின் விளிம்புகளில் இருப்போரைச் சந்தித்து திரும்பவும் அவர்களைக் கடவுளின் குடும்பத்திற்கு அழைத்துவரச் செயலாற்றக் கூடிய அர்ப்பணம்மிக்க மறைபணி நமக்குத் தேவை எனத் தெரிவித்த விடயம் இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் கவனிக்கப்பட்டு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் 24 அருட்சகோதரர்கள் 6 பேர் கொண்ட 4 குழுக்களாக யாழ். மறைமாவட்டத்தின் 54 பங்குகளிலும் உள்ள குடும்பங்களைச் சந்தித்தது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். சில பெரிய பங்குகளில் உப பங்குகளையும் அவர் கள் தரிசித்தனர். மூன்று நாள் சிறப்புப்பயிற்சி பெற்ற இந்த அருட்சகோதரர்கள் பதாகைகள் , படங்கள் ,சுவரொட்டிகள் என்பவற்றைப் பங்கு வீடுகளுக்கு எடுத்துச் சென்றதுடன் வீட்டு வாசலிலும் ஒட்டினார்கள். கோவி லுக்கு வராதவர்களையும் விசுவாசத்தில் உறுதியற்ற வர்களாக விளிம்பில் இருந்தோரையும் சந்தித்துத் திடப்படுத்தி அழைத்து வருவதே இவர்கள் நோக்கமாக இருந்தது.

**எல்லோரையும் தேடிச் சென்று காப்பாற்றுங்கள் - யாழ். ஆயர் குருக்களுக்கு அழைப்பு**

யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கு எழுதியுள்ள சுற்றுமடலில் எல்லோரையும் தேடிச்சென்று காப்பாற்றுங்கள். இதுவே இந்த நேரத்தின் சவாலாகும். இக்கடமையைச் செய்ய முன்வாருங்கள் என குருக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

யாழ். மறைமாவட்டத்தில் நடத்தப்படுகின்ற இந்த மேய்ப்புப்பணி மகாநாடு ஆயரின் வேண்டுகோளில் குரு முதல்வரின் செயல்வடிவில் குருக்களின் கடின உழைப்பில் துறவியரின் ஒத்துழைப்பில் பொதுநிலையினரின் கூட்டுழைப்பில் ஒட்டுமொத்தமாக அனைவரின் அயராத முயற்சியில் நடைபெற்று நிறைவாகின்ற ஒரு சிறப்பு நிகழ்வாகும். யாழ்.மறைமாவட்டத்தின் வளர்ச்சிப்பாதையில் இது ஒரு மைல்கல்லாகும். இதற்கு எண்ணக்கரு கொடுத்து செயற்படுத்தி முடித்த இறைவனுக்கு நன்றி சொல்வோம். யாழ். ஆயர் தமது பணிப் பொறுப்பை ஏற்ற கையோடு அழைப்பு விடுத்துள்ள இந்த மேய்ப்புப்பணி மகாநாடானது அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டங்களையும் தீர்மானங்களையும் வகுத்து யாழ்.மறைமாவட்டத்தில் புதுமையையும் புனிதத்தையும் புகட்டி ஒரு புதிய பாதையில் இட்டுச்செல்ல இறை வரம் வேண்டுவோம்.

யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ்.மறைமாவட்டத்தை இறை திட்டப்படி சிறப்புற வழிநடத்த இறை ஆசிரும் இறை வரங்களும் கிடைக்க செபிப்போம்.



**யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டின் இலச்சினை**

யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டின் இலச்சினை இதனையே விளக்கி நிற்கின்றது. தூய ஆவியின் வழிநடத்தலில் இறை வார்த்தையின் ஒளியில் நற்கருணை ஆண்டவரின் அருளில் யாழ். மறை மாவட்டத்தைப் புதுப்பிப் போம் என்பதே இந்த மகா நாட்டு இலச்சினையின் விளக்கமாகும். தூய ஆவி யின் துணையுடன் நம்பிக்கையுடன் இருப்போம்.

இரக்கம் நிறைந்த இறைவன் புதுமை களையும் மாற்றங்களையும் கொணர்ந்து யாழ். மறை மாவட்டத்திற்கு ஒரு புதிய முகம் கொடுப்பாராக.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் -
யாழ். பல்கலைக் கழகம்




## கருத்தரங்கம்

அரங்க செயற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில், யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இன்று 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தமிழகப் பேராசிரியர்கள் பங்குகொள்ளும் நாடகமும் அரங்கியலும் துறை சார்ந்த கருத்தரங்கம் ஒன்று நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் தமிழகத்தின் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.இராமசாமி தமிழக அரங்கப்போக்குகள் (பண்டைய காலம் உட்பட) தொடர்பாகவும், புதுடில்லி பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ்.ரவீந்திரன், தமிழக நவீன நாடகப் போக்குகள் தொடர்பாகவும் உரையாற்றவுள்ளார்கள். எனவே நாடகமும் அரங்கியலும் துறை சார்ந்த உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட ஆர்வலர்களும் பங்குகொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களது உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## கனேடியத் தூதுவர் அரச அதிபர் சந்திப்பு



யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தினை மேற்கொண்ட கனேடிய நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான தூதுவர் ஷெல்லி வைட்டிங்கிக்கும் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகனுக்குமிடையிலான சந்திப்பு நடந்த 22 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (இ-9)

## வருடாந்த விளையாட்டுப்போட்டி

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும். கந்தமுருகேசனார் சனசமூக நிலையத் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக புலோலி அபிவிருத்திச் சங்கத் தலைவர் மா. இராஜேஸ்காந்தன், செயலாளர் த. பாலகிட்டிணபிள்ளை, ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம், புலோலி தென்மேற்கு ஜே/411 கிராம உத்தியோகத்தர் திருமதி விமல்சினி நிமல்ராஜ், பொருளாதார உத்தியோகத்தர் திருமதி சுயாந்தினி சேகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-7)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 110.75 சூரிசெவ் 7இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: civil Eng. உதவி பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: சைவ போசனம் மிக முக்கியம் NOT PR
தொ.இ: B/5120

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா: 20 செவ் 4இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HND A அரச
தொ.இ: B/5122

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 20.25
உயரம்: 176cm
தகைமை/தொழில்: விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் அரச
தொ.இ: B/5123

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 16.75
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L மேற்பார்வையாளர் தனியார்
தொ.இ: B/5128

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 51.5 செவ் 2இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA(Hons)Accontant (UK student visa)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/2087

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 67
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA Special Diploma Education ஆசிரியர்
தொ.இ: G/2088

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 14
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L (தனியார் தாதிய உத்தியோகத்தர்)
தொ.இ: G/2144

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 43.25 செவ் 1இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சுய தொழில், அரச தொழில் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/2109

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் ஊடாக குழாய் மூலம் குடிநீர் விநியோகத் திட்டம்

## ஆனந்தபுரம்,இரணைப்பாலை,சிவநகர் கிராமங்களுக்கு மிக விரைவில் ஆரம்பம்

நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் கீழ் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதி மேம்பாட்டுத்திட்டத்தினால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள ஆனந்தபுரம், இரணைப்பாலை, சிவநகர் ஆகிய கிராமங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கான உதவித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு முதற் கட்ட கொடுப்பனவாக ஒரு குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

மலசலகூடத்திற்கான மொத்தப் பெறுமதி 35 ஆயிரம் ஆகும். இரண்டாம் கட்ட மாக 12 ஆயிரம் ரூபாவும் இறுதிக் கட்டமாக 8ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட உள் ளன.

இதற்கமைய ஆனந்தபுரத்தில் 19 குடும்பங்களும் இரணைப்பாலையில் 76 குடும்பங்களும் சிவநகரில் 32 குடும்பங்களும் மலசலகூடம் அமைப்பதற்கான உதவித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து இக்கிராமங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக குழாய் மூலமான நீர் விநியோகத் திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக இம் மூன்று கிராமங்களை உள்ளடக்கி நீர் பாவனையாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் நீர் விநியோக திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இந் நீர் பாவனையாளர் சங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (2-5)

# ஆட்டோ உரிமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒக்.2இல்

வடக்கு மாகாணத்தில் ஆட்டோ போக்குவரத்தை சீர்செய்யும் பொருட்டும் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும் விசேட கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண மீன் பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி வர்த்தக வாணிபம் வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சரால் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் கச்சேரி ஜெய்க்கா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள், கிளைச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆட்டோ உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஏனைய 4 மாவட்டங்களுக்குமான கூட்டம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதுடன் அடுத்து கிளிநொச்சி மாவட்ட ஆட்டோ உரிமையாளர்களுக்கான கூட்டம் நடத்துவதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-5)

# முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம் மகா வித்தியாலயமாக தரமுயர்வு

(விசுவமடு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கோட்டத்திற்குட்பட்ட மு/பாரதி வித்தியாலயமானது கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுமதிக்கமைவாக கடந்த 29 ஆம் திகதியிலிருந்து மு/பாரதி மகா வித்தியாலயம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை வள்ளுவர்புரம் அ.த.க. பாடசாலை என இயங்கி வந்தது.

பின்னர் பாரதி வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டு இயங்கி வந்த இப்பாடசாலை தற்போது பாரதி மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (2-5-295)



கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உள்ளீடுகள் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனினால் வழங்கி வைக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர் )

# மோட்டார் சைக்கிள் பள்ளத்தினுள் வீழ்ந்ததில் விபத்துக்குள்ளானது

## இரு யுவதிகள் சுயநினைவிழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

(தண்ணீரூற்று)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி 3 அடிப் பள்ளத்தில் வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு யுவதிகளும் காயமடைந்து சுய நினைவிழந்த நிலையில் மாஞ்சோலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இவ் விபத்து நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்து தொடர்பாக தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாங்குளம் நெடுஞ்சாலையின் 3 ஆம் கட்டை பாலத்திற்கும் சிலாவத்தை சந்திக்கும் இடையில் உள்ள வளைவில் அதிவேகத்துடன் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளானது வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகி 3 அடி பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளம் யுவதிகளும் படுகாயமடைந்து சுய நினைவிழந்த நிலையில் காணப்பட்டனர்.

இதனையடுத்து அவ் வழியாகப் பயணித்த பொலிஸ் வாகனத்தில் பொது மக்களின் உதவியுடன் மாஞ்சோலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-5-292)

# இலவச மருத்துவ முகாம் இன்று

(பனிக்கன்குளம்)

பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தின் அனுசரணையில் இலவச வைத்திய முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

கற்றாக் சத்திர சிகிச்சை உட்பட கண் சிகிச்சை பல் பரிசோதனை, பற்சிகிச்சை, பொது வைத்திய சேவை என்பன இடம்பெறவுள்ளன.

எனவே பொதுமக்களை பங்குபற்றி பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர். (2-5-281)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்தி குழுக் கூட்டம் நாளை

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலக மட்டத்திலான அபிவிருத்தி குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் இ.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக மட்டத்திலான அபிவிருத்திகுழுக்கூட்டம்இணைத் தலைவர்களான மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராஜா, கே.கே.மஸ்தான் தவிர்க்க முடியாத காரணங்களால் அன்றைய தினம் சமுகமளிக்க முடியாதுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ள வடமாகாண சபை உறுப்பினரும் பிரதி அவைத் தலைவருமான அன்ரனி ஜெகநாதன் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் போது மாந்தை கிழக்கு பிரதேச செயலக மட்டத்திலான கல்வி, சுகாதாரம், விவசாயம், வீட்டுத் திட்டம், பாதுகாப்பு, குடிநீர் உட்பட்ட பல்வேறு துறை சார்ந்த குறைபாடுகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான கருத்துக்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இதன்போது வன்னிமாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் , துறை சார் திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள், பொலிஸ் மற்றும் இராணுவ பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் உள்ள வெலிஓயா பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி குழுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு வெலிஓயா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)

# பிரதேசத்தின் அபி.முன்னெடுக்கப்படும் போது சூழல் தொடர்பான அவதானம் அவசியம்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர்

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் போது அப்பகுதியின் சூழல் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

மாகாணத்திற்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன் கொடை திட்டத்தின் கீழ் பயனாளிகளிற்கான உள்ளீடு விநியோக நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் குறித்த நிகழ்வு கிளிநொச்சி பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 713 விவசாயிகளிற்கு விவசாய உபகரணங்கள் மற்றும்விதை உற்பத்தி பொருட்கள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண விவசாய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 120 மில்லியன் எனவும். அதில் 5 மாவட்டங்களிற்கும் பகிர்ந்தளித்ததில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 49.46 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. விவசாய உள்ளீடுகள் வழங்குவதற்காக இன்றைய தினம் மாத்திரம் 713 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிற்கான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

10.6 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் விதைகள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் பூநகரி பிரதேசத்தில் உப்பளம் அமைக்கப்படுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் விவசாயிகள் மற்றும் கடல் தொழிலாளர்களின் எதிர்ப்பினால் தற்போது ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (2-5-15)

# மழலைகள் விளையாட்டு விழா

(முள்ளியவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் 2016 மழலைகள் விளையாட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாங்குளம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர் .இவ் விளையாட்டு விழாவில் இசையும் அசைவும்,பழம் வைத்தலும் எடுத்தலும், பந்து நகர்த்தல், குளத்தில் மீன் பிடித்தல், கோபுரம் அமைத்தல்,வீடு அமைத்தல் ,சிரட்டையில் நடத்தல்,வட்டத்தில் நீர் நிரப்புதல்,வளையம் பரிமாறல், வளைய அஞ்சல், தடை தாண்டிப்பாய்தல்,கயிறு இழுத்தல், பலூன் பாதுகாத்தல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனும் சிறப்பு விருந்தினராக அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-5-302)

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்
மேக மேனியனும் வெல்லாமல் செல்லுக பாவம்
பொய்மொழி கோபம்... – வில்லிபாரதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பேரணியின் எழுச்சி கண்டு நெகிழாதார் யாருமில்லை

எம் பாசத்துக்குரிய தமிழ் மக்களே! நேற்றைய தினம் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணி கண்டு இதயம் நெகிழ்ந்து போயுள்ளது.

வரலாறு காணாத எழுச்சியைக் கண்டு உள்ளம் நெகிழாதார் எவரும் இருக்க முடியாது.

அந்தளவுக்கு ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்வு பூர்வமாக பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியின் எழுச்சியை மனித மொழிகளில் எடுத்தியம்புவது முடியாத காரியம். இது ஆத்மார்த்தமாக உணரப்பட வேண்டியது.

எங்கள் உரிமைக்காக நாம் குரல் கொடுக்க தயங்க மாட்டோம் என்பதை ஒன்று திரண்ட தமிழ் மக்கள் இந்த நாட்டிற்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்தியம்பியுள்ளனர்.

வட மாகாணம் முழுவதிலும் வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள், சந்தைகள் பூட்டப்பட்டு பேரணிக்கு வழங்கப்பட்ட ஆதரவு கண்டு ஆனந்தக் கண்ணீர் வடிப்பதைவிட வேறு எதைத் தான் செய்ய முடியும்!

ஒரு பெரும் எழுச்சிப் பேரணி கண்ட மனத்திருப்தியில் எங்கள் இனம் வாழும்; எங்கள் இனம் தழைக்கும்; எம் உயிரிலும் மேலான தமிழ்மொழி என்றும் ஒலிக்கும் என்ற அசையாத நம்பிக்கை ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை தமிழ் மக்களின் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி கண்டு யாரும் கவலை கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இந்த எழுச்சிப் பேரணியில் தமிழ் வாழும்; தமிழினம் வாழும் ஆகையால் இது தமிழ் மக்களின் உரிமையை, பூர்வீக தாயகத்தை எமது பண்பாட்டு விழுமியங்களை வலியுறுத்துவதற்கானது.

இந்தப் பேரணி யாருக்கும் எதிரானதல்ல. இது தமிழ் மக்கள் தங்கள் உரிமையை வலியுறுத்துவதற்கானது.

எனவே தென்பகுதி ஊடகங்களே! ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களே! தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாமே! என்ற நினைப்புடன் இருக்கக்கூடிய தமிழ் அரசியல் தரப்புகளே! நீங்கள் யாரும் இந்தப் பேரணியை மாற்றுக்கண் கொண்டு பார்க்காதீர்கள்.

இந்தப் பேரணி இலங்கை மண்ணில் சாந்தி சமாதானம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கானது.

அழகிய இலங்கைத் தீவில் பேரினவாதமே தொடர்ந்தும் பேசப்படுமாக இருந்தால் அது அழிவுக்கே வழிவகுக்கும்.

அழிவு என்பது தமிழ் மக்களுக்கானது என்று மட்டும் யாரும் நினைத்துவிடாதீர்கள். தர்மமே வெல்லும் என்பதுதான் இந்த உலகில் உள்ள அத்தனை சமயங்களினதும் அடிப்படைத் தத்துவம்.

போரில் தோற்றவனைவிட வென்றவனுக்கே அதிக துன்பம் என்று கூறியவர் கௌதம புத்தபிரான். ஆகையால் துன்பமும் அழிவும் என்றும் ஒரு தரப்புக்கே இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள். ஆகையால்தான் சொல்லுகிறோம்; தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இலங்கைத் தீவை ஆக்கத்தின் வழிக்கு இட்டுச் செல்வதாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அதனை வலியுறுத்துவது தமிழ் மக்களின் கடமை.

அந்தக் கடமையை தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணியாக உலகுக்கும் இந்த நாட்டின் ஆட்சிப் பீடத்தினருக்கும் எடுத்துக் காட்டியுள்ளனர். இதனை அகிம்சை வழியில் நடந்த நீதியான போராட்டமாக கருதி தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அரசும் சர்வதேச சமூகமும் நிறை வேற்றி வைக்க வேண்டும். இதுவே இந்தப் பேரணியின் நோக்காகும்.

# நான்கு பிரதான அம்சங்களுடன் தயாராகும் உள்ளக பொறிமுறை

ஜெனிவா மனிதவுரிமை பேரவையில் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் 34ஆவது கூட்டத் தொடரை எதிர்கொள்ளும் வகையில் அரசாங்கம் திட்டங்களை வகுத்து வருகின்றது.

குறிப்பாக அடுத்த வருடம் பெப்ரவரி மாதமாகும் போது நான்கு பிரதான அம்சங்களைக்கொண்ட உள்ளக விசாரணை பொறிமுறையின் வடிவத்தை தயாரித்து விடுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அதாவது காணாமற்போனோர் குறித்த அலுவலகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு, நட்டஈடு வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய 4 அம்சங்களை பிரதானமாகக்கொண்டே அரசாங்கம் உள்ளக விசாரணை பொறிமுறையை தயாரித்து வருகின்றது.

குறிப்பாக அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் உள்ளக விசாரணை பொறிமுறையின் இறுதி வடிவம் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் அதன் பின்னர் சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளக விசாரணை பொறிமுறை தொடர்பான வரைபு ஜெனிவா மனிதவுரிமை பேரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை விடயத்தில் மக்களின் கருத்தறியும் செயற்பாடு தொடர்பான அறிக்கை விரைவில் அரசாங்கத்துக்கு வழங்கப்படவுள்ள நிலையில் ஒக்டோபர் மாதம் நடுப்பகுதியில் விசாரணை பொறிமுறையின் இறுதி வடிவத்தை தயாரிக்கும் பணிகளை அரசாங்கம் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் விசாரணை பொறிமுறையானது நான்கு அம்சங்களை கொண்டதாக அமையவுள்ள நிலையில் அதன் முதலாவது கட்டமாக தற்போது காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.

அதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனையடுத்து விரைவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்படவுள்ளது. தென்னாபிரிக்காவில் செயற்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைப் போன்றதான ஒரு ஆணைக்குழுவே இலங்கையின் தன்மைகளுக்கு ஏற்ப நிறுவப்படுமென அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அடுத்ததாக மனிதவுரிமை மீறல்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் செயற்பாடும் இடம்பெறவுள்ளது. மேலும் மீள் நிகழாமை தொடர்பான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இறுதியாக புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதனூடாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு மட்டங்களில் விசாரணை பொறிமுறை முன்னெடுக்கப்படவுள்ளது. எனினும் இந்த செயற்பாட்டின் இறுதிக் கட்டத்திலேயே விசாரணை பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறுவார்களா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாகவே பொறுப்புக்கூறல் பொறிமுறை முன்னெடுக்கப்படவுள்ளது. (இ-7-10)

# ஜேர்மனியிலிருந்து தருவிக்கப்பட்ட துப்பாக்கி மூலமே லசந்த கொலை

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க எவ்வாறான முறையில் கொலை செய்யப்பட்டார் என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சத்தம் வெளியிடாத துப்பாக்கி மூலம் கொலை செய்யப்பட்டாரா அல்லது ஸ்பிரிங் ஒன்றினால் வெளியாகும் தோட்டாவை கொண்ட சத்தம் வெளியிடப்படாத துப்பாக்கியால் சுடப்பட்டாரா என்பது தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த கொலை தொடர்பில்காணப்பட்ட இருவேறு மருத்துவ கருத்து தொடர்பில் உண்மை தகவலை பெற்றுக் கொள்வதற்காக லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் நாளை மறுதினம் தோண்டி எடுக்கப்படவுள்ளது.

பின்னர் கடந்த 3ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதி வரை திஸ்ஸ மயானத்தில் லசந்தவின் உடல் தகனம் செய்யப்பட்டிருந்த இடத்திற்கு பொலிஸாரின் ஊடாக விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

கடந்த அரசாங்கத்தின் போது ஸ்பிரிங் தொழில்நுட்பத்திலான 8 துப்பாக்கிகள் ஜேர்மனில் இருந்து இந்த நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவல் தொடர்பில் குற்றப் புலனாய்வு பொலிஸ் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த துப்பாக்கிகள் இந்த பாதுகாப்பு பிரிவினால் பயன்படுத்தப்படுவதென குற்ற விசாரணை பிரிவினர் இந்த நாட்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை லசந்த கொலைக்கு பயன்படுத்தப்பட்ட அதே துப்பாக்கியா ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளதென குற்ற விசாரணை பிரிவினர் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டதன் பின்னர் கடந்த 7 வருடமாக மறைக்கப்பட்டிருந்த மர்ம சம்பவத்திற்கான விசாரணையில் புதிய திருப்பம் ஏற்படும் என குற்ற விசாரணை பிரிவு தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7-10)

# டலஸுக்கு ஆங்கிலம் தெரியாது; அமைச்சர் மங்கள குற்றச்சாட்டு

டலஸ் அழகப் பெருமவுக்கு ஆங்கிலம் விளங்காமை காரணமாகவே பான் கீ மூன் ஆற்றிய உரை சர்வதேச சதி எனக் கூறியுள்ளதாகவும், தான் நாடு திரும்பியவுடன் அந்த உரையின் மொழிபெயர்ப்பை அவருக்கு வழங்கவுள்ளதாகவும் அமெரிக்காவில் வைத்து அமைச்சர் தெரிவித்தார்.

ஐ.நா செயலாளரின் உரையினால் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு கருத்துக் கூறுபவர்களுக்கு தேங்காய் திருடிய கூட்டம் என்றே நான் கூறுகின்றேன். இவர்களுக்கு அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளும் சர்வதேச சதியாகவே தென்படுகின்றது. ஐ.நா. செயலாளர் தனது இறுதி உரையின் போது இலங்கை பற்றிக் கூறிய கருத்தைக் கேட்டு, இலங்கைப் பிரஜையாக இருந்து சந்தோசப்படுவதை விடுத்து, டளஸ் அழகப்பெரும இவ்வாறு கூறியுள்ளதையிட்டு நான் ஆச்சரியப்படுகின்றேன் எனவும் மங்கள சமரவீர மேலும்தெரிவித்தார். (இ-7-10)

# சாரணர் விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சாரணர் சங்கத்தின் சாரணதிரனணியும் குருளைச் சாரணர் விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொள்வார். (இ-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் குமுழமுனை, கரியாலைபடுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், 651ஆம் பிரிவு இராணுவ முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் எருவிட்டான், அச்சங்குளம், அருவிக்கண்டல், அறுகுக் குன்று நொச்சிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# இவ்வாண்டில் தேர்தலை நடத்த முடியாது-மகிந்த

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலை இந்த ஆண்டு நடத்துவதற்கு முடியாதென்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தாலும், அதை வர்த்தமானியில் வெளியிடப்படுவது போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அத்துடன் 2016ம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் தமது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிந்து கொள்வதற்கான காலம் இம்மாதம் 28ம் திகதியுடன் நிறைவடைவதாக பஃரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (இ)

# யாழ். வீரன் ஞானரூபன் சிறப்பாட்டம் சமநிலைப்படுத்தியது இலங்கை அணி



இலங்கை தேசிய காற்பந்து அணி எதிர்வரும் நாட்களில் கம்போடியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடு களுக்கு சுற்றுப் ப்யணம் மேற்கொண்டு விளையாட உள்ளது. எனவே, அதற்கு முன்னர் இலங்கையில் உள்ள காற்பந்து கழகங்களில் விளையாடும் வெளிநாட்டு வீரர்கள் 11 பேர் கொண்ட அணியுடன் இலங்கை தேசிய அணி விளையாடியது. இந் தப் போட்டி பொலிஸ் பார்க் மைதானத்தில் கடந்த புதன் கிழமை மாலை இடம்பெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் முற்பாதியில் இரு அணிகளுக்கும் கோல் போடும் சந்தர்ப்பங்கள் அமைந்த போதும் அவற்றை எந்த ஒரு வீரரும் பயன்படுத்த வில்லை. இரண்டாவது பாதியில் இலங்கை அணிக்கு கிடைத்த இலவச உதையினை சர்வான் ஜாஹர் கோலாக மாற்ற இலங்கை அணி முன்னிலை பெற்றது. வெளிநாட்டவர் அணி வீரர் ஜிபோலா தனக்கு கிடைத்த வாய்ப்பினை கோலாக மாற்ற போட்டி 01:01 என சமநிலையானது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞானரூபன் தனக்கு கிடைத்த வாய்ப்பினை அட்டகாசமான கோலாக மாற்ற இலங்கை அணி முன்னிலை பெற்றது. ஆட்டத்தை வேகப் படுத்திய வெளிநாட்டவர் அணிக்கு கிடைத்த வாய்ப்பை ஐஸாக் அபார கோலாக மாற்ற போட்டி 02:02 என சம நிலையானது.

அதன் பின்னர் இரு அணிகளும் வெற்றியை தீர்மானிக்கும் கோல் போடும் முனைப்புடன் எதிரணியின் கோல் பரப்புகளை ஊடுருவ மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பின்கள வீரர்களினால் தகர்க்கப்பட்டன. இறுதியில் போட்டி 02:02 என சமநிலையானது.

போட்டியின் ஆட்டநாயகனாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய எம். யாழ். வீரன் ஞானரூபன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## ஆர்.பி.சி.மிலான், ஆர். கெலி சதம்; மொனராகல, புனித ஜோசப் வெற்றி



இந்த ஆண்டுக்கான முரளி கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் முதல் நாளன்று இருவர் சதம் அடித்துள்ளனர்.

இதுகாலவரை நடந்த போட்டிகளில் அநுராதபுரம் மத்தியைச் சேர்ந்த கே.வீரங்க என்ற துடுப்பாட்ட வீரர் மாத்திரமே 2013இல் சதமடித்திருந்தார். ஆரம்ப போட்டிகளில் சீனிகம கூட்டுப் பாடசாலை அணியைச் சேர்ந்த ஆர். பி.சி மிலான், சென்ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த ஆர். கெலி ஆகியோர் சதமடித்து அசத்தினர்.

முதல் நாள் போட்டிகளில் மொனராகல கூட்டுப் பாடசாலைகள் அணி ஸாகிரா அணியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தியிருந்தது. முதற் தடவையாக இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய புனித ஜோசப் கல்லூரி அணி யாழ். மத்திய கல்லூரி அணியை 32 ஓட்டங்களால் வென்றிருந்தது. குமார் சங்கக்கார போட்டிகள் நடக்கும் எல்லா மைதானத்திற்கும் சமுகமளித்திருந்தார்.

பெண்களுக்கான மோதலில் சீனிகம பெண்கள் அணி மாத்தளை அணியிடம் 2 விக்கெட்டுகளால் கடைசி [illegible]ரில் தோற்றுள்ளது.


## கிளிநொச்சிக்கு மூன்றாமிடம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இவ்வருடம் நடத்துகின்ற 28 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் தேசிய மட்ட கடற்கரை கரப்பந்தாட்ட (Beach volley ball) போட்டியிலே கிளிநொச்சி மாவட்டம் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவில் இருந்து பங்குபற்றிய இரண்டு வீராங்கனைகளுமே மூன்றாமிடத்தைப் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். (க-28)

## 2016 ஆம் ஆண்டுக்கான முரளி கிண்ண கிரிக்கெட்



2016 ஆம் ஆண்டுக்கான முரளி கிண்ணம் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

போட்டி 23.09.2016 காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் வீரருமான மஹேல ஜெயவர்த்தன விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

முதலாவது போட்டியானது நாலந்தா கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தினைத் தெரிவு செய்து குறித்த தொடர் 20 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இரத்தினபுரி சென்ட் அலோசியஸ் கல்லூரி அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களை பெற்றதனால் கொழும்பு நாலந்தா கல்லூரி அணி 73 ஓட்டங்களினால் வெற்றியை தனதாக்கி கொண்டது.

தொடர்ந்து மாலை இடம்பெற்ற போட்டியில் களுத்துறை மகாவித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு ஒருங்கிணைந்த அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது. 18.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

களுத்துறை மகா வித்தியாலய அணி 24 ஓட்டங்களினால் வெற்றியை தனதாக்கி கொண்டது. (க-312)

## 28 ஆவது தேசிய விளையாட்டு விழா ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் யாழ். மாவட்ட அணி சம்பியன்



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினதும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினுடையதுமான 28 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட அணி தேசிய ரீதியில் வெற்றி பெற்றுள்ளது.

இவ்விளையாட்டு விழா பதுளை வின்சன் டயஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட விளையாட்டு அணியை எதிர்த்து மொனராகலை அணி களமிறங்கியது. பெரும் திரளான ரசிகர் கூட்டத்தின் மத்தியில் உத்வேகத்துடன் விளையாடிப் ஈடுபட்டனர்.

இறுதியில் யாழ். மாவட்ட அணி 43:32 என்ற அடிப்படையில் மொனராகலை அணியை தோற்கடித்து சம்பியனானது. (க-60)

## சென். லூட்ஸை வீழ்த்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி



பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் (21.09. 2016) மின்னொளியில் நடைபெற்ற முதலாவது சுப்பர் 8 போட்டியில் சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் மோதியது.

முதலாவது பாதியாட்டத்தில் நவஜீவன்ஸ் அணி கோல் வாய்ப்புக்களை தவறவிட்டது. முதல் பாதி நிறைவில் இரு அணிகளும் கோல் போடாத நிலையில் இரண்டாவது பாதியாட்டத்தின் 47 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் வெற்றி கோலை பதிவு செய்தார்.

சங்கர் இறுதி ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற ரீதியில் வெற்றியீட்டியது நவஜீவன்ஸ் அணி. ஆட்டநாயகனாக நவஜீவன் வீரர் பிரியா தெரிவு செய்யப்பட்டார். (க)

# அதிகாரத்தில் உள்ள தலைமைகளுக்கு "எழுக தமிழ்" விளிப்பான எச்சரிக்கை

## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் உரை



(யாழ்ப்பாணம்)

"எழுக தமிழ்" மக்கள் எழுச்சி சர்வதேசத்தையும் அரசையும் ஒரு சில தமிழ் தலைமைகளையும் அலையாக வந்து எச்சரித்துள்ளது என பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் "எழுக தமிழ்" மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டம் நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது.

முற்றவெளியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்லாயிரக்கணக்கான மக்களின் வருகை விளிப்பாக உள்ளீர்கள் என அதிகாரத்தில் உள்ளவர்களை எச்சரித்துள்ளது. 1961ஆம் ஆண்டு பல்கலை மாணவர்களாக இருந்த காலத்தில் எமது போராட்டத்தின் போது அலை யலையாக வந்த மக்கள் படை நினைவுக்கு வருகிறது.

எமக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காவிட்டால் மறுபடியும் நாங்கள் 61ஆம் ஆண்டு நிலைக்கு செல்வோம் என்பதற்கு சத்தியம் கூறி நிற்பது போல் இந்த பேரலை உள்ளது.

அரசியல் தலைவர்களுக்கு எச்சரிக்கையாக இப்பேரணி உள்ளது. அதாவது நாம் 60 வருடங்களாக கூறிவந்த சுயநிர்ணயங்களுடன் கூடிய சமஷ்டி அரசியலுக்கு அப்பால் எந்த தீர்வுக்கு போக்கூடாது என்பது மட்டுமல்ல தீர்வு நாளை வரும் என காலம் கடத்த முடியாது என்று எமது அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கிறது.

அடுத்ததாக நல்லிணக்கம் என கூறி சிங்கள பௌத்த தேசியவாதத்தை தமிழ் பிரதேசங்களில் திணிக்கிறீர்கள். அதை ஏற்க தயாரில்லை பெற்றுக்கொள்ளவும் தயாரில்லை என்பதை அரசுக்கு கூறிநிற்கிறது.

மேலும் பெரிய இனப்படுகொலை நடந்த நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டிருந்த சர்வதேசமே! இதற்கு நீ பதில் கூற வேண்டும். இழப்புக்கு காத்திரமான தீர்வு பெற்றுதர வேண்டிய கடப்பாடு உண்டு என சர்வதேசத்துக்கு கூறி நிற்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# தமிழர் உரிமை கிடைக்கப் பெறும்வரை தேசமெங்கும் "எழுக தமிழ்" எழுச்சி பெறும்

## நாம் தோற்றுப் போனவர்களல்ல என சுரேஷ் சூளுரை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் வரை தமிழர் தேசம் எங்கும் "எழுக தமிழ்" வீறுகொண்டெழும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் "எழுக தமிழ்" மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டம் நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது.

முற்றவெளியில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த மக்கள் எழுச்சி பேரணியை குழப்பு வதற்கு பல தரப்பினர் முயற்சி செய்தனர். அவை எல்லாவற்றை மீறி நாம் இப் பேரணியை வெற்றிகரமாக நடத்தி இருக்கிறோம். இப் பேரணியை கேலியாக பார்த்தவர்களுக்கு எவ்வாறான பேரணியை தமிழ் மக்கள் பேரவை நடத்தியுள்ளது என தற்போது தெரிந்திருக்கும்.

இந்த மக்கள் எழுச்சியில் நாம் கூறும் செய்தி இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், இன நல்லிணக்க குழுவினுடைய தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் சம்பந்தனுடைய காதுகளுக்கு கேட்க வேண்டும். தமிழ் மக்கள் என்ன கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

2006 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் தலைமையில் பொங்குதமிழ் நடத்தப்பட்டது. 2016ஆம் ஆண்டு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை எழுக தமிழை பிரகடனப்படுத்தியுள்ளது.

எனவே எப்போதும் தமிழ் மக்கள் தோற்றுப்போனவர்கள் அல்ல. தமிழ் மக்களுடைய உரிமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் நிலங்களை கபளிகரம் செய்ய முடியாது. தமிழரின் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் என்பவற்றை அழிக்கமுடியாது. இவைக்கெதிராக நாங்கள் இறுதிவரை போராடுவோம் என்பதை எடுத்துக்காட்டத்தான் ஆயிரக்கணக்கான மக்கள் இப் பேரணியில் ஒன்று கூடிவந்துள்ளார்கள்.

ஆகவே அமையப்போகும் அரசியல் சாசனம் என்பது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மக்களுடைய இறையாண்மை தமிழ் மக்களுடைய சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்ட ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பு முறையிலான அரசியல் சாசனமாக அமைய வேண்டும்.

எமது கோரிக்கைகளை ஐ.நா மனித உரிமை ஆணையகம்,ஐ.நா பொது சபை, புலம்பெயர் உறவுகள் அனைவருக்கும் கேட்க வேண்டும். இப்பேரணி ஒரு ஆரம்பம் மாத்திரமே. தொடர்ச்சியாக தமிழருடைய தேசங்கள் எங்கும் "எழுக தமிழ்" வீறுகொண்டெழும் அப்போது தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# எமக்கான அரசியல்தீர்வு மறுக்கப்பட்டால் மாற்றத்தின் சக்தியாக "எழுக தமிழ்" மாறும்

## எழுச்சிப் பேரணியில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)


தமிழ் தேசத்தின் எதிர்காலத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தியாக "எழுக தமிழ்" மக்கள் எழுச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் "எழுக தமிழ்" மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டம் நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது. யாழ்.முற்றவெளியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்களாகிய நாம் முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். இக் காலகட்டத்தின் முக்கியத்துவத்தை சரியாக விளங்கிக்கொள்ள வேணடும். 2, 3 மாதங்களில் எமது பேரை பயன்படுத்தி அரசியலமைப்பு கொண்டுவரப்படவுள்ளது.

இதற்கு காரணம், ஒரு கொடூர யுத்தத்தை நடத்தி பயங்கரவாதத்தை அழிப்பதாக கூறி ஒரு இனத்தை அழித்து அந்த இனத்துக்க உரிய தீர்வை கொடுப்போம் என உலகிற்கு வாக்குறுதி கொடுத்த நிலையில்தான் இன்று இரகசியமாக அரசியல் அமைப்பு தயாரிக்கப்படுகிறது.

ஏனைய நாடுகளில் அரசியல் அமைப்பு என்பது மக்களுடன் பேசி மக்களின் கருத்தை உள்வாங்கி அரசியலமைப்பு உருவாக்கப்படும் அத்துடன் நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். ஆனால் இன்று 65 வருடங்களுக்கு மேல் பல தியாகங்கள் செய்து இரத்



தம் சிந்தி அழிந்து போய் உள்ள மக்களுக்கு நீதி கொடுப்பதாக கூறி கொண்டுவரப்போகும் அரசியல் அமைப்பில் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படப்போகிறதென்பது கேள்விக் குறியாகவுள்ளது.

அப்படி இருக்க காரணம் எமது அபிலாசைகள் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளப்பட கூடியதாக இருந்தால் ஏன் இரகசியமாக மேற்கொள்ளவேண்டும்.

65 வருடங்களாக எமது அபிலாசைகள் பறறி கூறியுள்ளோம். ஆனால் அதற்கு மாறாக இன்று சிங்கள தலைவர்கள் ஒற்றையாட்சி தீர்வு வழங்கப்படும் என கூறி வருகிறார்கள்.


ஒரு கொடூரயுத்தம் நடத்தி இனத்தை அழித்து நீதி கேட்கும் இனத்தின் முதுகெலும்பை உடைத்து எம்மை அமைதியாக்கலாம் என நினைக்கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் இப்பேரணி ஊடாக மிகத்தெளிவான பதிலை இன்று கூறியுள்ளோம்.

அரசியல் அமைப்பில் எமது அபிலாசைகள் பூர்த்தி செய்யாவிட்டால் இப்பேரணி வளரும் தமிழ் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு இடத்துக்கும் செல்லும் என வெற்றிகரமாக தெரிவித்துள்ளோம். இப்பேரணி தமிழ் தேசத்தின் எதிர்காலத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தியாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் இந்த இனம் நீதி கேட்கவும் அபிலாசைகளை நிறைவேற்றவும் அரசியல் தலைவர்களை நம்பியிருக்காத இனம் என தனது பலத்தை காட்டி வெற்றி பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# மக்களுடைய பேராதரவுப் போராட்டம் நியாயமான வெற்றியைக் கொடுக்கும்

## எழுக தமிழ் பேரணியில் சித்தார்த்தன் எம்.பி பேச்சு



(யாழ்ப்பாணம்)

மக்களுடைய பேராதரவுடன் தொடரும் போராட்டம் நியாயமான வெற்றியை கொடுக்கும்.

அதுவே எமக்காக உயிர்தியாகம் செய்தவர்களுக்கு மிகப்பெரிய அஞ்சலியாக இருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் "எழுக தமிழ்" மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டம் நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது. அதில் முற்றவெளியில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்களின் சரித்திரத்தில் மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக இணைந்து தமது அடிப்படை உரிமைகளை என்றுமே விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதை மிக உரத்த குரலில் கூறியுள்ளார்கள்.

எவ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் ஒன்றாக மக்கள் கூடியிருக்கிறீர்கள் என்றால் நிச்சயமாக உங்களது குரல்கள் சர்வதேசத்துக்கும் அரசுக்கும் மிகத் தெளிவாகக் கேட்கும் .

எமது அடிப்படை நியாயபூர்மான உரிமைகளை வென்றெடுக்கும் வரை 60 வருடங்களாக சாத்வீகத்தில், ஆயுதத்தில் போராடி வந்த நாங்கள் மீண்டும் மக்களுடைய பேராதரவுடன் தொடரும் இப் போராட்டம் நியாயமான வெற்றியை கொடுக்கும்

அவ்வாறானதொரு வெற்றியை எடுப்பதன் மூலம் தான் ஆயிரக்கணக்கான தமது உயிர்களை தியாகம் செய்த அனைத்தியக்க போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் மிகப் பெரிய அஞ்சலியை செலுத்தியவர்களாக இருப்போம். எனவே அதற்காக தொடர்ந்து சென்று போராட்டங்களை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் UK 11 kg மேற்பட்ட பொதிகள் 550/= விடுமுறை நாட்களிலும் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம்பனி (Pvt) Ltd
271A, K.K.S. Road Jaffna. (C-5897)
0777554528/ 0212227835

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (C-5883)

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு
UK-550/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS (சி-5799)



**நீங்கள் தொழில் தேடுபவரா?**

முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L Diploma in Hotel Management
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course Up to 30%
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3615 798
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
SIKARAM ACADEMY
இல. 175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம். (C-5898)



**காணி விற்பனை**

கொட்டடி மீனாட்சி அம்மன் வீதியில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 076 5471 308 (6010)

**வேலையாட்கள் தேவை**

நெல்லியடியில் இயங்கும் பிரபல பற்சிகிச்சை நிலையத்துக்கு வேலையாட்கள் தேவை.
(அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :- 021 226 0000

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி, பலாலி வீதியில் 5 பரப்புக்காணி மொத்தமாகவும் துண்டுகளாகவும் விற்பனைக்குண்டு.
தலையாழி, கொக்குவிலில் 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 077 167 1174 077 728 6061

**கடை வாடகைக்கு**

சட்டநாதர் வீதியில் சகல தளபாட வசதிகளுடன் குளிரூட்டியும் பொருத்தப்பட்ட கடை அறை வாடகைக்கு உண்டு

தொடர்பு :- 077 220 8170


# இலட்சியத்தால்...

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட பொது அமைப்புகளின் ஆதரவுடன் "எழுக தமிழ்" மக்கள் எழுச்சி பேரணி வடகிழக்கு தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான பேராதரவுடன் நேற்றையதினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது.

இப் பேரணியை யாழ் நல்லூர் கந்த சுவாமி ஆலய முற்றத்தில் இருந்தும் யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய வளாகத்தில் இருந்தும் இரு அணிகளாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

நல்லூரில் இருந்து ஆரம்பித்த பேரணியில் மதகுருமார்கள், மக்கள் பிரதிநிதிகள், கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன் யாழ் பல்கலையில் ஆரம்பிக்கப்பட்ட பேரணியில் மத குருமார்கள், பல்கலை கழக பேராசிரியர்கள், மாணவர்கள் ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு பெரும் பேரணியாக சென்றனர்.

பேரணியின் இரு அணியினரும் கந்தர் மடச்சந்தியில் சந்தித்து ஒன்றாக தமது உரிமைக் கோசங்களை எழுப்பியவாறு யாழ் முற்ற வெளியை நோக்கி நடை பவனியாகச் சென்றார்கள். முற்பகல் 11.00 மணியளவில் யாழ் முற்ற வெளியை சென்றடைந்த பேரணியுடன் அங்கு திரண்டிருந்த மக்கள்தொகை அலை கடலாக காட்சியளித்தது.

அதனை தொடர்ந்து "எழுக தமிழ்" மக்கள் எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வின் ஆரம்பத்தில் போரினால்பாதிக்கப்பட்டு தனது அவயவங்களை இழந்த பொதுமகன் ஒருவர் எழுக சுடரை ஏற்றி வைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி நடைபெற்று தமிழ்த் தாய் வாழ்த்து இடம் பெற்றது.

நிகழ்வின் முக்கிய அம்சமாக "எழுக தமிழ்" பிரகடனத்தை தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான இருதய சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன் வெளியிட்டு வைத்தார்.

அதனை தொடர்ந்து வடமாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த விசேட உரையினை நிகழ்த்திருந்தார் தொடர்ந்து மக்கள் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

மக்கள் பிரதிநிதிகளின் உணர்ச்சி

(02ஆம் பக்கம் பார்க்க)


**19L குடிநீர் விநியோகம்**

யாழ்.நகரத்தை அண்மித்த பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு 19 லீற்றர் குடிநீர் குறைந்த விலையில் கொண்டுவந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:- 0773384838, 0782323562 (5996)

**டயானா பிளாஸ்டிக்**

அனைத்து வகையான வாகன, மோட்டார் சைக்கிள் உடைந்த பிளாஸ்டிக் 1,2,3 வருட கால உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்
- பைபர் கிளாஸ் உற்பத்தி
- பிளாஸ்டிக் கீற்றைக்
- பைபர் கிளாஸ் மோல்ட்
- பிளாஸ்டிக் மீள்சுழற்சி

என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
இந்த விளம்பரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு 10% விலைக் கழிவுண்டு
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8680 077 592 5088



**COMPUTER COURSES**

Diploma in Computerized Accounting — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in Video Editing — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in AutoCAD — 2D & 3D Modeling
Advanced Diploma in Hardware & Networking
C++, JAVA
புதிய பிரிவுகள் ஆரம்பம் 26/09/2016 (Mon) - 9.30 am.
DMI COMPUTER EDUCATION (TVEC REG.NO P25/0056) (C-5896)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, ..., Tel:.021 222 4403 |
| நெல்லியடி | ..., Tel:.021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, ..., Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S வீதி, ..., Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 ..., Tel:.021 228 5655 |



**இலங்கையின் புகழ்பூத்த முன்னணி ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரியில் புதிய பாடநெறிகள் ஆரம்பமாகின்றன**

இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான ஆங்கில டிப்ளோமா பாடநெறி
01.10.2016 காலை 7.30 மணி
(சனி / ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 10.00 மணி வரை)
(ஆங்கில பாடநெறியில் இணையும் மாணவர்களுக்கு 20% கட்டண சலுகை வழங்கப்படும்)
சிங்கள பாடநெறி, கணனி பாடநெறி
ஆரம்பம் : 01.10.2016 பிற்பகல் 1.00 மணி
E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
Tel :- 021 221 7106 / 077 061 0271 077 340 0418 / 077 4924 166



**உங்கள் தொழில் தகைமைகளை உயர்த்திக் கொள்ளுங்கள்**

MBA புதிய பிரிவுகள் ஆரம்பம்

குறைந்த முதலீடு — ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்தசெலவுடன் MBA பட்டக்கல்வியை மேற்கொள்ளும் சந்தர்ப்பம்.

அங்கீகாரம் — பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு University Grants Commission கொமன் வெல்த் பல்கலைக்கழக அமைப்பு Association of Common Wealth Universities

விரிவுரைகள் — 1வருட கற்றல் கால எல்லை கொண்ட 2 பிரிவுகள்
பிரிவு 01: ஞாயிறு ( 9.00a.m. - 4.00p.m.)
பிரிவு 02: திங்கள்,புதன்,வெள்ளி (7.00p.m. - 9.00p.m)

விரிவுரையாளர்கள் — தகைமை, நிபுணத்துவமும், தொழில்துறை அனுபவம் கொண்ட விரிவுரையாளர் குழாம்

கற்றல் சூழல் — உயர்கல்விக்கே உரிய சகல வசதிகளுடனும் கூடிய நவீனமயப்படுத்திய விரிவுரை மண்டபங்களுடனான சூழல்

அனைத்தும் ஒரே இடத்தில்

IIS CITY CAMPUS
200 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
071 777 5666
021 222 8060 | 021 4900 900
iis@iis.lk | info@iis.edu.lk
IIS CITY CAMPUS (C-5895)



**BEACON TEC CITY**

உயர்தர பொறியியல் தொழில்நுட்ப பாட கற்கை நெறிக்கான அனைத்து பாடங்களுக்குமான Day Classes (மீட்டற்பயிற்சி வகுப்புக்கள்) 01.10.2016 அன்று யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களினால் BEACON TEC CITYயில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**ஆசிரியர்களின் விபரம்**

1. செ. ஜெகநாதன் - இயந்திரவியல் தொழில் நுட்பம் யாழ் - தொழில் நுட்பவியல் கல்லூரி
2. அ. சிவகுமார் - குடிசார் எந்திரவியல்
தி.சிவஜன் - யாழ்- தொழில்நுட்பவியல் கல்லூரி
3. இ. றொயின்சன் - மின்னியலும், இலத்திரனியலும் தொழில் நுட்பக் கல்லூரி - வவுனியா
4. கு.அருண்குமார் - இயந்திரவியல் படவரைதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி
5. சு.சுரேஷ்குமார் - இரசாயனவியல் - பளை மத்திய கல்லூரி
6. S. கிருபாகரன் - இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் பௌதிகவியல்
7. கலைதீபன் - உயிரியல் தொழில் நுட்பம் நெல்லியடி மத்திய கல்லூரி

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
தொடர்புகளிற்கு :- 077 487 3338 077 809 9859 -இயக்குநர்
இவ் ஆசிரியர்கள் BEACON இல் மட்டுமே! (C-5882)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
நாதம் 84
வள்ளுவர் ஆண்டு 2047 25.09.2016 தொலைபேசி : 021 222 3378

# அலையென எழுந்தது "எழுக தமிழ்" பேரணி










உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# வீறுகொண்டெழுந்த எழுச்சிப் பேரணி



## வரலாறு காணாத மகத்தான வெற்றி

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியானது எவரும் எதிர்பார்க்காத- வரலாறு காணாத வெற்றியைத் தந்துள்ளது.

சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்த எழுச்சிப் பேரணியின் வெற்றி என்பது மக்கள் தாமாக- உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டமைதான்.

பேரணியை வலுக்குறைக்கச் செய்யும் வகையில் எத்தனையோ சதி முயற்சிகள் நடந்ததாயினும் அந்த முயற்சிகள் அனைத்தையும் முறியடித்து எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வரலாறு காணாத சாதனையை படைத்திருக்கிறது.

உள்நாட்டில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்கள் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கான தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.

பேரணியில் பங்கு கொள்ளும் வகையில் வடமாகாணத்து வர்த்தகப் பெருமக்கள் தங்கள் கடைகளை முழுமையாக அடைப்புச் செய்து பேரணியில் பங்கு கொண்டமை முன்பு எப்போதும் நடந்திராத வரலாறு ஆகும்.

ஒவ்வொரு வர்த்தகரும் சந்தை வியாபாரிகளும் தாமாக முன்வந்து தமது நிலையங்களை மூட வேண்டும் என்று நினைத்தமை ஒரு புதிய பரிமாணத்தின் அத்திபாரம் என்பதுடன் தமிழ்மக்களின் நலனை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட தமிழ்மக்கள் பேரவையின் தூய சிந்தனைக்கு கிடைத்த வெற்றி என்றும் கூறிக் கொள்ள முடியும்.

எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவாக வடமாகாணம் முழுவதிலும் கடைகள், வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டன. இதனால் வடபகுதி முழுமையும் தேற்றையதினம் முடங்கியது.

சில வர்த்தக சங்கங்கள் எப்பாடுபட்டாவது வர்த்தக நிலையங்களைத் திறக்கவேண்டும் என நினைத்தனவாயினும் வர்த்தகர்கள் அதற்கு இம்மியும் இடம்கொடாமல் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி காலத்தின்தேவை என்ற உண்மையை உணர்ந்து தாமாகவே கடைகளைப் பூட்டியமை வரலாற்றின் முதற்பதிவு எனலாம்.

தமிழ் மக்களின் உரிமை சார் விடயத்தில் தாம் நினைப்பதே சரி என்ற மமதை கொண்டவர்கள் இனிமேலாவது தமிழ் மக்களை ஓரங்கட்டிவிட்டு தமிழ்மக்களுக்கான தீர்வைக் காணமுடியாது என்பதை உணர்ந்திருப்பர்.

மேலாக தமிழ் மக்களின் அபிலாசைகள் என்ன? அவற்றை அரசிடம் வலியுறுத்தத் தவறினால் அதன் விளைவு எப்படியாக இருக்கும்? என்பதற்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி ஒரு நல்ல பாடமாக அமையும் எனலாம்.

எதுவாயினும் நடந்து முடிந்த எழுச்சிப்பேரணி யாருக்கும் எதிரானது அல்ல. அந்தப் பேரணியின் பெரு வெற்றி கண்டு எவரும் சிந்தை கலங்கத் தேவையில்லை.

இப்பேரணியின் வெற்றிக்குப் பின்னால் தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த கோரிக்கைகள் இருப்பதை நாம் மறந்துவிடலாகாது.

எங்கள் தாயக மண்ணில் வீம்புக்காகப் புத்தர் சிலைகளை அமைப்பது தவறான ஒரு விடயமே. வடபகுதி மக்கள் போரினால் நொந்து கெட்டுப் போயுள்ள வேளையில் தமிழர் தாயகத்தில் எந்த வித அவசியத் தேவையும் இல்லாத நேரத்தில் புத்தர் சிலைகளை அமைப்பது ஒரு அநியாயமான செயல். இந்தச் செயல் ஆட்சி அதிகாரத்தின் ஒரு மிலேச்சத்தனமான செயற்பாட்டையே காட்டுகிறது.

எனவே அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது ஒவ்வொரு தமிழ் மகனதும் விருப்பமாக இருந்தது.

இதேபோல் எங்கள் சொந்த இடங்களில் நாம் குடியிருப்பதைத் தடுப்பது- எங்கள் பூர்வீக மண்ணில் நாம் குடியிருப்பதற்கு அனுமதிக்க மறுப்பது- உங்கள் காணிகளை சுவீகரிப்போம் எனப் படைத் தரப்புக்கூறுவது சொந்த மண்ணை இழந்து இடம்பெயர் முகாம்களில் வாழுவது என்ற கொடூரங்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்ற நினைப்பு எழுச்சியைத் தூண்டியது.



இதேபோல் காணாமற்போனவர்களின் விவகாரம், வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த தமிழ் இன அழிப்பு, சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் அவலம், எங்களின் கடல் வளம் சுவீகரிக்கப்படும் கொடுமை எனப் பலதரப்பட்ட விடயங்களைக் கண்டித்து பேரணி நடத்தப்படவேண்டும் என்ற மனநிலை எங்கள் ஒவ்வொருவரிடமும் இருந்தமையால்தான் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி மகத்தான வெற்றியைத் தந்தது.

இந்தப்பேரணிக்கு மதத்தலைவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள், வர்த்தகர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், உயர் கல்வி அமைப்புகள், மருத்துவர்கள், அரச சேவையாளர்கள், தொழிற்சங்கங்கள் எனப் பலரும் வழங்கிய ஒத்துழைப்பு ஒருபோதும் மறப்பதற்குரியதன்று.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த பேரணி நியாய பூர்வமானது என்பதை எங்கள் மக்கள் ஏற்றுக் கொண்டதனால் சுட்டெரிக்கும் வெயிலிலும் தங்கள் உணர்வு பூர்வமான எழுச்சியை மக்கள் வெளிப்படுத்தினர்.

எனவே இந்தப் பேரணிக்கு நல்லாட்சி உரிய மதிப்பளித்து தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டும்.

கூடவே சர்வதேச சமூகம் ஈழத்தமிழ் மக்களின் விடயத்தில் தனது பொறுப்பை உணர்ந்து செயற்படும் என நம்பலாம்.

விதுரன்

# 'எழுக தமிழ்' பிரகடனம்-2016

***(யாழ்ப்பாணம்)***

***தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை கண்டித்தும் தமிழ் மக்களது அபிலாஷைகளை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், மாணவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் பேராதரவுடன் எழுக தமிழ் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி நேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது. யாழ். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சுற்றம் மற்றும் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து இரு அணிகளாக ஆரம்பிக்கப்பட்ட இப் பேரணி யாழ்.நகர் முற்றவெளி மைதானத்தை முற்பகல் 11 மணியளவில் வந்தடைந்திருந்தது. இதன்போது எழுக தமிழ் மக்கள் பேரணிக்கான எழுக தமிழ் - 2016 பிரகடனத்தினை தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும் இருதய வைத்திய நிபுணருமான பூ.லக்ஸ்மன் வெளியிட்டு வைத்தார். எழுக தமிழ் - 2016 பிரகடனம் இங்கு தரப்படுகின்றது.***

"எழுகதமிழ் 2016" தமிழ மக்கள் பேரவையின் ஏற்பாட்டில். பொதுமக்கள். அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படும் ஒருதமிழ் தேசியஅரசியல் நிகழ்வாகும்.

சிங்கள,பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்களதேசத்திற் கும். இலங்கைத்தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் வலியுறுத்துவதே "எழுக தமிழ் 2016" எழுச்சிப் பேரணியின் நோக்கமாகும்.

2016 ஆம் ஆண்டு. செப்டெம்பர் 24ஆம் திகதி. யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெறுகின்ற "எழுக தமிழ் 2016"எழுச்சிப் பேரணி கீழ்வரும் பிரகடன த்தை செய்கின்றது.

1 வடக்கு. கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை வலிந்து பௌத்த. சிங்களமயமாக்கும் நோக்குடன் சிங்களக் குடியேற்றங்களும். பௌத்த விஹாரைகளும், புத்தர் சிலைகளும் இவ் வாட்சியிலும் அரசின் அனுசரணையுடனும். இராணுவத்தின் உதவியுடனும் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களுடைய இன அடையாளத்தை அழிக்கவும். வடகிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களின் குடிப் பரம்பலை வலிந்து மாற்றவும் அரசு எடுத்து வரும் இவ்வாறான சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு இம்மக்கள் பேரணி வலியுறுத்து



கின்றது.

2 யுத்தம் நிறைவடைந்து ஏழு வருடங்கள் ஆகியநிலையிலும் இராணுவம் மிகச் செறிவாக வடகிழக்கில் குவிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவம் தமிழர் தாயக பரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியை சுவீகரிப்பு செய்தது மாத்திரமல்லாமல், தொடர்ந்தும். தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது. மேலும் உல்லாச விடுதிகள். விவசாயப் பண்ணைகள். இதர வர்த்தக நடவடிக்கைகள் மேற் கொண்டு வருவதுடன், வடக்கு-கிழக்கு நிர்வாகத்திலும் தொடர்ந்தும் தலையிட்டு வருகின்றது. வடகிழக்கு தமிழர் தாயக பிரதேசங்களில் தமிழர் தமது வாழ்வாதாரத்திற்காக தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு இராணுவத்தில் தங்கி தமது பொருளாதாரத்தை தாமே பொறுப்பேற்க முடியாத நிலையையும், இராணுவ மயமாக்கலினூடு தமிழ் சமூகத்தினை பிளவுபடுத்தி.சமூக உறவு முறைகளை சிதைத்து. தமிழர் கூட்டாக ஜனநாயக ரீதியில் அணி திரள்வதற்கு இடையூறாகவும் இராணுவம் நிலவி வருகிறது. பெணகள், சிறுவர்களுக்கெதிரான இராணுவத்தினரின் பாலியல் வன்முறைச் சம்பவங்களும் தமிழ் தேசத்தின் இருப்பை சிதைக்கும் வழிவகைகளே. இதனால் வட- கிழக்கு தாயகத்திலிருந்து உடனடியாக இராணுவத்தை வெளியேற்று மாறு இப்பேரணி வலியுறுத்து கின்றது.

3 தமிழ் மக்கள் மிகத் தெளிவாக உள்ளகப் பொறிமுறையை நீதிக்கான தேடலில் பிரயோசனம்ற்ற ஒன்று என தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் செப்டெம்பர் 2015 அறிக்கை மிகத் தெளிவாக இலங்கையின் நீதித்துறை யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்க தகைமையற்றது எனக் கூறியது. இருப்பினும் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகள் இணைந்து கலப்புப் பொறிமுறை ஒன்றை இலங்கைக்கு பொருத்த மானது என தமது செப்டெம்பர் 2015 பிரேரணை மூலம் விதந்துரைத்தனர். அதனை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்ட இலங்கை அரசாங்கம் தற்போது வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க முடியாது எனத் தெளிவாக அறிவித்துவிட்டது. கலப்புப் பொறி முறையை நிராகரித்து மீள உள்ளகப் பொறிமுறையை மட்டுமே முன்வைக்கின்றது. இச்சூழலில் இப்பேரணி சர்வதேச விசாரணைக்கான தமிழ் மக்களின் ஏகோபித்த நிலைப்பாட்டை வலியுறுத்தி நிற்கின்றது.

4 கடந்த 35 வருடங்களுக்கு மேலாக நிலவிவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் சிலர் 15 - 20 வருடங்களுக்கு மேலாக விளக்க மறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர். 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்திற்கு உறுதிமொழி கொடுத்தும் இதுவரை பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை என்பதுடன் தொடர்ந்தும் பல இளைஞர்கள் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் வாழும் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்பதுடன் பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக விலககிக் கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பேரணி வலியுறுத்துகின்றது.

5 போர் நிகழ்ந்த காலகட் டத்திலும்,அரசியற் காரணங்களுக்காகவும் கடத்தப்பட்டும், சரணடைந்த பின்பும் காணாமற் போகச் செய்யப்பட்ட ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் எங்கு இருக்கின்றார்கள் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என உடனடியாகக் கண்டறிந்து பகிரங்கப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கு நீதி வழங்கப்படவும் வேணடும்.

6 யுத்தம் நடந்தகால கட்டங்களில் கடற்படையினரின் தடை உத்தரவு காரணமாக வடக்கு-கிழக்கு மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்திருந்தனர். ஆனால் யுத்தம் நிறைவடைந்து ஏழு வருடங்கள் ஆகியநிலையில் இன்றும் கூட வடக்கு-கிழக்கு மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். தென்னிலங்கை மீனவர்கள் வடகிழக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவது மாத்திரமின்றி, வடக்கு. கிழக்கு மீனவர்களின் படகுகளை சட்டவிரோதமாக கைப்பற்றுவதாலும், நிரந் தர தங்குமிடங்களை அத்துமீறி அமைப்பதனாலும் தமிழ் மீனவர்கள் தமது சொந்த மீன்பிடி இடங்களில் இருந்தே விரட்டப்படுகின்ற சூழல் உருவாகி வருகின்றது. மேலும் தென்னிலங்கை மீனவர்கள், வட-கிழக்கு கடற் பிரதேசங்களில் சட்டவிரோதமான மீன்பிடி முறைகளை கையாள்வதால் தமிழ் மீனவர்கள் தமது வாழ்வாதரங்களை இழந்தும் வருகின்றார்கள். இதன் காரணமாக ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது.இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பேரணி வலியுறுத்துகின்றது.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி முறைகளாலும் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அன்றாடத் தொழில் செய்து பிழைக்கும் மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுடன், தமிழ் மீனவர்களின் கடல் வளங்கள் அத்துமீறி, சட்டத்துக்கு புறம்பாக சூறையாடப்படுவதை இப் பேரணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

7 விடுதலைக்காக போராடிய தேசிய இனங்கள் மத்தியில் அவர்களின் விடுதலை வேட்கையை அழிக்கும் பொருட்டு போதைவஸ்துக்களை இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் பரப்பும் வழிமுறைகளை பல நாடுகளின் அரசுகள் கையாண்டுள்ளன. தமிழர் தாயகத்தை ஆழமான இராணுவ கண்காணிப்புக்குள் வைத்திருக்கின்ற போதிலும் பெருமள வான போதைவஸ்துப் பொருட் கள் எமது பிரதேசங்களினுள் ஊடுருவ விடப்படுகின்றன. மேலும், ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களும், வடக்கு-கிழக்கில் வேகமாகப் பரவி வருவதுடன், வட- கிழக்கில் இராணுவத்தினால் நடத்தப்படும் விளையாட்டு விழாக்களின் போது தமிழ் இளைஞர்களிடையே மதுப்பாவனையை இராணுவம் நேரடியாக ஊக்கப்படுத்துவது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் இவை அனைத்தும் எமது இளம் சந்ததியின் எதிர்காலத்தை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளாகவே நோக்க வேண்டியுள்ளது. இவற்றை நிறுத்தவும், கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென இப் பேரணி வலியுறுத்துகின்றது.

## அரசியல் தீர்வு சம்பந்தமாக:-

இன்னமும் தீர்வு காணப்படாத தமிழ்த்தேசிய இனப் பிரச்சினையினதும், நடந்து முடிந்த போரினதும் நேரடி மற்றும் நேரடியற்ற விளைவுகளான மேற்கூறப்பட்ட அரசியற் பாதகங்கள் எதுவும் மீண்டும் நிகழாதவாறு தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியற் தீர்வு முன்மொழிவின அடிப்படையில் ஒரு சுயாட்சித் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தப் பேரணி பிரகடனம் செய்கின்றது.

தமிழர்களின் தேசியபிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனும் நோக்கில் 3 ஆவது குடியரசுஅரசியல்யாப்பை கொண்டு வருவோம் என்று இவ்வரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு கூறிவருகின்றது. ஆனால் இலங்கை அரசின் ஜனாதிபதியும், பிரதமரும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வுவரும் எனவும் பௌத்தத்திற்கு கொடுக்கப்பட் டுள்ள முன்னுரிமையில் மாற் றம் வராது எனவும் தொடர்ந் தேர்ச்சியாக கூறிவருகின்றனர். ஒற்றையாட்சிக்குள் ஒருகுறைந்தபட்ச அதிகாரப் பகிர்வை தமிழருக்கான தீர்வாக திணிக்க இவ் வரசாங்கம் முயற்சிக் கின்றது. அவசர அவசரமாக ஓர் அரசியலமைப்பை பாராளுமன்றில் நிறைவேற்றி பொதுசனவாக் கெடுப்பு ஒன்றின் மூலம் புதிய அரசியலமைப்பு ஒன்றிற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற அரசாங்கம் முயற்சிக்க இருக்கின்றது. தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் வாக்கு புதிய அரசியலமைப்பிற்கு கிடைத்தால் அதைவைத்து தமிழ்மக்களிற்கு அரசியல் தீர்வொன்றை வழங்கிவிட்டதாக அர்த்தப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. தமிழர்கள் புதிய அரசியலமைப்பு எப்படியாக இருக்கவேண்டும் எனக் கருத்துக் கூறுவதோ, கூட்டாக நிலைப்பாடு எடுப்பதோ, அது தொடர்பில் ஜனநாயக ரீதியாக அணிதிரள்வதோ அரசியலமைப்பாக்க முயற்சியை குழப்ப எடுக்கும் நடவடிக்கையாக சித்திரிப்பதை நாம் கண் டிக்கின்றோம். அந்தவகையில் பின்வரும் நிலைப்பாடுகளை இப்பேரணி எடுக்கின்றது. எனவே,

அ. தற்போதைய அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தம் எமக்கு தந்த படிப்பினையின் அடிப்படையிலும். இலங்கை அரசியலின் சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் கலாசாரத்தில் தமிழர்களின் கடந்த 68 ஆண்டுகால கூட்டனுபவத்தின் பிரகாரமும் ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எந்த வடிவத்திலும் சாத்தியம் இல்லை என நாம வலியுறுத்திக் கூறுகின்றோம்.

ஆ. தமிழ் மக்கள் பேர வையினால் தயாரிக்கப்பட்ட தீர் வுத்திட்டத்தின் அடிப்படை யில், தேசிய இனப்பிரச்சினைக்கான நடைமுறை சாத்தியமான தீர்வு. தமிழர்களை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஒரு தேசமாக, அவர்களது சுயநிர்ணய உரி மையை மதிக்கும்.தன்னளவில் இறைமை கொண்ட சுயாட்சி ஒன்றை நிறுவும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலமாகவே அடையப்படும் எனக் கூறுகின்றோம்.

இ.தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் அதன் வழி தமிழ்த் தேசத்தின் இறைமையையும். நிறுவன ரீதியாக.சமஷ்டி முறைமை ஒன்றின் மூலமாக அடைந்து கொள்ளலாம் என நாம் கூறுகின்றோம்.

ஈ. தமிழர் தேசத்தின் தனித்துவத்தையோ.தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையோ அங்கீகரிக்காத. உள்ளடக்கத்தில் தெளிவில்லாத அரைகுறை தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள முடியாது என இப்பேரணி கூறுகின்றது.

உ. புதிய அரசியலமைப்பு மிகவும் இரகசியமானமுறையில் உருவாக்கப்படுகின்றது. புதிய அரசியலமைப்பு தொடர்பிலாக நடத்தப்பட்டபொதுமக்கள் கலந்தாய்வு தொடர்பிலானஅறிக்கை தமிழ் மக்களின் முன்வைப்புக்களை புறந்தள்ளியே சமரப் பிக்கப்பட்டுள்ளது. உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்புநகல் தொடர்பிலான மக்கள் வாக்கெடுப்பிற்குமுன்னர் வெளிப்படையானதும். ஜனநாயக ரீதியதுமான கலந்துரையாடல் ஒன்றுமக்கள் மத்தியில் இடம் பெற போதுமான கால அவகாசம் வழங்கப்படவேண்டும். அடக்குமுறையின் கீழ் அரசியல் தீர்வு தொடர்பிலான கலந்துரையாடலை நடத்த முடியாது. வடக்கு கிழக்கில் கருத்துக் சுதந்திரத்துடன் புதிய அரசியலமைப்பு தொடர்பிலான திறந்த விவாதம் நடைபெற பயங்கரவாதத் தடைச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இராணுவமய நீக்கம் செய்யப்படவேண்டும் என நாம் கூறுகின்றோம்●

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்



போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்தான்.

அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை.

எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனைக் கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான்.

அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான்.

மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது.

அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது.

சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது.

ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது.

அரசன் "இச் சிறு சிலந்தியே பலமுறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விட வேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான். மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்தான்.


அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தனக்கு நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான்.

தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான்.

தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.












வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532




நம் பெண்கள் இன்று யாரை பின்பற்றுகிறார்கள்?

வீட்டுக் கழிவை தெருவில் போடுபவர்களை திருத்த முடியாதா?

எழுக தமிழ் பேரணி பற்றி?

கமல் — வல்வெட்டித்துறை

**எழுக தமிழ் பேரணி பற்றி?**

எம் மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொண்டும் அதைத் தீர்க்காமல் அரசிற்கு வால் பிடித்து வாழும் சில ஈனப்பிறவிகளுக்கு மக்கள் கொடுத்த முதல் அடி, மக்களின் மகத்தான அடி.

ஒத்துப் போபவர்களையும் ஊதுகுழல்களையும் எடுத்தெறிந்து எமக்கு நீதி வேண்டும் என உரத்த, ஒன்றித்த ஒப்பற்ற குரலே எழுக தமிழ். ஏய் எதிர்ப்பாளிகளே இனி எங்கள் வீடு தேடி வராதீர்கள் தமிழ் தேசியம் பேசியபடி. இது தான் எழுக தமிழ் மக்களின் எண்ணக்கோசம்

கவி — மிருசுவில்

**வியாசரே நீங்கள் பொய் சொன்ன சந்தர்ப்பம் உண்டா ?**

இனிமேல் பொய் சொல்லக் கூடாது என சத்தியம் செய்த மறுகணமே என்னங்க சாப்பாடு எப்படி இருக்கிறது எனக் கேட்கிறார் மனைவி.

சுபாங்கி — மானிப்பாய்

**வியா எழுக தமிழ் பேரணிக்கு நீங்கள் வந்தீங்களா?**

இராமாயணத்தில் இராமனுக்கு பாலம் கட்ட உதவிய அணில் போல தமிழர் எம் அடக்கு முறைகளுக்கு எதிரான பதிவை எழுக தமிழில் பதிவு செய்தேன்.
(என்னெண்ணெய் எரிக்க போகவில்லை. ஏனென்றால் எனக்கு சனி பிடிக்கல. பிடிச்ச வங்கள் எரிக்கிறதுதானே முறை)

கோபி — கோண்டாவில்

**வடிவேலுவின் அடுத்த படம் என்ன?**

விஷால் சூரியுடன் கத்திச் சண்டை படத்தில் டாக்டர் வேடத்தில் கலக்க வருகிறார். அடுத்து 23ஆம் புலிகேசி 2 இல் நடிக்க இருக்கிறார். இனி வடிவேலுவின் காட்டில் அடை மழைதான்.

கேமா — கொக்குவில்

**O/L எடுத்திட்டு மேற்படிப்பு படித்தால் வாழ்க்கையில் பிரச்சினை வர வாய்ப்பிருக்கா ?**

படித்தால் பிரச்சினை வரும் என்று கேட்ட முதல் ஆள் நீங்களாகத்தான் இருக்க முடியும்.

கோகிலா — விசுவமடு

**குடும்ப நலனில் அக்கறை கொள்பவர் கணவனா? மனைவியா?**

கணவர் மனைவி என்கின்ற இரண்டு சக்கரத்தில் ஒன்று சிறியதாய் இருந்தாலும் நினைத்த படியும் சமாந்தரமாயும் செல்லாது. அக்கறை என்பது இருவருக்கும் தேவை. அப்பொழுது தான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் அமையும்.

காயத்திரி — வத்தனை

**தற்போது பெண்களின் நிலை?**

பாவாடை தாவணியில் இருந்து பாவாடை சட்டைக்கு மாறி பாவாடை சட்டையில் இருந்து பஞ்சாபிக்கு மாறி பஞ்சாபியில் இருந்து இப்ப லெக்கின்சிற்கு வந்து நிற்கிறது. இன்னும் என்னென்ன கண்றாவிய பாக்க வேண்டி வருமோ. இறைவனுக்கு தான் வெளிச்சம்.

கார்த்திகா — வத்தனை

**ஜோதிடத்தில் நம்பிக்கை இருக்கா?**

எனக்கும் என் மனைவிக்கும் சண்டை வரும் போதெல்லாம் நம்பிக்கை இருக்கு என்பதை உணர்ந்து கொள்வேன்.


உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்
குறுந்தகவல்
(SMS)
021 567 1532


ஆனந்தன் — மானிப்பாய்

**வீட்டுக் கழிவை தெருவில் போடுபவர்களை திருத்த முடியாதா?**

எங்கள் அலுவலகத்திற்கு அருகிலும் ஒரு ஜென்மம் இருக்கிறது. வீட்டுக் கழிவுகளை கொண்டுவந்து தன் மதிலுக்கு வெளியே போடும். அதன் எண்ணமெல்லாம் தன் எல்லைக்கு வெளியே சென்றுவிட்டது என்பது மட்டும் தான்.

இப்படிப்பட்டவர்களை அதே குப்பைகளுடன் ஒருவாரம் இருக்க வேண்டும் என்ற தண்டனை கொடுத்தாலே போதும்.

ரஜீவா — அல்வாய்

**கோழியில் இருந்து முட்டை வந்ததா முட்டையில் இருந்து கோழி வந்ததா ?**

ஐயோ! இந்த கொசுத் தொல்லை தாங்க முடியலடா சாமி.

ஜெயா — கொக்குவில்

**இன்னும் ஐம்பது வருடத்தின் பின் எமது சமூகம் எப்படி இருக்கும்?**

என் பேரனின் காலமது. கருணாகரன் கருணாகர வாக மாறிவிட்டான். அவனின் மகன் தடுக்கி கிழே விழுந்து அம்மே என்று அழுகிறான். விகாரைக்கு போய்வந்த கருணாகர (ன்) வின் மனைவி கிமாலிக்கா மம புத்தா என்று அலறியபடி ஓடிவருகிறாள். புத்தரே என் மகளைக் காப்பாற்று என்கிறான் கருணாகர (ன்).

பகீதரன் — கொடிகாமம்

**காதல் பற்றி என்ன நினைக்கின்றீங்க?**

அந்தக் கண்றாவிய பற்றி ஒன்றும் நினைக்க அதில் ஒரு நாசமும் இல்லை. (திருமணம் முடித்தால் தெரியும்)

சாம்பவி — பருத்தித்துறை

**வாசகர்களின் கேள்விகளில் உங்கள் மனதைப் பாதித்த கேள்வி ஒன்று?**

*ஒன்றா?*

- உங்கள் மனைவி ரம்ப அழகாமே?
- உங்கள் மனைவி உங்களில் ரம்ப அன்பாமே?
- உங்கள் மனைவி அருமையாக சமைப்பாராமே?
- உங்கள் மனைவி உங்களிடம் சண்டையிட்டதே இல்லையாமே?
- உங்கள் மனைவி உங்களிடம் அதை வாங்கித்தரச் சொல்லியோ இதை வாங்கித்தரச் சொல்லியோ கேட்டதில்லையாமே?

இப்படி என்மனைவி பற்றி ஓராயிரம்

நிதுசன் — அல்வாய்

**நா.முத்துக்குமார் பற்றி?**

ஆனந்த யாழை மீட்டுகிறாய் என எம் நெஞ்சங்களில் தன் பாடல் வரிகளினூடே எம்மை தாலாட்டிய, இரண்டு முறை தேசிய விருது வென்ற ஒரு இளம் எழுத்தாளனை இந்த உலகு இழந்துவிட்டது. நா.முத்துக்குமாரின் வெற்றிடத்தை நிரப்பிவிட இப்போதைக்கு எவரும் இல்லை என்பதே எமது கருத்து.

சுபா — கோணாவில்

**கபாலி "மகிழ்ச்சி" எப்படி?**

மகிழ்ச்சி என்பது எப்படி இருக்க வேண்டும் என்றால் பாடசாலையில் கடைசி மணி அடிக்கும் போது எப்படி இருக்குமோ அப்படி இருக்கனும்.

வேல்நந்தன் — புலோலி

**நம் பெண்கள் இன்று யாரை பின்பற்றுகிறார்கள்?**

மாலதி – தமிழினி என்ற காலம்போய் இப்போது நயன்தாரா – கீர்த்தி சுரேசில் வந்து நிற்கிறது. என்செய்ய வழிகாட்ட வேண்டிய ஆண்களே தலையையும் வாலையும் பிடித்துத் தூங்கிக்கொண்டு நிற்கிறார்கள். எல்லாம் காலக்கொடுமை.

தக்சி — யாழ்ப்பாணம்

**நிலவை ஏன் ஆண் – பெண் எல்லோருக்கும் ஒப்பிட்டு கவிதை எழுதுகிறார்கள்?**

நிலவிற்குத்தான் வாயில்லையே. இந்த கண்றாவிகளுடன் ஏன் என்னை ஒப்பிடுகிறாய் என்று சண்டைபிடிக்க.

# கவிதைக் கலசம்

## ஆசையில் விழுந்த பெண்

காதல் என்ற தீயால்
காமுகர் வலையில் வீழ்ந்து
கற்பை இழந்து
கர்ப்பமும் ஆனாள்
இன்பம் இதுவென்று
இளமையை இழந்தாள்
சமுதாயச் சந்தையிலே-அவள்
விலை போகாச் சரக்கானாள்
கண்ணிலே நீர்
கையிலே பிள்ளை
கைகொடுப்பார் யார்
கவலை தீர்ப்பார் இல்லை
ஆணின் ஆசையில்
அரை நொடியில்
விழுந்த பெண்
விம்மி அழுகிறாள்
அவமானச் சின்னமாய்
அவதியுறும் பெண்
அலைந்து திரிகின்றாள்
அல்லற்படுகிறாள்
கரையே வழியின்றி
கலங்குகிறாள் கன்னி

சுழிபுரத்தார்
க.சிவகுமார்

## தமிழா...?

சாதிகள் இல்லை- நல்ல
தமிழ் வளர்த்தல் வேண்டும்
நாட்டை மறந்தால் நீ
உன்னை மறப்பாய்
சாதிகளை எரித்திடு-நல்ல
தமிழனாய் வாழு
சாதிகள் பிணிப்பற்றது தோழா
மேலவர் கீழவர் இல்லை
செந்தமிழ் நாட்டினிற் பற்று
நல்லதோர் தொண்டு
கந்தையை என்றும் எண்ணாதே
கையில் காசு நிலைப்பதுமில்லை
இந்த உலகம் செல்லும் வரை
தமிழனாய் வாழ்ந்து காட்டு
தமிழா?

த.சர்மினி
புதிய கற்பகபுரம்

## உன் வாழ்வில் நீ உயர...

உயர்ந்திடு நீ உன் வாழ்வில்
காலமெல்லாம் உன் பெயர் நிலைக்க
உயர்வது உன் வழி
உயர வைப்பது என் வழி
நடிப்பது என்னும் திறமையினாலே
மாறிடு நீ ஓர் நடிகனாக
பாடல் என்னும் வரிகளினாலே
மாறிடு நீ ஓர் பாடகனாக
இசை என்னும் காற்றினால்
மாறிடு நீ ஓர் இசையமைப்பாளனாக
கல்வி என்னும் பட்டத்தினால்
மாறிடு நீ ஓர் ஊதியனாக
இவ்வுலகில் கண்டுபிடி நீ ஒன்றை
அது உன் பெயர் சொல்லும்
நீர் இறந்த பின்பும்
நாள் முழுவதும் நன்மை செய்திடு
இல்லாதவர்க்கு கொடுத்து உதவிடு
பின்பு நீயாக வந்திடு
என் வாழ்விலே மேலே

ஜே.ஜே.கவியன்
இளவாலை

## எழுக தமிழா

எழுக தமிழ்
வலி தந்தாரை வதைத்த ஆட்சியர்க்கு அடி
அவர்தம் வால் பிடித்த
ஈனர்க்கு பலத்த அடி! எழுக தமிழ்

பிடி மண் எடுக்க
முடியாதென்று முட்டுக்கட்டை போட்டு
திட்டம் தீட்டி
சதி செய்தவரின் விதிமாற்றும்! எழுக தமிழ்

போதி கண்ட இடமெங்கும்
புத்தரை குடிகொள்ள வைக்கும்
கொள்கையை எதிர்த்து
தடங்கொண்ட திமிர்! எழுக தமிழ்

எம் உற்றார் உறவினரை
கொன்று பழி தீர்த்தவன் கை
கட்டப்பட!
நீதி வேண்டி! எழுக தமிழ்

உயிரினும் மேலான தமிழனின்
உயிர்வாழ் நிலங்கள்
ஆக்கிரமிப்பை, அடாத்தை
எதிர்த்து நின்றிட! எழுக தமிழ்

என்னினமே எழுந்து நில்
இனியொரு விதி செய்
எம் சொந்தக் காலில் நின்று
எம்மை நாமே ஆண்டிட! எழுக தமிழா!

மாவை. நா.கஜேந்திரன்



## விலை மதிக்க முடியாதது

செல்ஃபிக்கு அழகாக
போஸ் கொடுத்து
மோட்டார் சைக்கிளில்
செல்லும்
இளம் வாலிபர்களே
வீதியால் செல்லும்
அப்பாவிகளின் உயிர்களை
காவு கொண்டு விடாதீர்கள்
விலை மதிக்க முடியாதது
அவர்களின் உயிர் மட்டுமல்ல
உங்களுடையதும்தான்

சி.கஜா
முரசுமோட்டை

## நினைத்த (செயற்பாட்டு) சுதந்திரமா?

ஆண்களுக்கு சளைத்தவரல்ல
நாங்கள்
அன்றாட வாழ்க்கையிலே எல்லாம்
பெண்களென்றால் என்ன
கிள்ளுக்கீரைகளா?
பெருமையுடன் நிமிர்ந்து
நிற்கின்றோம் இன்று
தாங்கள் தப்பவென
தவறுகளை மறைத்து
தலைமறைந்து வாழ்பவருக்கு
நாங்கள் நினைத்தவனை
கடத்திவந்து
நாளை தாலி கட்ட வைப்போம்
என்ற இறுமாப்பா?

பொ.புனிதன்
வரியப்புலம்

# மௌனத்தின் தேடல்- 320

## எரிகின்றது... ஆனால் எரியவில்லை

தனக்குள் எரிந்து
எமக்கு வாழ்வளித்த
ஆதாரம் இன்று
தான் எரிந்து போகையிலும்
தன்னை பாரா
நம்முகம் பார்க்கும்
எம்மினம் கண்டு எரிவது
எனக்கு எரியவில்லை என்கிறது...!

எஸ்.ருதுகா
யாழ்ப்பாணம்

## பாதையை நோக்கிய பார்வை

பாதை எங்கே
பார்வை எங்கோ
பயணம் அங்கோ
பயணோ இங்கே
உன் வேகத்தைவிட
ஊரார் உயிர் உயர்வு
விபத்துக்கள் இன்று
வீதியில் ஏற்பட
விளையும் உந்தன்
விபரீத எண்ணம்
பாதையில் கவனம்
பார்வையில் தேவை
கவனம் இழந்தால்
கவலை வளரும்
அதிக வேகம்
ஆபத்தை வளர்க்கும்
பயணிகள் உயிரின்
பாதுகாப்பை இழக்கும்
பாதையை நோக்கி
பயணத்தை தொடர்ந்தால்
பாரில் யாவும்
பலனாய் அமையும்

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி

## கையடக்கத் தொலைபேசியின் கருவுரு மாற்றம்

கையடக்கத் தொலைபேசி மாறியது
மெய்யடக்க தொலைபேசியாய்
செவிவழிப் பாவனையில் உருவெடுத்து
செல்ஃபி எனும் பெயரில் உருமாறியது
படுக்கையிலும் செல்ஃபி
பாதையிலும் செல்ஃபி
கவனமாக செல்லுங்கள்
காலனும் இணைவான்
செல்ஃபியில்

வி.அபிநயா

## வெளிச்சத்துக்கு வந்துவிடும்

விஞ்ஞானத்தின் விஞ்சியதில்
ஒன்று என செல்ஃபி பாவனையில்
இயற்கையும் தன்னையும் தானே
இயல்பு நிலையில் படம் பிடித்து
மீட்டிக் காட்டும் காட்சி!
தனது வெளித்தோற்றத்தையே
பிடிக்கும் செல்ஃபி
தனது உடலின் உள்ளே
சூட்சும உயிர், உள்ளம், உணர்வு
உண்மை இவற்றையும் சேர்த்து
பிடித்தால் அதுவே உள்ளேயிருக்கும்
மனச்சாட்சி வெளியிடும்
மறைக்கப்பட்ட உண்மையை

சி.சுகிர்தமலர், உரும்பிராய்

## தீராத பசியோ

எம்மீது உனக்கென்ன கோபம்
தீயே உனக்கு தீராத பசியோ
தீண்டும் இனமாக எம்மை
நீயும் எண்ணியதாலோ
உன் பசிக்கு இரையாகிப் போன
எம் வாழ்வு மீண்டும் சாம்பலோடு
சாம்பலாய் சங்கமித்து
சாகாமல் சாகடித்து மௌனமாய்
மௌனித்து மறைந்துவிட்டாய்
கண்ணீரும் வற்றி இங்கே
காய்ந்துவிட்ட நீரோடைபோல்
காட்சி தரும் வேளையிலே
கடவுளுக்கும் பொறுக்கவில்லை
கையேந்தாமல் வாழ்வதற்கு
தீயே உனக்கென்ன தீராத பசியோ

இளவரசு
ஒட்டுசுட்டான்

# மௌனத்தின் தேடல் -321



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.09.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பிரபாகரன் எழுதிய கடிதத்தை கிழித்தெறிந்தவர் கருணாநிதி

## அம்பலப்படுத்தினார் வைகோ

‘ எமது மக்கள் இது வரை நம்பியிருந்த பாராளுமன்றத் தலைமை, எமது மக்களை இன்று நட்டாற்றில் விட்டுவிட்டு தமது அற்ப பதவிகளுக் காக இனத் தைக் காட்டிக் கொடுக்க முனைந்துள்ள வேளையில், தமிழகத்தில் இருந்து தி.முக. எம்.பி வைகோ தன் உயிரையும் பொருட்படுத்தாமல், எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் என்னையும் எனது தோழர்களையும் சந்திக்க வந்துள்ளார். ’







காவிரிப் பிரச்சினை எரிந்து கொண்டிருக்கும் சூழலில், அண்ணா பிறந்தநாள் மாநாட்டை திருச்சியில் செப்டெம்பர் 15ஆம் திகதி ம.தி.மு.க நடத்தியது. அதில், காவிரிப் பிரச்சினை பற்றி அதிகமாகப் பேசிய வைகோ, கருணாநிதிக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தை வெளியிட்டு பரபரப்பைக் கிளப்பினார்.

“தி.மு.க.வில் நான் எம்.பியாக இருந்த போது 1989ஆம் ஆண்டு வன்னிக்காட்டுக்குச் சென்று பிரபாகரனை சந்தித்தேன். அப்போது, அண்ணன் கலைஞருக்கு ஒரு கடிதத்தை பிரபாகரன் என்னிடம் கொடுத்து அனுப்பினார். அதை கலைஞரிடம் கொடுத்தேன். சில நாட்கள் கழித்து கலைஞரை சந்தித்தபோது, ‘பிரபாகரன் கடிதத்தைக் கிழித்துவிட்டேன்’ என்றார். இதுநாள்வரை மனதுக்குள் பூட்டிவைத்திருந்த ஒரு இரகசியத்தை, 28 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது சொல்கிறேன்” என்று அந்தக் கடிதத்தை வைகோ வாசித்தார்.

‘எனது அன்புக்குரிய அண்ணா அவர்களுக்கு, திரு.வைகோபால்சாமி அண்ணா அவர்கள் இங்கு வந்து என்னை சந்தித்து விட்டு உங்களிடம் வர இருப்பதால், இக்கடிதத்தை உங்களிடம் அனுப்புகிறேன். அவர் வரும்போது உங்களிடம் சொல்லிவிட்டு அனுமதி பெற்றுதான் வந்திருப்பார் என நினைத்தேன். அவர் சொல்லாமல் வந்திருப்பது அவரிடம் பேசியபோது தெரிந்தது. தமிழ் இனத்தின் மீது அவர் கொண்டுள்ள பற்றும் பாசமும் தான், அவரை இவ்வாறு செய்யத் தூண்டியது என்பதும், இது உங்களுக்கு சங்கடங்களை தோற்றுவித்திருக்கும் என்பதும் நான் அறிவேன். ஆனால், எமது மக்கள் இதுவரை நம்பியிருந்த பாராளுமன்றத் தலைமை, எமது மக்களை இன்று நட்டாற்றில் விட்டுவிட்டு தமது அற்ப பதவிகளுக்காக இனத்தைக் காட்டிக்கொடுக்க முனைந்துள்ள வேளையில், தமிழகத்தில் இருந்து தி.முக. எம்.பி.வைகோ தன் உயிரையும் பொருட்படுத்தாமல், எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் என்னையும் எனது தோழர்களையும் சந்திக்க வந்துள்ள துணிச்சலையும் தமிழ்ப்பற்றையும் பார்க்கும்போது, நான் எனது மொழிக்காகவும், தமிழீழ நாட்டுக்காகவும் இன்னும் ஆயிரம் முறை இறக்கலாம் என்ற மனத்தெம்பை ஏற்படுத்துகிறது.

உங்கள் ஆட்சி தமிழகத்தில் மீண்டும் வந்துள்ளதால் ஈழத்தமிழர்கள் பெருமைப்படுகிறோம். இனி தமிழகத்தில் தமிழ் இன உணர்வு மீண்டும் தழைத்தோங்கும். எம்மைப் பொறுத்தவரை, நாம் எந்த இலட்சியத்துக்காக ஆயுதமேந்தி போராடினோமோ அந்த இலட்சியத்தில் வெற்றி பெறுவோம். அல்லது அந்த இலட்சியத்துக்காக சந்தோசமாக மடிவோம். இன்று இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கையால் எமது நாடு சுடுகாடாகிக் கொண்டிருக்கிறது. இதனை தமிழகத்தின் கவனத்துக்கும் இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகளின் கவனத்துக்கும் கொண்டு வர வேண்டிய காலம் வந்துவிட்டது. இதை நீங்களும் உங்கள் அமைப்பும் செய்யவேண்டும் அண்ணா... நிச்சயம் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டு உள்ள இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் துரோகத்தை நீங்கள் தமிழகத்தின் கவனத்துக்கு கொண்டு வர உதவுவீர்கள் என நம்புகிறோம்” என நீளுகிறது அந்தக் கடிதம்.






பிரபாகரன் கடிதம்

இத்தனை ஆண்டுகள் கழித்து பிரபாகரன் கடிதத்தை வெளியிட்டதன் நோக்கம் என்ன என்று வைகோவிடம் கேட்டோம். “தலைவர் பிரபாகரன் என் மீது எவ்வளவு நம்பிக்கையும், மதிப்பும் வைத்திருந்தார் என்பதற்கு இந்தக் கடிதமே சாட்சி. கடந்த நான்கைந்து வருடங்களாக இதைப்பற்றியே யோசித்துக் கொண்டு இருந்தேன். ‘தமிழ் ஈழம்’ என்ற உணர்வு மீண்டும் கிளர்ந்து எழ வேண்டிய காலம் இது. மொத்தமாகவே இன அழிப்பு நடந்துகொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், இந்தக் கடிதம், ஈழ உணர்வாளர்கள் மனதில் ஒரு எழுச்சியை உருவாக்கும் என்று மனதில் பட்டது. எனவே, வாழ்க்கையில் சில நல்லவற்றை வெளி உலகுக்குக் காட்டாமல் போவது நல்லதல்ல, இனியும் தாமதிக்கக் கூடாது என்றுதான், தலைவர் பிரபாகரன் கடிதத்தை வெளியிட்டேன்.” என்றார்.

ஜூனியர் விகடன்

# வரலாறு காணாத "எழுக த
# அதிகாரத்தில் உள்ளவர்க



எனதருமை தமிழ் பேசும சகோதர சகோதரிகளே!

"எழுக தமிழ்" பேரணியில் பெருந்திரளாக கலந்து கொண்டு தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக எமது உரிமைக் கோரிக்கைகளை வெளிப்படுத்தவும் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக எமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும் எமது அரசியல் ரீதியான எதிர்பார்ப்புக்களை உலக றிய விரும்புவதற்கும் இங்கே கூடி யிருக்கின்ற எனதருமை மக்களே!

இந்தப் பேரணி வரலாறு காணாத பேரணி!

இது ஆட்சியில் அல்லது அதிகாரத்தில் உள்ள எவரையும் எதிர்த்து நடத்தப்படும் பேரணி அல்ல. நாம் எமது மத்திய அரசை எதிர்த்து இதை நடத்தவில்லை! சிங்கள சகோதர சகோதரிகளை எதிர்த்து நடத்தவில்லை! பௌத்த சங்கத்தினரை எதிர்த்து நடத்தவில்லை! ஏன் இலங்கைத் தமிழரசுக் கட்சியை எதிர்த்துக் கூட நடத்தவில்லை. கொள்கையளவில் அவர்கள் எம்மை ஆதரித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். பலர் எம்முடன் இங்கு வந்தும இருக்கின்றார்கள். அவர்கள் இச்சந்தர்ப்பம் சரியானதா என்றுதான் கேட்கின்றார்கள். அதில் எமக்குள் கருத்து வேறுபாடு. அவ்வளவுதான். இதுபற்றி நான் பின்னர் குறிப்பிடுவேன்.

ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது இன்றைய காலகட்டத்தில் பாராளுமன்றத்திற்குத் தெரியப்படுவதாலோ மாகாணசபைகளுக்குத் தெரியப்படுவதாலோ எமது உரிமைகளை நாம் வென்றெடுத்துக் கொள்ள முடியாது. மக்கள் சக்தி எமது அரசியல் பயணத்திற்கு அவசியம். அதனால்தான் தமிழ் மக்கள பேரவையின் இணைத் தலைவர் பதவியை நான் ஏற்றேன். 2009ஆம் ஆண்டு மே மாத காலத்தின் அனர்த்த அழிவுகளின் பின்னரான தமிழ் மக்களின் விடிவுக்கான தீர்வு சம்பந்தமாக ஏற்கனவே எமது தேர்தல் விஞ்ஞாபனங்கள் பல கூறியுள்ளன. அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் பாரிய முரண்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே சில அடிப்படைக் கொள்கைகளை கட்சிகளும் மக்கள் சமூகமும் ஏற்றுக் கொண்டால் எல்லோரும் சேர்ந்து வேலை செய்வது கடினமாக இருககாது. 2009ஆம் ஆண்டில் பல கட்சிகளை ஒன்றுபடுத்தும் 6 பேர் கொண்ட குழுவை கொழும்பில் அமைத்தபோது சிவில் சமூகம் பெரும் பங்காற்றியது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நான் அரசியலில் அப்போது இல்லாதிருந்தும் அவ்வாறான ஒருங்கிணைதலை அப்போதே வரவேற்றேன். மக்களும் மக்கட் பிரதிநிதிகளும் சேர்ந்தால்தான் எங்களுக்கு மதிப்பு. ஆகவே உங்கள் ஊக்கமும் உற்சாகமும் உறுதுணையும் மக்கட் பிரதிநிதிகளுக்கு ஊட்டச் சத்துக்களை வழங்குவன என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

நாம் எமது தமிழ் பேசும் மக்களின் கரிசனைகளை, கவலைகளை ஆகக்கூடியது எமது கண்டனங்களை வெளிப்படுத்தி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவே இந்தப் பேரணியை நடத்தியுள்ளோம்.

எம் வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பலத்த சந்தேகங்களிலும் ஐயப்பாடுகளிலும் மனச்சஞ்சலத்திலும் இருக்கின்றார்கள். அவர்களின் அந்த மனோநிலையை, மனக்கிலேசங்களை, ஊரறிய, நாடறிய, உலகறிய உரத்துக் கூறவே இங்கு கூடியுள்ளோம்.

எமது கரிசனைகள் என்ன?

பௌத்தர்கள் வாழாத இடங்களில் பௌத்த விகாரைகளும் புத்த சிலைகளும் ஏன்? எம்மை மதத்தின் ஊடாக ஆக்கிரமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா? எமது பிரதேசங்களின் குடிப்பரம்பலை மாற்றத்தான் இவை நடைபெறுகின்றனவா என்பது எமது முதலாவது கரிசனை.

சிறையில் உண்ணா விரதம் இருக்கும் எமது இளைஞர்களின் குரல்கள் எவருககுங் கேட்காதது ஏன்? அவர்கள் இறந்தாலும் பரவாயில்லை என்ற ஒரு காழ்ப்புணர்ச்சி எங்கோ ஒரு அதிகார பீடத்தின் அடி மனதில் ஆழப்பதிந்துள்ளதா? போர் முடிந்து ஏழு வருடங்களின் பின்னர் கூட கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுவது எம்மால் சகிக்கமுடியாத தொன்றாக இருக்கின்றது. புதிய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழும் 17இற்கு அதிகமான சித்திரவதை நடவடிக்கைகள் பதிவு செய்யபபட்டுள்ளன என்றால் எமது கூட்டான மனோநிலைகளில் மாற்றமேற்படவில்லையா என்று கேட்கத்தான் தோன்றுகின்றது.

காணாமற் போனோர் பற்றி இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? காணாமற்போனவர் காரியாலயம் காலத்தைக் கடத்தும் கருவுத் திட்டமா? போர் முடிந்து ஏழு வருடங்களுக்குப் பின்னரே இக் காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது. அதுவும் சர்வதேச நெருக்குதல்களின் காரணமாக! இன்னமும் எவ்வளவு காலஞ் சென்றால் படையினரிடம் கையளிக்கப்பட்ட, சரணடைந்த அல்லது தஞ்சமடைந்த எம் மக்கள் பற்றித் தரவுகள் கிடைக்கப் பெறலாம்?

போர்க்குற்ற விசாரணை சம்பந்தமாக இதுவரை எடுக்கப்பட்ட திடமான நடவடிக்கைகள் என்ன? எம் மக்கள் குழம்பிப் போயுள்ளார்கள்.

## உரிமைக்கோஷத்தை உலகறியும் வ

இதற்கான விளக்கங்களை யார் தருவார்கள்? அவற்றைக்கோரியே இந்தப்பேரணி.

நாவற்குழியில், முருங்கனில், வவுனியாவில், முல்லைத்தீவில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இது எதற்காக? எமது தனித்துவம் பேணப்படும், எமது உரித்துக்கள் வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறிவரும் இவ்வேளையில் இவ்வாறான குடியேற்றங்கள் எமது மக்களுக்குக் குழப்பத்தை விளைவிக்கின்றன. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் படிப்படியாக இலங்கை பூராகவும் வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள் அடித்து துரத்தப்பட்டு வெளிநாடுகள் சென்றவர்கள் போக பெரும்பாலானவர்கள் வடக்கு கிழக்கில் தங்கள் தாயகப் பிரதேசங்களில் அவர்கள் தஞ்சம் புக, இங்கும் வந்து எமது இன அடையாளங்களை அழிக்கவும் குடிப்பரம்பலை மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றால் இக் குழப்பத்தை யாராவது தீர்த்து வைப்பார்களா என்று கேட்டு வைக்கவே இந்தப் பேரணி! இது யாருக்கும் எதிரானதல்ல? ஆனால் எமது வடமாகாணத்தில் நடைபெறும் பல நடவடிக்கைகள் பற்றி நாம் அறிய விரும்புகின்றோம். அவற்றிற்கான காரணங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றோம். உதாரணத்திற்கு ஏன் சிங்கள முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்திற்கு மத்திய அமைச்சர்களுடனான ஒரு செயலணி வேண்டியிருக்கின்றது? மற்றைய மக்களின் மீள்குடியேற்றத்திற்கு செயலணி வேண்டாமா?, இந்தியாவில் இருந்து வரும் எமது இடம் பெயர்ந்தோர் சம்பந்தமாக போதிய கவனம் செலுத்தியுள்ளோமா?

கேரதீவில் உப்பளம் அமைக்க மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அது பற்றி எமக்கு எதுவுமே தெரியாது. பாதிக்கப்படும் எமது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எம்மைப் புறக்கணித்து மத்திய அரசாங்கம் எமது வடமாகாணத்தில் இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவதன் சூட்சுமம் என்ன?

போர் முடிந்து ஏழு வருடங்கள் ஆன பின்னரும் இராணுவம் பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அவற்றில் பயிர் செய்து பயன்களை அனுபவிப்பதன் அர்த்தம் என்ன? உல்லாச விடுதிகள், விவசாயப் பண்ணைகள், தனியார் வாசஸ்தலங்கள் தொடர்ந்து படையினரின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் நியாயம் என்ன? ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் அனைத்தையும் விடுவிக்காததன் காரணம் என்ன? மேலும் பல ஏக்கர் மக்கள் காணிகளை இப்பொழுதும் புதிதாகக் கையகப்படுத்தும் இராணுவத்தினரின் நடவடிக்கை எம் மக்களின் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

போர்க்குற்றப் பொறிமுறை கலப்புப் பொறிமுறையாக இருக்க வேண்டும் என்பது 2015ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாத சர்வதேச எதிர்பார்ப்பு. வெளிநாட்டு வழக்கு நடத்துநர், வெளிநாட்டு நீதிபதிகள், சர்வதேச போர்க் குற்ற சட்டத்தை உள்ளேற்றல் போன்றவை இல்லாது கலப்பு பொறிமுறையை நிராகரித்து மீண்டும் உள்ளகப் பொறிமுறையை மட்டும் எமது நல்லாட்சி அரசாங்கம் நாடுவது எமக்குச் சந்தேகங்களை எழுப்பியுள்ளது. பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்காமற் செய்ய எடுக்கப்படும் முன்னேற்பாடுகளா இவை என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இவை மட்டுமல்ல. எமது வடக்கு கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரங்கள் இப்பொழுதும் பறிக்கப்பட்ட நிலையிலேயே அவர்கள் காலத்தை ஓட்டி வருகின்றார்கள். தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு கிழக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவது மாத்திரமன்றி எமது மீனவர்களின் படகுகளை சட்டவிரோதமாகப் படையினர் உதவியுடன் கைப்பற்றுகின்றார்கள், வாடிகளை அமைக்கின்றார்கள். சட்டவிரோத மீன்பிடி முறைகளைக் கையாள்கின்றார்கள். கடல் வளங்கள் சூறையாடப்படுகின்றன. இந் நடவடிக்கைகளால் எமது வடக்கு கிழக்கு பொருளாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது. மயிலிட்டித் துறை

(யாழ்ப்பாணம்)

***தமிழ் மக்கள் பேரவையின் ஏற்ப மக்கள் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், மா மக்களின் பேராதரவுடன் எழுக தமிழ் தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இ பேரணி யாழ்.நகர் முற்றவெளி மை ந்திருந்தது. இதன் போது எழுக த காண் முதலமைச்சர் சி.வி.விக்னே ஆதரவினை வெளிப்படுத்திய அவரத***



முகம் இன்னமும் மக்களிடம கையளிக்கப்பட சொல்வது? சொன்னாலும் தீர்வுகள் கிடைக் செய்யத்தான் இந்தப் பேரணி.

வடக்கு கிழக்கில் 2009 ஆம் ஆண்டு மே பொருட் பாவனை இல்லாமல் இருந்தது. இத அதிகாரிகள் கூட ஏற்றுக் கொண்டுள்ளனர். 20 பின்னர் சுமார் ஒன்றரை இலட்சம் படையினர் ப வடக்கு கிழக்கில் குடியமர்ந்து இருக்கும் நி பொலிஸாரை எமது பொலிஸ் நிலையங்க நிலையில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான வந்தடைகின்றது. மேலும் ஹெரோயின் போன்ற தடைகின்றன. அதிகப்படியான மதுசாரமும் வி சட்டமும் ஒழுங்கும் எங்களின் கைவசம் இல் எவ்வாறு சாத்தியமாகியுள்ளன அல்லது இவை ஏ இளஞ் சந்ததியினரைத் திட்டமிட்டு அழிக்கும் ஒரு கேள்விக்கு யார் பதில் தருவார்கள்? இதனை சகோதர சகோதரிகளிடமும் உலக நாட்டு மக்களி தனியாகச் சொன்னால் எவரும் கேட்க மறுக்கின்ற பயின்று வந்து பலராகக் கேட்கின்றோம். எம படுத்துகின்றோம். மக்கட் பிரதிநிதிகளும் மக்கள

அடுத்து அரசியல் யாப்புக்கு வருவோம். தொ ரீதியாக வஞ்சிக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆ உள்ளூர் வாசிகளுக்கு வழங்கப் போகின்றார்கள் ஆண்டில் இருந்தே அதிகாரத்தைத் தம் கை பான்மையின மக்கட் தலைவர்கள் காங் முழுமையாக பெரும்பான்மையின மக்களிடம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது "இவ்வளவ கொஞ்சம் தருகின்றோம்", "சரி! இவ்வளவு த கேட்கப்படாது" என்றெல்லாம் பேரம் பேசி வருகி

இது இவ்வளவுக்கும் தமிழ் பேசும் மக்க வருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் வசித்து வருகின்றார்கள். இங்கு சிங்கள மக்கள் சிங்கள மொழி நடைமுறைக்கு வந்ததே கி.பி. தமிழ் மக்கள் பௌத்தர்களாக சில நூறு வருட பௌத்த மத எச்சங்கள் வடக்குக் கிழக்கில் அப்படியிருந்தும் எம்மை வந்தேறு குடிகள் என்ற

# தமிழ்" எழுச்சிப்பேரணிக்கு
# கள் பதில் கூற வேண்டும்!

## யும் வகையில் வடக்கு முதலமைச்சர் முழக்கம்

*யின் ஏற்பாட்டில் அரசியல் கட்சிகள், பொதுஅமைப்புக்கள்,
தகர்கள், மாணவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழ்
எழுக தமிழ் மாபெரும் மக்கள் எழுச்சி பேரணி நேற்றைய
கப்பட்டது. யாழ். நல்லூர்கந்தசுவாமி கோவில் சுற்றம் மற்றும்
ாகத்தில் இருந்து இரு அணிகளாக ஆரம்பிக்கப்பட்ட இப்
வெளி மைதானத்தை முற்பகல் 11 மணியளவில் வந்தடை
ழுக தமிழ் மக்கள் பேரணிக்காக விசேட உரையினை வடமா
வி. விக்னேஸ்வரன் நிகழ்த்தியிருந்தார். மக்களின் ஏகோபித்த
திய அவரது உரை முழுமையாக இங்கே தரப்படுகிறது.*



கையளிக்கப்படவில்லை. இவற்றை யாரிடம்
வுகள் கிடைக்குமா? இவற்றை உலகறியச்

ம் ஆண்டு மே மாதம் வரையில் போதைப்
இருந்தது. இதனை மத்திய அரசாங்க உயர்
டுள்ளனர். 2009ம் ஆண்டு மே மாதத்தின்
் படையினர் பாதுகாப்பு என்ற போர்வையில்
இருக்கும் நிலையில், பெரும்பான்மையினப்
நிலையங்களில் பதவியில் நிறுத்தியுள்ள
கணக்கான கிலோ கஞ்சா வட பகுதியை
ாயின் போன்ற போதைப் பொருட்களும் வந்
துசாரமும் விற்பனையாகின்றன. இது எப்படி?
கைவசம் இல்லை. அப்படியானால் இவை
ல்லது இவை ஏன் நடக்கின்றன? இவை எமது
அழிக்கும் ஒரு செயற்பாட்டின் அங்கமா என்ற
கள்? இதனை எமது பெரும்பான்மையின
நாட்டு மக்களிடமும் கேட்கவே இந்தப் பேரணி.
ட்க மறுக்கின்றார்கள். ஆகவே நாங்கள் நடை
ன்றோம். எமது மனக்கிலேசத்தை வெளிப்
திகளும் மக்களும் சேர்ந்து கேட்கின்றோம்.
ருவோம். தொடர்ந்து தமிழ் மக்கள் அரசியல்
ர்ளார்கள். ஆங்கிலேயர் அதிகாரங்களை
போகின்றார்கள் என்று தெரிந்ததும் 1919ஆம்
தத் தும் கை வசம் வைத்திருக்கப் பெரும்
கள் காங்கிரசைக் கட்டிவிட்டார்கள். அதிகாரம்
ன மக்களிடம் சென்றுவிட்டது. எமது மக்கள்
ாது "இவ்வளவு தருகின்றோம்", "இன்னும்
இவ்வளவு தான் இதற்கு மேல் எதுவும்
ம் பேசி வருகின்றார்கள்.
பேசும் மக்கள் காலாதி காலமாக 2000
கிழக்கில் பெரும்பான்மையின மக்களாக
ங்கள மக்கள் எப்பொழுதும் வசிக்கவில்லை.
வந்ததே கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில்.
ல நூறு வருட காலம் மாறியிருந்தமையே
க் கிழக்கில் காணப்படுவதற்கு காரணம்.
ு குடிகள் என்றும் வடக்குக் கிழக்கில் சிங்கள

மக்கள் முன்னர் வாழ்ந்தார்கள் என்றும் அவர்கள் விரட்டப்பட்டு விட்டனர் என்றும் புதிய சரித்திரத்தை வேண்டுமென்றே எழுதத் தொடங்கிவிட்டனர். தாம் எழுதிய புதிய சரித்திரத்தின் அடிப்படையிலேயே இவ்வளவு தருகின்றோம் இன்னும் கொஞ்சம் தருகின்றோம் என்று பேரம் பேசத் துணிந்துள்ளார்கள்.

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். அவர்களுக்குச் சுயாட்சி கொடுப்பது காலத்தின் கட்டாயம். இந்த நாடு சமாதானத்துடனும் நல்லுறவுடனும் அரசியல். சமூக, பொருளாதார விடிவை நோக்கிப் பயணிக்க விரும்பினால் சமஷ்டி அரசியல் முறையொன்றே அதற்குத் தீர்வாக அமையலாம். இதில கட்சிகளும் மக்களும் உறுதியாக இருக்கின்றனர். ஒற்றையாட்சியானது அதிகாரங்களைத் தொடர்ந்து பெரும்பான்மையின மக்களின் கைகளிலேயே தேக்கி வைக்கச் செய்யும். தமிழ் பேசும் மக்களும் சிங்கள மொழி பேசும் மக்களும் சுமுகமாக சம அந்தஸ்துடன் நல்லுறவுடன் இனியாவது வாழ்வதானால் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமையை மதித்து சுயாட்சி வழங்குவதே ஒரே வழி. அதனால் தான் நாங்கள் சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்தி வருகின்றோம். அதற்கேற்ற வாறு அரசியல் யாப்பு பற்றிய நகர்வுகள் நடப்பதாகத் தெரியவில்லை. ஏனோ தானோ என்று மூடி மெழுகி ஒரு அரசியல் தீர்வைத் தரலாம் என்று தெற்கு நினைப்பதாக எமக்குத் தோன்றுகின்றது. எமக்குத் தரவேண்டிய உரித்துக்கள் எமது குழுமம் ரீதியான உரித்துக்களே அன்றி தனிப்பட்டவர்களுக்கு அளிக்கும் உரித்துக்கள் அல்ல.

வடக்கு கிழக்கை இணைக்க வேண்டும் என்று நாம் கேட்பதை ஏதோ கேட்கக் கூடாததை நாம் கேட்பதாகத் தெற்கில் நோக்கப்பட்டு வருகின்றது. பல தமிழ் பேசும் மக்களால் கூட அவ்வாறே நோக்கப்படுகின்றது.

நாங்கள் வடக்கு கிழக்கு இணைப்பைக் கேட்பதன் காரணம் என்ன? ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்தது. தமிழ், சிங்கள மொழிகள் இரண்டுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டு வந்தது. ஆங்கிலேயரிடம் இருநது நாடு எமக்குக் கைமாறியதும் பெரும்பான்மையினர் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து சிங்கள மொழியின் ஆதிக்கத்தை நாடு பூராகவுந் திணித்தனர். முழு நாடும் சிங்கள பெளத்த நாடே என்ற சரித்திர ரீதியாக ஏற்றுக் கொள்ளப் படமுடியாத கரு த்தை அதன் பின் வெளிவிட்டனர். ஆகவே சிங்கள மொழியையும் பௌத்த மதத தையும் பௌத்த சிங்களவர மிகக்குறைவாக வாழும பிரதேசங்களில் கட்டாயமாகத் திணிக்கக்கூடும் என்ற பயம் எமக்கு இருக்கின்றது. அந்த வழியில்தான் அண்மைக் கால நடவடிக்கைகள் தெற்கிலிருந்து முடுக்கி விடப்பட்டுள்ளன. இது 1972ஆம் ஆண்டின அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த பின்னரே கூர்மம் பெற்று வருகின்றது. வெந்நீரூற்று கோயில்கள் கட்டுவது பற்றி புத்த சிலைகள் அமைப்பது பற்றி ஏற்கனவே கூறிவிட்டேன்.

தமிழ் பேசும் எமது பிரதேசங்களில் இன்னமும் சிங்கள மொழியிலேயே முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் எழுதிக் கொள்ளப் படுகின்றன. மொழிபெயர்ப்புக்களைத் தருவதாகச் சென்ற கிழமை கூட எமக்கு அறிவிக்கப்பட்டது. எமது வடக்கு கிழக்குப் பிராந்தியங்களில் எமது பாரம்பரிய மொழியில் நடவடிக்கைகளை நடத்திச் செல்ல எமக்கு உரித்தில்லை. எமது காணிகள் பறி போகின்றன. இராணுவம் மாகாணத்திற்கு வெளியில் இருந்து வருபவர்களை இங்கு குடியிருக்கச் சகல வசதிகளும் செய்து கொடுக்கின்றார்கள். எனவே வடக்கு கிழக்கைச் சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு வருவதால் எமது மொழியையும் மதங்களையும், பாரம்பரியங்களையும் பாதுகாக்க வடக்கு கிழக்கு இணைப்பைக் கோரி நிற்கின்றோம். வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் என்பதை வலியுறுத்தவே வடக்கு கிழக்கு இணைப்பு அத்தியாவசியம் ஆகின்றது.

அதனை சிங்கள மக்கள் ஏற்பார்களா என்றதொரு சந்தேகம் எம்மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

உண்மையைச் சிங்கள மக்கள் ஏற்க வேண்டும் என்பதே எமது வாதம். வடக்கு கிழக்கில் பாரம்பரியமாக தமிழ் பேசும் மக்களே வாழ்ந்தார்கள் என்பதை சிங்கள மக்கள் ஏற்காவிட் டால் சர்வதேச வரலாற்றாசிரியர்களை அழைத்து நாம் கூறுவது சரியா அல்லது அண்மைக் காலங்களில் பெரும்பான்மையினர் கூறிவருவது சரியா என்பதை ஆராய்ந்து பார்க்கட்டும். சிங்கள பௌதத மக்கள் பாரம்பரியமாகப் பல காலம் வாழ்ந்த வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் வந்தேறு குடிகளாக நுழைந்து ஆக்கிரமித்தார்கள் என்பது சரித்திர பூர்வமாக ருசுவாகினால் நாங்கள் வடக்கு கிழக்கு இணைப்புக்கான கோரிக்கையைக் கைவிடுகின்றோம். அண்மைய பல சரித்திர பூர்வ கண்டுபிடிப்புக்கள், தொல் பொருள் ஆராய்ச்சிகள் நவீன தொழில்நுட்ப பொறி முறைகளின் அடிப்படையில் தமிழ் மக்களின் வடக்கு, கிழக்கு நீண்ட கால இருப்பை ருசுப் படுத்துவதாகவே அமைந்துள்ளன.

திடீரென்று ஒரு அரசியல் யாப்பைத் தமிழ்பேசும் மக்கள் மீது திணிப்பதை நாம் ஏற்க மறுக்கின்றோம். சிங்கள மக்கள் எதிர்க்கக் கூடும் என்பதற்காக எங்கள் உரிமைகளை எந்த அரசாங்கமும் சிதைக்க முயற்சிக்கக் கூடாது. 18 தடவைகள் சென்ற அரசாங்கம் இருந்த காலத்தில் பல கலந்துரையாடல்கள் இரகசியமாக தமிழ் மக்கட் தலைவர்களுக்கும் அப்போதைய அரசாங்கத்திற்குமிடையில் நடைபெற்றன. அவை பற்றி எதனையும் எவரும் வெளியிடவில்லை. அரசியல் யாப்புக்களினால் பாதிக்கப்படப்போகும் மக்கள் நாங்களே. எங்கள் கருத்துக்களைச் செவிமடுக்காவிடில் எமது இனத்தின் அவலங்கள், ஐயங்கள், அரைத்தாங்கள் தொடர்ந்தே செல்வன.

ஆகவேதான் இந்தப் பேரணி மூலமாக தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த கரிசனைகளை நாம் வெளிக்கொண்டுவரும் விதத்தில் இந்தப் பேரணியை கட்சிபேதமின்றி நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இத்தருணத்தில் ஏன் என்று கேட்கின்றார்கள் நம்மவரில் சிலர். இத்தருணத்தில் எமது கரிசனைகளை ஊரறிய, நாடறிய, உலகறிய கூறாவிடில் பின் எப்பொழுது கூறப் போகின்றோம்? எமது எதிர்பார்ப்புக்கள் வரப்போகும் அரசியல் யாப்பினால் திருப்திப்படுத்தப்படுவன என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதுவரை காலமும் தம் கைவசம் வைத்திருந்த அதிகாரத்தை எம்முடன் பெரும்பான்மையினத் தலைவர்கள் நியாயமாகப் பகிர்ந்து கொள்வார்கள் என்று நாம் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறு பகிர்ந்தார்களேயானால் எமக்கு மகிழ்ச்சி. இல்லை என்றால் எமது கரிசனைகளை எப்பொழுது நாம் வெளிக்காட்டப் போகின்றோம்?

மத்தியின் மேலாதிக்கம் தற்பொழுதும் தொடர்கின்றது. இராணுவ பிரசன்னம் தொடர்கின்றது. ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. அரசியல் கைதிகள் பிரச்சினை தொடர்கிறது. காணாமற் போனோர் பிரச்சினை தொடர்கின்றது. மதரீதியான ஆக்கிரமிப்பும் தொடர்கின்றது. வடமாகாண மக்கட் பிரதிநிதிகளைப் புறக்கணிக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. இந்த நேரத்தில் எமது கரிசனைகளை நாம் வெளிப்படுத்தாவிட்டால் எந்த நேரத்திலும் முடியாது போய் விடும். புதிய அரசியல் யாப்புத் தயாரித்தலானது எமது கரிசனைகளை உள்ளேற்க வேண்டும். இணைந்த வடக்கு கிழக்கு சமஷ்டி அலகை உறுதிப்படுத்தும் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இறுதித் தீர்வு கட்டியமைக்கப்பட வேண்டும். காணி, பொலிஸ், நிதி போன்ற அதிகாரங்கள் முழுமையாக எமக்கு வழங்கப்பட வேண்டும். இதனை சர்வதேச நாடுகள் உறுதிப் படுத்த வேண்டும். இராணுவம் படிப்படியாக குறிப்பிட்ட காலத்தினுள் வாபஸ் பெற வேண்டும். சட்டத்திற்குப் புறம்பாக புத்த விகாரைகள், சிலைகள் அமைப்பது நிறுத்தப்பட வேண்டும். பயங்கர வாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு தமிழ் பேசும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக நடைபெற வேண்டும். காணாமற் போனோர் பற்றிய உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். இவற்றையெல்லாம் வலியுறுத்தவே இந்தப் பேரணி. இவ்வாறான எமது கரிசனைகளைக் கருத்தில் கொள்ளாது அவற்றிற்குத் தீர்வைக் காணாமல் நல்லிணக்கம் பற்றியும் புதிய அரசியல் யாப்புப் பற்றியும் பேசுவது கரத்தையைக் குதிரைக்கு முன் பூட்டுவதற்கு ஒப்பானது.

எமது சிங்கள சகோதர சகோதரிகள் ஏன் எமது இராணுவ, கடற்படை, விமானப் படை சகோதர சகோதரிகள் எமது மனோநிலையைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம். எமது இன்றைய கேள்விகளுக்குப் பதில் கூற அதிகாரத்தில் உள்ளோர் கடமைப்பட்டுள்ளார்கள் என்று கூறி என் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

**வாழ்க தமிழ்! எழுக தமிழ்!**
**நன்றி, வணக்கம்**
**நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்,**
**முதலமைச்சர், வடமாகாணம்.**

# சிறுகதை



**டும்** டும் டும்......

பெரும் இடியோசை போன்ற அந்த சத்தத்தினால் துள்ளியெழுந்து கட்டில் நுனியில் அமர்ந்தேன். ஊ ...ஊ ...என்ற பேரிரைச்சலுடன் விண்ணைக் கிழித்தவாறு மூன்று எறிகணைகள் எங்கள் வீட்டின் மேலாக பறந்து சென்றன. "சண்டை தொடங்கீற்று" என் மனைவி படுத்திருந்தபடி குரல் கொடுத்தாள். மீண்டும் எறிகணைகள் அதே போல் பறந்து சென்றன. ஓடிச் சென்று வாசல் கதவைத் திறந்தேன். எங்கே போகிறது பார்ப்பம் என்று கூறி முற்றத்திற்கு வந்தேன். மனைவியும் என் பின்னே வந்திருந்தாள். கிழக்குப் பக்கமாக வெளிச்சங்கள் தென்பட்டன. அவை பராலைட் வெளிச்சங்கள் "முகமாலை" என நான் முணுமுணுத்தேன். "சண்டை தொடங்கிற்று, நீங்கள் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை" என்றாள் என் மனைவி. அவள் குரலில் குதூகலம் தெரிந்தது.

நான்கு மணிக்கு வைத்த அலாரம் அடித்தது. "குழந்தை" என்று ஓடிச் சென்றாள் மனைவி. சிறிது நேரத்தில் உலகமே அமைதியானது போல் இருந்தது. ஸ்கூலுக்குப் போக வேண்டும் என மனைவியிடம் கூறினேன். சமையல் வேலைகளில் அவள் இறங்க, பாட ஆயத்த வேலைகளில் நான் மூழ்கிப் போனேன். 5.40 மணியளவில் நான் வேலைக்குப் போகத் தயாரானேன். அடையாள அட்டை, பேர்ஸ் என்பவற்றை கவனமாகப் பொக்கற்றினுள் வைத்தேன். சாப்பாடு, தண்ணீர் எல்லாம் என் மனைவி என் பாக்கில் வைத்தாள். புறப்படத் தயாராகும் முன் அறைக்குச் சென்று என் செல்ல மகனை முத்தமிடக் குனிந்தேன். நித்திரையாய் இருக்கும் குழந்தையை கொஞ்சக் கூடாது என என் அம்மா தடுத்தார். அதில் எனக்கு உடன்பாடில்லை. குனிந்து அவன் முகத்தைப் பார்த்தேன். நித்திரையில் உதட்டோரம் புன் சிரிப்பு சுழித்து நின்றது. குழந்தைகளாய் நாமும் மாறினால் எவ்வளவு நல்லம் என ஒரு கணம் எண்ணத் தோன்றியது.

நான் எனது மோட்டார் சைக்கிளை கைதடி மலாயன் கபே கடைக்குப் பின்னால் விட வேண்டும். அதற்குப் பின் 6 மணிக்கு வரும் முகமாலை செல்லும் பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். இது என் வழமையான விடயம். சீரான சராசரி வேகத்தில் என் மோட்டார் சைக்கிள் முன்னோக்கி ஓட என் மனமோ பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் உரும்பிராய் மருதனார்மட றோட்டில் வைத்து ஒருவரைச் சுட்டிருக்கிறார்கள். புலிகளின் இரு கிளைமோர்த் தாக்குதல் அடுத்தடுத்து நடந்த பிற்பாடு இவ்வாறான சூடு பரவலாக நடக்கத் தொடங்கியுள்ளது. எவரைச் சுடுகின்றனர், ஏன் சுடுகின்றனர் எனத் தெரியவில்லை. பயப் பீதியுடன் வைத்திருக்க அவர்கள் விரும்புவதாக யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன்.

கோப்பாய் சந்தி வர வேகத்தைக் குறைத்து கடக்க முற்பட்டேன். மறுகரையில் நின்ற ஆமிக்காரன் என்னை மறித்து இறங்கி வரச் சொன்னான். அவன் முகத்தில் பதற்றம் இருந்தது.

"எங்க போறது" கொச்சைத் தமிழில் அவன் கிளிநொச்சி.. ரீச்சர் ... இது நான். "ஜொப் ஐ.சியை தாங்க"

"புதுசு இன்னமும் தரேல"

புலிகள் தந்த அடையாள அட்டையில் ஆசிரியர் என போட்டிருக்கு. ஆனால் அதனை ஒளித்து வைத்திருந்தேன்.

சரி போங்க போங்க என பக்கத்தில் நின்றவன் பச்சைக் கொடி காட்டினான். அவன் என்னை அடிக்கடி பார்த்திருப்பான். மெல்ல வெளிக்கிட்டு கோப்பாய் வெளியில் போய்க் கொண்டிருந்தேன். கண்ணுக்கெட்டிய தூரம் யாரும் இல்லை. மெல்ல மெல்ல நிலம் வெளுத்துக் கொண்டிருந்தது. என்னமோ என் மனம் பயந்து கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிள் கண்ணாடியை அவதானித்த போது தூரத்தில் ஓர் மோட்டார் சைக்கிள் வருவது தெரிந்தது. முதுகு கூசியது. கடவுளை அவசர அவசரமாக துணைக்கு கூப்பிட்டேன். என் பிள்ளையின் முகம் கண்முன் வந்தது.

மோட்டார் சைக்கிள் மிக அருகில் வந்து விட்டது. அவர்கள் சேர் நாங்க போறம். நீங்க வாங்க என்று கத்தியபடி சென்றார்கள். எனக்கு தைரியம் பிறந்தது. நானும் அவர்களைப் பின் தொடர்ந்து வேகமாகச் சென்றேன். அவர்கள் மடுவில் கற்பிக்கும் ஆசிரியர்கள். பின்னால் அவர்களது உடுப்பு பைகளுடன் காற்றடிக்கும் பம்பியையும் கொண்டு சென்றார்கள். திங்கள் போய் வெள்ளி வருவார்கள்.

கைதடி வந்தது. நான் அவர்களுக்கு கையசைத்து விடை கொடுத்தேன். மோட்டார் சைக்கிளை உரிய இடத்தில் விட்டு பஸ் தரிப்பிடத்திற்கு ஓடி வந்தேன். நேரம் 5.55 எனக் காட்டியது. சிறிது நேரத்தில் இ.போ.ச.பஸ் ஒன்று வந்த போது அதில் தொற்றிக் கொண்டேன்.

கொடிகாமத்தில் பஸ் நின்றது. மற்றவர்கள் இறங்க வழிவிட்டு நின்றேன். எல்லோரும் இறங்கினார்கள். சேர் இறங்குங்கோ. முகமாலை போகாது என்று அந்த சேர் என் தோளில் தட்டினார். இறங்கினோம். கொடிகாமம் பஸ் ஸ்ராண்ட் சனத்தால் நிரம்பி இருந்தது. பருத்தித்துறையில் இருந்து அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பிறிதொரு பஸ்ஸில் இனி ஏற வேண்டும். நிற்கும் சனத்தைப் பார்த்தால் போட்டி போட்டுத்தான் ஏற வேண்டும்.

யாழ்ப்பாணப் பக்கமாக இருந்து தனியார் வான் ஒன்று வந்து நின்றது. வரும் போதே சனத்தை அள்ளிப் போட்டு ஒரு பக்கம் சரிந்த வண்ணம் வந்து நின்றது. கன்டெக்ரர் பெடியன் வாங்கோ இடம் இருக்கு, வாங்கோ இடம் இருக்கு என்று கத்தினான். தொங்கிக் கொண்டு வந்தவர்கள் பிறர் ஏற இடம் விட்டு இறங்கினர். நாம் ஏறாது உருத்திரபுரம் செல்லும் ஆசிரியர் இருவரை ஒருவாறு ஏற்றிவிட்டோம். கீழே நின்றவர்கள் மீண்டும் தொற்றிக் கொண்டனர். கால் வைக்கக் கூட இடம் இல்லை. கன்டெக்ரர் பெடியன் "அண்ணை ரைட்" என்று சொல்லி விரல் நுனியில் தொங்கியபடி போனான். ஏறாத எம்மீது கரும் புகையைக் கக்கி கோபத்தைத் தீர்த்துப் போனது அந்த வான். சில நிடத்தில் பருத்தித்துறை பஸ் ஒன்று வந்தது. அதைப் பிடித்து முகமாலைக்கு ஒருவாறு வந்து சேர்ந்தோம். பஸ் நிற்க முதல் சிலர் ஓட்ட வீரர்கள் போல் பாய்ந்து ஓடினர். பெண்களும் தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என எம்முன் ஓடினர். இது ஆமியின் செக் பொயின்ட். பெண்கள் வரிசையும், ஆண்கள் வரிசையும் தனித் தனியே நீண்டு காணப்பட்டது. நீண்ட மலைப் பாம்பு போல் மெல்ல மெல்ல நகர்ந்தது.

ஏது இண்டைக்கு மெனக்கெடுத்திறான் என முன்னாள் நின்றவர் முணுமுணுத்தார்.

விடியப் புறம் சினேப்பர் அடித்து மூன்று முடிசுதாம்.

அம்புலன்ஸில கொண்டு போனவங்க என்று இன்னொருவர்.

விடிகாலையின் எறிகணைத் தாக்குதலில் அர்த்தம் எனக்குப் புரிந்தது.

புலிகளைச் சோதனை செய்யும் இடம் வெறிச்சோடிக் கிடந்தது. புலிப் போராளிகள் அங்கே பதிந்து தான் போக வேண்டும்.

நான் செக் பொயின்டுக்குள் நுழைந்ததும் என் பாக்கை சோதனை செய்தான் ஒருவன். பின் மற்றையவன் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை தடவிப்பார்த்தான்.

நான் வெளியில் வந்து காவல் இருந்தேன். பஸ் இன்னும் சோதனை முடிந்து வரவில்லை. நான்காவதாக பின்னால் நின்றது. முன்வந்த பஸ்ஸில் தொற்றிக் கொண்டேன். பக்கத்தில் தான் புலிகளின் பொயின்ற். மாறி ஏறலாம்.

புலிகளின் பொயின்றுக்குள்ளும் ஓட்டம்தான். அங்கேயும் பல வரிசைகள். அரச உத்தியோகத்தர்கள், வியாபாரத்திற்கு வன்னி செல்பவர்கள், வன்னி தாண்டி (கொழும்பு) செல்பவர்கள், வன்னியில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என பல வரிசைகள். நான் ஓடிச் சென்று அரச உத்தியோகத்தர் வரிசையில் நின்றேன். எங்கள் அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு டோக்கன் இலக்கம் ஒன்று தந்தார்கள். இப்போ அதுதான் என் உயிர். என் பேர்சில் மிகப் பாதுகாப்பாக பக்குவமாக அதை வைத்தேன். வரும் போது அதைக் கொடுத்தால் தான் வீடு செல்லலாம். என் சக ஆசிரியர் ஒருவர் அதைத் தொலைத்து கனகபுரத்தில் உள்ள பாஸ் அலுவலகம் சென்று அவஸ்தைப்பட்டது எனக்குத் தெரியும். நானும் பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். ஒரே வியர்வை வியர்த்து ஒழுகியது. வாகனம் ஓடத் தொடங்க காத்துக் கொஞ்சம் வந்தது. உயிர் வந்தது போல் இருந்தது. எனினும் என் உடம்பு சான்விச் போல் நசுங்கிக் கிடந்தது. புளையில் கொஞ்சப் பேர் இறங்கிக் கொண்டனர். வான் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. முன்னாள் போன வாகனம் ஒன்று மேடு பள்ளம் நிறைந்த அந்த றோட்டில் புழுதியை வாரி இறைத்துச் சென்றது. வாகனத்தினுள் புரட்சிகரமான பாடல் ஒன்று போய்க் கொண்டிருந்தது. "ஓடு ஓடு ஓடு நீ ஓய்ந்து விட்டால் வரும் கேடு" என்னமோ எனக்கு அப்பாடல் பொருந்துவதாய்ப்பட்டது. பரந்தன் வந்தது. அதிலும் பலர் இறங்கினர். "செந்திரேசா சேர் முன்னுக்கு வாங்கோ" எனக் கன்டெக்ரர் அழைத்தான். அடுத்த இறக்கம் என்னுடையது. நேரத்தைப் பார்த்தேன். எட்டு மணி. இறக்கம் வந்ததும் இறங்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தேன். தலை குழம்பி உடுப்புக் கசக்கி இருந்தது. தலையைத் தடவி விட்டுக் கொண்டேன். செம்மண் புழுதி கைகளில் படிந்தது. கால் துவண்டு, உடம்பு களைத்திருந்தது. ஆனால் மனம் சோரவில்லை.

பாடசாலை மைதானத்தில் செந்திரேசா மாணவிகள் செம்பகப் பறவைகள் போல் காலைப் பிரார்த்தனைக்கு அணிவகுத்து நின்றனர். விரைந்து அலுவலகத்தை அடைந்து வரவுப் பதிவேட்டினை அணுகினேன். பேனாவைக் கையில் எடுத்து கையெழுத்திடப் போனேன். அங்கே சிவப்புக் கோடு எனைப் பார்த்துச் சிரித்தது. உடல் துவண்டு போனது. உள்ளம் வலியெடுத்து "ஓ" என அழுதது.

சிவகுருநாதன் சிறீரங்கன்
ஆசிரியர்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

# டிவில்லியர்ஸையே மிரட்டிய பவுலர்





தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் டி வில்லியர்ஸ் களத்தில் இருந்தால் எதிரணிக்கு அடி வயிறு கலங்கும். 'டிரைவ்' ஆடுவார் என பீல்ட் செட் செய்தால் ஸ்கூப் ஆடி, பீல்டர்களை மட்டுமல்லாது ரசிகர்களையும் குழப்புவார். என்ன ரகம் என வரையறுக்க இயலாத 360 டிகிரி பட்ஸ்மேன்.

எப்பேர்பட்ட பட்ஸ்மனுக்கும் ஒரு பவுலர் சிம்ம சொப்பனமாக இருப்பார் அல்லவா? அந்த வரிசையில் டி வில்லியர்ஸை அச்சுறுத்திய பவுலர் யார் என அவரது சுயசரிதை புத்தகமான, 'ஏபி: தி ஆட்டோபயாகிரபி'யை ஆச்சரியத்துடன் புரட்டினால், இதுவரை யாருமே கேள்விப்படாத ஒரு பவுலரின் பெயரைச் சொல்லி பிரமிப்பூட்டுகிறார். தவிர, இணையத்தில் உலவுவது போல, 'நான் மல்டி ஸ்போர்ட்ஸ் கில்லி அல்ல' என, ட்விஸ்ட் வைக்கிறார்.

**யார் அந்த பவுலர்?**

'நான் சந்தித்ததில் பெஸ்ட் பவுலர் யார் எனக் கேட்டால், உடனே என் நினைவுக்கு வரும் பெயர் ஜெரிட் டீஸ்ட். விரிவான விளக்கம் அளிக்க வேண்டும் என்பதால், பொதுவாக இந்த கேள்விக்கு ஊடகங்களிடம் பதில் சொல்வது இல்லை. ஆனால், அதுதான் உண்மை. ஜெரிட் டீஸ்ட்தான் எப்போதுமே எனக்கு அச்சுறுத்தலாக இருந்தார். நான் சந்தித்தில் பெஸ்ட் பவுலர் அவர்தான்' என டி வில்லியர்ஸ் சுயசரிதையில் மனம் திறந்துள்ளார்.

ஜெரிட் டீஸ்ட், டி வில்லியர்ஸை விட 11 வயது மூத்தவர். 'இடது கை வேகப்பந்து வீச்சாளர். 1999ல் தென்னாபிரிக்காவில் உள்ள நார்தெர்ன்ஸ் என்ற முதல்தர கிரிக்கெட் அணிக்காக விளையாடியவர். வேடிக்கை என்னவெனில், அவர் ஒரேயொரு முதல் தர போட்டியில் மட்டுமே ஆடியுள்ளார். அது, இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சன் ஒரு காலத்தில் தென்னாபிரிக்காவில் இருந்தபோது விளையாடிய நடால் அணிக்கு எதிராக. அந்த போட்டியில் ஜெரிட் வீழ்த்தியது 3 விக்கெட்டுகள்.

'அப்போது ஜெரிட் டீஸ்ட் வயது 22. என் வயது 11. அப்போது என் சகோதரர்கள் ஜான் மற்றும் வெஸ்ஸ், முன்னாள் தென்னாபிரிக்க வீரர் மார்டின் வேன் ஜார்ஸ்வெல்ட் ஆகியோருடன், 14 யார்டு பிட்ச்சில் கிரிக்கெட் விளையாடுவேன். ஜெரிட் டீஸ்ட் நல்ல உயரம். அபாரமான உடற்கட்டு உடையவர். நான் வார்ம்பாத்ஸ் பிரைமரி பள்ளியில் வெறும் கால்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஜெரிட் டீஸ்ட், ஜோகன்னஸ்பர்கில் உள்ள கிளப் அணிக்காக விளையாடிக் கொண்டிருந்தார். அவர் பந்து எப்போதுமே மிரட்டும் வகையில் இருக்கும். அன்று அவர்களுடன் ஆடிய அந்த ஆட்டம்தான் என்னை பின்னாளில் சிறந்த கிரிக்கெட் வீரனாக மாற்றியது' என்பது, டி வில்லியர்ஸ் கருத்து.

**நான் கில்லி இல்லை:**

டி வில்லியர்ஸின் திறமையைப் பற்றிச் சொல்லும்போது அவர் கிரிக்கெட் வீரர் மட்டுமல்ல, டென்னிஸ், தடகளம், நீச்சல், பட்மின்டன், ரக்பி, ஹொக்கி, காற்பந்து, கோல்ஃப் விளையாட்டுகளில் மன்னன் என்ற தகவல் உலவும். ஆனால், 'நான் அந்த விளையாட்டுகளில் பெரிதாக ஜொலிக்கவில்லை' என்கிற ரீதியில் 'சுயசரிதையில்' அடக்கமாக பதிலளித்துள்ளார் டி வில்லியர்ஸ்.

"சின்ன வயதில் நான் பல விளையாட்டுகளில் ஜொலித்ததாக இணையத்தில் தகவல்கள் பரவிக் கிடக்கின்றன. மக்கள் இதை உண்மை என நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது ஒரு வருடம் ஹொக்கி விளையாடினேன். ஆனால், தேசிய ஹொக்கி அணியில் இடம்பெறவில்லை. ஒருமுறை கூட அந்த இடத்தை என்னால் நெருங்க முடியவில்லை. தென்னாபிரிக்காவில் பள்ளிகளில் வார்ம் அப் செய்வதற்காக காற்பந்து விளையாட வேண் டும் என்பது கட்டாயம். அப்படித்தான் இடைவேளையின்போது காற்பந்து விளையாடினேன். மற்றபடி அங்கீகரிக்கப்பட்ட போட்டிகளில் விளையாடியதில்லை.

அதேபோல, ரக்பியிலும் எந்த மட்டத்திலும் தென்னாபிரிக்க அணியில் இடம்பெறவில்லை. ரக்பி அணிக்கு கப்டனாகவும் இருந்ததில்லை. பள்ளியில் பட்மின்டன் விளையாடியதே இல்லை. என் நினைவு சரியாக இருந்தால், என் வாழ்வில் ஒரே ஒருமுறை மட்டுமே பட்மின்டன் விளையாடி உள்ளேன். அதுவும் கூட, மார்க் பவுச்சருக்கு எதிரான வேடிக்கையான கேம்தானே தவிர, சீரியஸ் கேம் அல்ல.

ஆனால், கோல்ஃப் கொஞ்சம் தெரியும். சின்ன வயதில் ரக்பி, டென்னிஸ் விளையாடி இருக்கிறேன். கிரிக்கெட்டை எப்போதுமே அனுபவித்து விளையாடி வருகிறேன். அவ்வளவே" என விரிகிறது அந்தப் பக்கங்கள் ● (க)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்:-காதலே நிம்மதி
பாடல்
இசை:-தேவா
பாடகர்கள்:- எஸ்.பி.பாலசுப்பிரமணியம்




கங்கை நதியே... கங்கை நதியே
போகும் வலி என்ன
சின்னக் கிளியே தன்னந் தனியே
பாடும் மொழி என்ன
பாவமின்றி பலியைச் சுமக்கும்
உந்தன் நிலை என்ன
ஈரம் இன்றி இதயம் துடிக்கும்
இந்த உறவென்ன
சோகங்களே வாழ்க்கையின் வேதமோ
(கங்கை நதியே...)
முள்ளை ரசித்திருக்கும் - உலகம்
பூவை அறியாதே
இருளில் வசித்திருக்கும் - இதயம்
நிழலை அறியாதே
மூடு பனியினிலே - இப்போது
வழிகள் தெரியாதே
வீசும் புயலினிலே - அம்மம்மா
தீபம் எரியாதே
பாசம் துள்ளும் நெஞ்சில் இன்று
ஓசை கிடையாதே
சோகங்களே வாழ்க்கையின் வேதமோ
(கங்கை நதியே...)
விதியின் விளையாட்டு - எப்போது
முடியும் தெரியாதே
விடியும் திசை என்ன - இப்போது
அதுவும் தெரியாதே
நாளை எது வாழ்க்கை - அன்பே நீ
சொல்லி நடப்பாயோ
பாசம் நாணமல் அங்கேயும்
உள்ளம் துடிப்பாயோ
காலம் செய்த கோலம் என்று
துன்பம் பொறுப்பாயோ
சோகங்களே வாழ்க்கையின் வேதமோ

கங்கை நதியே... கங்கை நதியே
போகும் வலி என்ன
சின்னக் கிளியே தன்னந் தனியே
பாடும் மொழி என்ன
பாவமின்றி பலியைச் சுமக்கும்
உந்தன் நிலை என்ன
ஈரம் இன்றி இதயம் துடிக்கும்
இந்த உறவென்ன
சோகங்களே வாழ்க்கையின் வேதமோ

# கனவுகளும் பலன்களும்



### கனவுகள் பலிக்குமா?

கனவுகள் மனிதனோடு பின்னிப் பிணைந்தவை. மனதில் அமுக்கப்பட்ட ஆசைகள் கனவுகளாகப் பரிணமிக்கும் என்றும் ஆழ்மனதில் புதைந்திருக்கும் எண்ணங்களின் வாசனைகளே கனவுகளுக்குக் காரணம் என்றும் பல்வேறு கருத்துக்கள் உண்டு.

முன்னேற வேண்டும் என்று கனவு காணுங்கள் சாதிக்கலாம் என்றும் கூறி வைத்திருக்கிறார்கள் பெரியோர்கள்.

பொதுவாக கனவுகள் உடலில் உள்ள பித்தம், வாதம், கபம் எனும் மூன்று தாதுக்களின் மாறுபாட்டால் ஏற்படுகின்றன என்பது ஆயுர்வேதத்தின் தீர்ப்பு.

நிறைவேறாத ஆசைகளே கனவுகளாக வெளிப்படும் என்பது உலகத்தின் தலை சிறந்த மனோதத்துவக நிபுணர் சிக்மண்ட் ஃப்ராய்டின் கோட்பாடு.

ப்ரச்ன மார்க்கமும் (31 ஆவது அத்தியாயம்) கனவுகள் குறித்து விளக்குகிறது. அதன் அடிப்படையில் சில தகவல்களை அறிவோம்.

### கனவுகளுக்குக் காரணங்கள்

◆ உடலில் உள்ள பித்தம், வாதம் கபம் போன்ற தாதுக்கள் பாதிக்கப்படுதல்.

◆ தசை மற்றும் யுக்தி காலங்கள்.

◆ எந்தப் பொருளையாவது பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டு அல்லது கவலைப்பட்டு கொண்டு இருத்தல்.

◆ எதிரிகளால் செய்யப்பட்ட செய்வினைகள்


◆ உடலில் உள்ள ரகசியமான உள்நோய்கள்.

◆ பிறருடன் முன்பு கொண்டுள்ள பழக்கம்.

(அடுத்த வாரம் தொடரும்)

# மாஸ் பைக்!

எப்படியாவது ஒரு பைக் வாங்கிடணும்ங்கிறது இளைஞர்களோட கனவு...ஆனா ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வித்தியாசமான ஆசை. உலகத்திலேயே பாரமான மோட்டார் பைக்கை உருவாக்கி ஓட்டணும்கிறது தான் அது. கனவாக இருந்ததை நனவாக்கி சாதிச்சும் காட்டி “எப்பிடி...” என சந்தோசம் பொங்க வலம் வருகிறார்.ஸ்க்லெஸ்விக் ஹோல்ஸ்டினில் வசிக்கும் 49 வயதான ப்ரான்ங்தோஸ் தான் அந்தச் சாதனைக்காரர்.




கடந்த மார்ச் மாதத்தில் பைக்கை வடிவமைக்க ஆரம்பித்த மனுசன் செப்டெம்பரில் பணியை முடித்து, கிட்டத்தட்ட 5,000 பேர் முன்னிலையில் ஓட்டிக் காண்பித்து அசத்தியிருக்கின்றார். இந்த பைக்குக்குச் செலவிட்ட தொகை 4700 டொலர் ப்ரான்கின் மனைவி ஆஸ்ட்ரிட். என் கணவரை எல்லோரும் பாராட்டுவதால் ரொம்பவே சந்தோஷத்தில் இருக்கிறேன்.

860 கிலோ பைக்தான் இது வரைக்கும் சாதனையாக இருந்தது.

1.08 தொன்னில் இவர் உருவாக்கிய இந்த பைக் இப்போது உலக சாதனைங்கிறப்போ இதைவிட என்ன வேணும். என் கணவரை நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு" எனக் கண்கள் பனிக்க, இதயம் இனிக்க பதில் வருகிறது... ஹ்ம்ம்ம்! இந்தப் பணத்தில் நம் ஊர் பைக் எத்தனை வாங்கலாம்னுதானே யோசிக்கிறீங்க மக்களே? உங்க மைண்ட் வாய்ஸ் இங்கே கேட்குது!

# இறைவனைச் சேரும் வழி



முனிவர் ஒருவர் காட்டின் நடுவில் ஆசிரமம் ஒன்றை அமைத்து இறைவனை தியானம் செய்து வந்தார். இறைவனை பல ஆண்டுகளாக தியானித்து வந்ததன் காரணமாக அவர் சில சித்து விளையாட்டுக்களும் கைவரப் பெற்றிருந்தார். மக்கள் பலரும் அவரை சந்தித்து தங்கள் குறைகளைக் கேட்டறிந்து வந்தனர். மக்களின் வரவு காரணமாக அவருக்கு கொஞ்சம் கர்வமும் ஏற்பட்டிருந்தது.

ஒரு நாள் ஒரு இளைஞன் அவரைப் பார்ப்பதற்காக வந்தான். ஐயா சுவாமி! உங்களின் சக்தி பற்றி கேள்விப்பட்டேன். ஆகவே உங்களைப் பார்த்துச் செல்ல வந்தேன் என்றான்.

அப்போது அந்த வழியாக ஒரு யானை சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட இளைஞன் சுவாமி! உங்களால் அந்த பலம் பொருந்திய யானையை கொல்ல முடியுமா? என்றான்.

இதென்ன பிரமாதம் என்று கூறிய முனிவர், தான் வைத்திருந்த கமண்டலத்தில் இருந்து கொஞ்சம் தண்ணீரை கையில் ஊற்றி ஒரு மந்திரத்தை ஜெபித்து யானை இருந்த திசை நோக்கி வீசினார். அடுத்த விநாடியே யானை சுருண்டு விழுந்து உயிரை விட்டது.

இளைஞன் அற்புதம் சுவாமி உங்களின் திறமையைக் கண்டு நான் வியக்கிறேன். அது சரி சுவாமி! உங்களால் மீண்டும் அந்த யானைக்கு உயிர் கொடுத்து எழுப்ப முடியுமா? என்று கேட்டான். முனிவர் மீண்டும் கமண்டலத்தில் இருந்து தண்ணீரை எடுத்து யானையின் திசை நோக்கி வீசினார். யானை உயிர் பெற்று எழுந்தது.

இளைஞன் முனிவரே! முதலில் நீங்கள் யானையைக் கொன்றீர்கள். பின்னர் அதைப் பிழைக்க வைத்தீர்கள். இதனால் நீங்கள் பெற்ற பலன் என்ன? இதனால் என்ன ஆன்மீக வளர்ச்சியை அடைந்தீர்கள்? உங்களின் சித்து விளையாட்டு மூலமாக நீங்கள் இறைவனை எளிதாக அடைந்து விடுவீர்களா? இல்லை இறைவன் இந்த சித்து விளையாட்டை தான் விரும்புகிறானா? என்றான்.

இளைஞனின் கேள்வியால் முனிவர் தலை கவிழ்ந்தார். அவருக்கு தான் இதுவரை செய்து வந்தது தேவையற்ற வேலை எனப் புரிந்தது.

அந்த இளைஞன் மறைந்தான். தன் அறிவை தெளிய வைக்க இறைவனே நேரில் வந்ததை எண்ணி கண்ணீர் சிந்திய முனிவர், தன்னுடைய சித்து விளையாட்டை விடுத்து, ஆன்மீகப் பணியில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார்.


யார் என்ன சொன்னாலும்
குறைந்த விலை, அதிக சேமிப்பு.
சம்பள வாரத்தில் காகில்ஸ் புட்சிட்டி இடமிருந்து.
பெரிய வெங்காயம்
ரூ.38/500g
சீனி 1kg**
91/-
மைசூர் பருப்பு 1kg**
164/-
சம்பிரி கீரி சம்பா 1kg**
119/-
தக்காளி
ரூ.35.00
ரூ.30/500g
கத்தரிக்காய்
ரூ.42.00
ரூ.39/500g
கோவா
ரூ.39/500g
Anchor
ரூ.299/-
அங்கர் பால் மா
400g**
விளாம்பழம்
ரூ.70.00
ரூ.25/500g
புளி வாழைப்பழம்
ரூ.77.50
ரூ.65/500g
டூனா துண்டுகள்
ரூ.527.50
ரூ.469/500g
கொப்பரா துண்டுகள்
ரூ.466.50
ரூ.429/500g
30% கழிவை அனுபவியுங்கள்
BONLAC
ரூ.450.00
ரூ.359.00
பொன்லக் 400g
Set Yoghurt
ரூ.35.00
ரூ.30.00
கொத்மலே செட் யோகட் 80g
ரூ.450.00
ரூ.360.00
காகில்ஸ் மெஜிக் வெனிலா 2Ltr
ரூ.350.00
ரூ.245.00
ரூ.395.00
ரூ.276.50
Horlicks
ரூ.210.00
ரூ.147.00
2Ltr
ரூ.118.00
ரூ.92.00
10's
Nestomalt
ரூ.295.00
ரூ.270.00
நெஸ்டமோல்ட்
400g
Sprite
ரூ.465.00
ரூ.325.50
CORN FLAKES
250g
ரூ.570.00
ரூ.469.00
100g
ரூ.220.00
ரூ.198.00
.200g
ரூ.400.00
ரூ.319.00
ரூ.210.00
ரூ.189.00
ஸ்பிறைட் 2Ltr
ரூ.590.00
ரூ.413.00
1 Ltr
ரூ.525.00
ரூ.367.50
ரூ.550.00
ரூ.385.00
MilCo CHEESE
200g
Astra
ரூ.375.00
ரூ.329.00
SUSTAGEN
ரூ.370.00
ரூ.189.00
KRISCO
ரூ.215.00
ரூ.150.50
ரூ.570.00
ரூ.399.00
ரூ.1850.00
ரூ.1295.00
3kg
ரூ.400.00
ரூ.339.00
Fortune
1Ltr
ரூ.1500.00
ரூ.1390.00
400g
ரூ.150.00
ரூ.127.00
1kg
ரூ.130.00
ரூ.109.00
Clogard
110g
இப்பொழுதே காகில்ஸ் லோயல்டி மெம்பராகினால்
ரூ.500 பெறுமதியான ஷொப்பிங்
இலவசம்
Cargills
Cargills food city

# கமாலின் நூல் நந்திக்கடலுக்கான பாதையா? அதிகாரத்தை அடைவதற்கான பாதையா?



**மேஜர்** ஜெனரல் கமால் குணரட்னவினால் எழுதப்பட்ட நந்திக்கடலுக்கான பாதை என்ற நூலின் வெளியீட்டு விழா கொழும்பு ஆனந்தா கல்லூரியில் அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்விற்கு ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ அல்லது இந்த அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ எவரும் அழைக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் மட்டுமே புத்தக வெளியீட்டிற்கான அழைப்பிதழைப் பெற்றிருந்தனர்.

மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தான் எழுதிய **நந்திக்கடலுக்கான பாதை** என்ற நூலை முதன்முதலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கினார். மகிந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் மேஜர் ஜெனரல் ஒருவர் தான் எழுதிய நூலின் வெளியீட்டு விழாவிற்கு எதிர்க்கட்சியை மட்டும் அழைத்து நூலை வழங்கியிருந்திருந்தால் இவர் மீது 'புலி' முத்திரை குத்தப்பட்டிருக்கும்.

அத்துடன் இவருக்கு வழங்கப்பட்ட மேஜர் ஜெனரல் பதவியும் பறிக்கப்பட்டிருக்கும். இதுமட்டுமல்லாது இவருக்கான ஓய்வூதியமும் நிறுத்தப்பட்டிருக்கும்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கும் அவருக்கு ஆதரவளித்த மேஜர் ஜெனரல்களுக்கும் மகிந்த ராஜபக்ஷ என்ன செய்தாரோ அதுவே குறித்த மேஜர் ஜெனரலுக்கும் நடந்திருக்கும்.

சரத் பொன்சேகாவும் அவருக்கு ஆதரவளித்த சில மேஜர் ஜெனரல்களும் சிறையில் அடைக்கப்பட்டதுடன் சிலருக்குக் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது.

சரத்பொன்சேகா இராணுவத்திலிருக்கும் போது எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன்தொடர்பைப்பேணியது தவறானது என்பதே மகிந்தவாலும் அவரது சகபாடிகளாலும் முன்வைக்கப்பட்ட பிரதான குற்றச்சாட்டாகும்.

பொன்சேகாவின் இந்தச் செயலானது துரோகத்தனமானது என மகிந்த தரப்பால் குற்றம் சுமத்தப்பட்டு இவருக்கு எதிராக இராணுவ நீதிமன்றில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பொன்சேகா தொலைபேசி மூலம் உரையாடியதாக குற்றம் சுமத்தப்பட்டது. பொன்சேகாவுடன் தொடர்பைப் பேணியதால் பெரும் எண்ணிக்கையான இராணுவ வீரர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டு இது துரோகச் செயல் எனக் கூறப்பட்டதுடன் இந்த இராணுவ வீரர்கள் இராணுவ நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்பட்டனர்.

எனினும் மைத்திரி-ரணில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதித்திட்டம் தீட்டும் மகிந்த - கோத்தபாயமற்றும்ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தொடர்பைப் பேணுவது தவறானது என தற்போதைய அரசாங்கம் எவ்வித குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை.

தனது உயிரைப் பணயம் வைத்து இந்த நாட்டை மீட்ட வீரமுள்ள ஒரு போர்க் கதாநாயகனாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன விளங்குகிறார்.

இது தொடர்பில் எவ்வித சந்தேகமுமில்லை. எனினும் மகிந்த மற்றும் கோத்தபாய ஆகியோர் மேஜர் ஜெனரல் குணரட்னவை நந்திக்கடலுக்கான பாதைக்காகப் பயன்படுத்தவில்லை. அவர்கள் மீண்டும் தாம் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான "அதிகாரத்திற்கான பாதைக்காகவே" இவரைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேஜர் ஜெனரல் குணரட்னவின் நூல் வெளியீடானது மைத்திரி-ரணில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான ஒரு இராணுவக் கிளர்ச்சி என்பதைக் காண்பிப்பதற்காக கோத்தபாயவால் பாரியதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதை நூலாசிரியரின் உரையிலிருந்தும் தலைமை உரையிலிருந்தும் அறிய முடிந்தது.

தன்னுடன் பணியாற்றிய பயிற்சி வழங்கிய பல இராணுவ அதிகாரிகளுக்கு நூல்வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதற்கான அழைப்பைத் தான் விடுத்த போதிலும் ஒரேயொரு உயர் இராணுவ அதிகாரியே அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வானது இராணுவத்தாலேயே ஒழுங்குபடுத்தப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் கருதியதாகவும் ஆனால் அது அவ்வாறில்லை என அவர்கள் அறிந்தபோது அழைப்பிதழை நிராகரித்ததாகவும் மேஜர் ஜெனரல் குணரட்ன தனது உரையில் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த நிகழ்வில் இராணுவ இசைக் குழுவினர் கலந்து கொள்வார்கள் எனத் தான் கருதியபோதிலும் அதற்கும் அவர்கள் மறுப்புத் தெரிவித்ததாக நூல் வெளியீடு நிகழ்வைத் தலைமை தாங்கியவர் தெரிவித்தார்.

மேஜர் ஜெனரல் தனது நூல் வெளியீட்டு விழாவிற்கு எவ்வித கட்சி வேறுபாடுகளுமின்றி அரசியற் தலைவர்களுக்கு அழைப்பை விடுத்திருந்தால் உயர் இராணுவ அதிகாரிகள் நிச்சயமாக இதில் கலந்திருப்பார்கள்.

இதேவேளையில் இவர் எந்தவொரு அரசியல்வாதிகளையும் அழைக்காது இராணுவத்துடன் மட்டும் இந்த நிகழ்வை நடத்தியிருந்தால் பெருமளவான இராணுவத்தினர் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருப்பார்கள். இந்த விழாவை இராணுவம் ஒழுங்குபடுத்தி நடத்தியிருக்கும்.

இராணுவ இசைக் குழுவினரும் கலந்து கொண்டிருப்பார்கள்.



எனினும் மீண்டும் மகிந்த அல்லது கோத்த பாய ஆட்சிக்கு வரும் நோக்கை உள்ளடக்கிய நிகழ்ச்சி நிரலைக் கொண் டிருந்த நூல்வெளியீட்டு விழாவில் இராணுவத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை என் பதை மேஜர் ஜெனரல் ஆற்றிய உரையிலிருந்து அறிய முடிந்தது.

இந்த நிகழ்விற்கு இராணுவ உயர் அதிகாரிகளை அழைத்து நூல் வெளியீட்டை மேற்கொள்வதன் மூலம் தன்னுடன் இராணுவம் உள்ளது என்பதைக் காண்பிக்கவும் மைத்திரி - ரணில் அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவதற்குமே கோத்தபாய விரும்பினார்.

மகிந்த, கோத்தபாய-பொன்சேகாவிற்கு இடையிலான நட்பானது முறிவடைந்தமை ஒரு கெட்ட வாய்ப்பாகும் என மேஜர் ஜெனரல் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இந்த நட்பு முறிவடைவதற்கு மகிந்த மற்றும் கோத்தபாய உட்பட்ட ராஜபக்ஷ குடும்பமே காரணமாகும்.

போர் வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் தனது இராணுவத் தளபதி பதவியைத் தனக்கு வழங்குமாறு பொன்சேகா மன்றாட்டமாகக் கேட்டபோதும் அதற்கு மகிந்தவும் கோத்தபாயவும் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த அதேவேளையில் தமக்கு எதிராக இராணுவச் சதி நடப்பதாகவும் அதிலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறும் மகிந்தவும் கோத்தபாயவும் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

மகிந்த, கோத்தபாய மற்றும் பொன்சேகாவிற்கு இடையிலான நட்புறவு முறிந்து போனமை ஒரு கெட்டவாய்ப்பு என மேஜர் ஜெனரல் குணரட்ன மகிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கூறியிருந்தால் பதவி நிலைகள் அனைத்தும் பறிக்கப்பட்ட நிலையில் மேஜர் ஜெனரல் குணரட்ன ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆங்கிலத்தில் - உபுல் ஜோசப் பெர்னாண்டோ
வழிமூலம் - சிலோன் ருடே
மொழியாக்கம் - நித்தியபாரதி

# facebook

# வாழ்க்கையை புரிந்து கொள்ள முடியாது



சிறுவன் ஒருவன் ஏரிக் கரையில் விளையாடிக் கொண்டு இருக்கிறான்.

அப்போது, "என்னை காப்பாற்று, காப்பாற்று" என்று ஓர் அலறல். ஆற்றோரத் தண்ணீரில், வலைக்குள் சிக்கி இருக்கும் முதலை ஒன்று சிறுவனைப் பார்த்துப் பரிதாபமாக கதறுகிறது.

'மாட்டேன். உன்னை விடுவித்தால் என்னை விழுங்கி விடுவாய். காப்பாற்ற மாட்டேன்' என மறுக்கிறான் சிறுவன்.

ஆனால் முதலை, "நான் உன்னை சத்தியமாகச் சாப்பிட மாட்டேன். என்னைக் காப்பாற்று" என்று கண்ணீர் விடுகிறது.

முதலையின் பேச்சை நம்பி, சிறுவனும் வலையை அறுக்க ஆரம்பிக்கிறான். அறுத்து முடிப்பதற்குள், சிறுவனின் காலைப் பிடித்துக் கொண்டது.

"பாவி முதலையே இது நியாயமா? என்று சிறுவன் கண்ணீருடன் கேட்க,

"அதற்கென்ன செய்வது, பசி வந்தால் பத்தும் பறந்துவிடும். இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை" என்று சொல்லிவிட்டு விழுங்க ஆரம்பித்தது முதலை.

சிறுவனுக்கு சாவது பற்றிக் கூட கவலை இல்லை. முதலை ஏமாற்றி விட்டதோடு மட்டும் அல்லாமல், நன்றிகெட்டதனத்தை, 'இதுதான் உலகம்' என்று சொல்வதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மரத்திலிருந்த பறவைகளைப் பார்த்துக் கேட்டான். இதுதான் உலகமா?. அதற்கு பறவைகள், "எத்தனையோ பாதுகாப்பாக மரத்தின் உச்சியில் நாங்கள் முட்டையிடுகிறோம். ஆனாலும், பாம்புகள் முட்டைகளை குடித்து விடுகின்றன. அதனால், இது தான் உலகம்" என்று சொல்கின்றன.

அங்கு மேய்ந்து கொண்டு இருக்கும் கழுதைகளைப் பார்த்து கேட்கின்றான். "நாங்கள் இளமையாக இருந்த காலத்தில் அதிகபடியான சுமைகளை சுமக்கச் செய்து, அடித்து, சக்கையாக வேலை வாங்குகிறார்கள். எங்களுக்கு வயதாகி, நடை தளர்ந்தவுடன், தீனி போட முடியாது என்று விரட்டிவிடுவதால், முதலை சொல்வது சரிதான்" என்கின்றன.

ஆடுகளை கேட்கிறான். "எங்களுக்கு இரை போட்டு வளர்ப்பவர்களே, எங்களை இரையாக்கி கொள்வதால், முதலை சொல்வது சரிதான்" என ஆமோதிக்கின்றன.

கடைசியாக ஒரு முயலைப் பார்த்துக் கேட்கின்றான். "இது வல்ல உலகம். முதலை பிதற்றுகிறது" என முயல் சொல்ல, முதலைக்கு கோபம் வந்துவிடுகிறது.

'சிறு முயல் உனக்கு என்ன தெரியும்?' என்று முதலை சொல்லவும், 'நீ பேசுவது சரியாக புரியவில்லை, தெளிவாகப் பேசு' என்கிறது முயல்.

காலை விட்டால் சிறுவன் ஓடிவிடுவான் என்ற முதலையைப் பார்த்து, முயல் பெரிதாக சிரித்தது.

உன் வாலை வைத்து அவனை அடித்து விடமுடியாதா? ஒரே அடியில் அவனை வீழ்த்தி விடமுடியும் உன்னால் என்றவுடன், கர்வத்துடன் காலை விட்டுவிட்டு, இதுதான் உலகம் என பேச தொடங்கியது முதலை.

முயல் சிறுவனைப் பார்த்து 'நிற்காதே! ஓடிவிடு' என்கிறது.

சிறுவன் ஓடிவிடுகிறான். வாலால் அடித்து விடலாம் என நினைத்த முதலைக்கு ஏமாற்றமாகப் போய்விடுகிறது, வலையில் சிக்கியிருக்கும் வால் பகுதியை விடுவிப்பதற்குள் சிறுவனைப் பிடித்தது நினைவுக்கு வருகிறது.

கோபத்துடன் முயலைப் பார்க்க, "புரிந்ததா? இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை" என்கிறது முயல்.

தப்பி ஓடிய சிறுவன் கிராமத்தினரை அழைத்துவர, அவர்கள் முதலையை கொன்றுவிடுகின்றனர்.

சிறுவனோடு வந்த வளர்ப்பு நாய், புத்திசாலி முயலை பாய்ந்து பிடிக்கிறது. சிறுவன் காப்பாற்றுவதற்குள் முயலை நாய் கொன்று விடுகிறது.

உயிராக வளர்த்த நாய்தான் என்றாலும், உயிரைக் காப்பாற்றிய முயலை கொன்றுவிட்டதை அவனால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

கல்லெடுத்து எறிந்து நாயை விரட்டிவிடுகிறான்.

உதவி செய்தவர்களுக்கு உபத்திரவம் ஏற்படுவதும், நேசித்தவர்களையே வெறுக்க நேரிடுவதும் அவனை குழப்பி விடுகிறது.

இதுதான் உலகமா?

இதுதான் வாழ்க்கையா? என்ற கேள்விக்கு பதில் சொல்வார் யாருமில்லை!.

முன்னுக்குப்பின் முரணானதாகவும், எதிரும் புதிருமான நிகழ்வுகள்தான் வாழ்க்கை!.

அடுத்த நொடிகளில் நடக்க இருப்பது, அதிர்ச்சிகளா? ஆச்சரியங்களா? என அறியமுடியாமல் இருப்பதுதான் வாழ்க்கையின் சுவராஸ்யம்.

வாழ்க்கையை புரிந்துகொள்ள முடியாது. புரிய வைக்கவும் முடியாது. (எதிர் வருவதை) எது நடந்தாலும் ஏற்றுக்கொண்டு, முன்னேறுவதுதான் வாழ்க்கை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 852

Search for people, places and things | Nagendram Home

கஜமாறன்




தர்ஷி




சர்மிளா



வின்சன்



கௌரி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 52

## பிளவுபட்ட மனநோய் (Schizophrenia)

பிளவுபட்ட மனநோய் எனப்படுவது ஒரு சிக்கலான மனநோயாகும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தர்க்கரீதியாக சிந்திக்க முடியாதவர்களாக இருப்பதுடன் தமக்கு ஏற்படும் போலியான அனுபவங்களை உண்மையானவற்றிலிருந்து வேறுபிரித்தறியும் ஆற்றலை இழந்தவர்களாகவும் காணப்படுவார்கள். இதனால் அவர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளைக்கூட ஒழுங்காக மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். ஆனால் அவர்களில் பெரும்பாலானோருக்கு சூழ்நிலைக்கேற்ப பொருத்தமாக நடந்துகொள்ளவும் அதற்கேற்ப தமது உணர்வுகளை வெளிக்காட்டக் கூடியதாகவும் இருக்கும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ ஒரு வீதமானவர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது பொதுவாக எல்லா வயதினரையும் பாதிக்கக்கூடியதாக இருந்தாலும் பெரும்பாலும் 15 - 35 வயதுக்குட்பட்டோரையே அதிகம் பாதிக்கின்றது. இலங்கையில் இந்நோய் ஏனைய மனோவியாதிகளுடன் ஒப்பிடும்போது இளவயதினரிடையே கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதென்பதுடன் அவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்நோயானது பரம்பரைக் காரணிகளுடன் தொடர்புபட்டதென்றாலும் வாழும் சூழல், அதிகளவு மனஅழுத்தம் நிறைந்த வாழ்க்கை மற்றும் மூளையில் ஏற்படும் நிரந்தரமான பாதிப்புகளும் இதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. தாய் அல்லது தந்தைக்கு இந்நோய் இருக்குமானால் அவர்களது பிள்ளைகளுக்கு இந்நோய் வருவதற்கான சந்தர்ப்பம் 10 மடங்கால் அதிகரிக்கின்றது.

### நோயின் அறிகுறிகள்

இந்நோயின் அறிகுறிகள் ஒருவருக்கு ஒருவர் பெருமளவில் வேறுபட்டதாக காணப்படும். பொதுவாக அவற்றை நேர் அறிகுறிகள், எதிர் அறிகுறிகள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

### நேர் அறிகுறிகள் (Positive Symptoms)

இவ்வறிகுறிகளை உடையவர்களின் அன்றாட நடவடிக்கைகள் பெருமளவில் திரிவடைவதுடன் அவர்கள் மெய்யான புற உலகில் இருந்து விடுபட்டு ஒரு மாய உலகில் சஞ்சரிப்பவர்களாக காணப்படுவார்கள். அவர்களுக்கு பின்வரும் புலன் பிறழ்வு நிலையும் (Hallucination) போலியான நம்பிக்கைகள், கற்பனைகளும் (Delusions) காணப்படும்.

புலன் பிறழ்வு நிலையானது ஐம்புலன்களில் எதனையும் பாதிக்கக்கூடியது. இதில் செவிப்புல பிறழ்வு நிலையே (Auditory Hallucination) பொதுவாக காணப்படும் புலன் பிறழ்வு நிலையாகும். இதன் காரணமாக இந்நோயாளிகள், தாம் எண்ணுவதெல்லாம் தமது காதுகளில் பலமாக ஒலிப்பதாகவும் (Thought Echo) சில அந்நியக் குரல்கள் தங்களுடன் நேரடியாக உரையாடுவதாகவும் அல்லது தம்மைப் பற்றி தங்களுக்குள் விவாதிப்பதாகவும் மேலும் தமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சில குரல்கள் வர்ணிப்பதாகவும் முறையிடுவதுண்டு.

அத்தோடு சிலர் தமது உடல் அவயவங்களே தம்முடன் உரையாடுவதாகவும் கூறுவதுண்டு. இதன்காரணமாக இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அக்குரல்களால் ஏற்படுத்தப்படும் இடையூறுகள் காரணமாக அவற்றுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதுமுண்டு. இதை நாம் அவதானிக்கும்போது அவ்நோயாளி தன்னுடனேயே தான் பேசுவது போன்று தோன்றும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செவிப்புல பிறழ்வுடன் ஒப்பிடும்போது பார்வைப்புல பிறழ்வு (Visual Hallucinations) ஏற்படுவது சற்றுக் குறைவு. பார்வைப்புல பிறழ்வு காரணமாக இந்நோயாளிகளுக்கு சில மாயத் தோற்றங்கள் ஏற்படுவதுண்டு. அதனை அவர்கள் பெரும்பாலும் முற்றுமுழுதாக உண்மையான தோற்றப்பாடுகளாகவே நம்புவதுண்டு. பார்வைப்புல பிறழ்வு ஏனைய புலப்பிறழ்வுகளுடன் சேர்ந்தே பொதுவாகக் காணப்படும்.

மேலும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கும் சில போலியான நம்பிக்கைகள் இவர்களது செயற்பாடுகளை முடக்குவதாகவும் அமையக்கூடியது. எவ்வாறெனில் உதாரணத்திற்கு, இவர்கள் தமது உறவினர்கள் அல்லது நண்பர்கள் தமக்கு கெடுதல் செய்ய முற்படுவதாகவும் வேறு பலர் தம்மை பின்தொடர்ந்து தமது ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணிப்பதாகவும் சில ஆதாரமற்ற கற்பனைகளைக் கொண்டிருப்பார்கள் (Delusion of Persecution).

மேலும் தமது எண்ணங்களையும் செயற்பாடுகளையும் வேறு ஒருவர் அல்லது ஒரு சக்தி கட்டுப்படுத்துவதாகவும் முறையிடுவார்கள் (Delusion of Control). தமது உடலினுள் சில பாகங்கள் இல்லாமல் போனதாகவோ அல்லது பாம்புகள் போன்ற சில ஜந்துக்கள் தமது உடலுக்குள் வாழ்வதாகவும் நம்புவதுண்டு. அத்தோடு சில நோயாளிகள் அவர்களது கலாசாரங்களுக்கும் அப்பாற்பட்ட சில அபத்தமான விடயங்கள் தமக்கு ஏற்படுவதாகவும் கூறுவார்கள் (BiZarre Delusion). உதாரணமாக தான் வேற்றுக்கிரகத்தில் இருந்து பூமிக்கு வந்ததாகவும் வேற்றுக்கிரகவாசிகள் தம்மோடு நேரடித் தொடர்பில் இருப்பதாகவும் கூறுவதுண்டு. மேலும் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படும் சில விடயங்கள், புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளை வாசிக்கும்போது அதில் காணப்படும் குறிப்புகள் தமக்கென சிறப்பாக கூறப்படும் விடயங்களெனவும் நம்புவார்கள் (Delusion of Reference).

இவற்றை விட வேறு பல நம்பிக்கைகளும் அவர்களிடம் காணப்படும். தமது எண்ணங்களை யாரோ தம்மிடமிருந்து எடுப்பதாகவும் (Thought Withdrawal), மற்றவர்களது எண்ணங்கள் தங்களுடைய மூளையினுள் புகுத்தப்படுவதாகவும் (Thought Insertion), தாம் மனதில் நினைப்பவற்றை மற்றவர்கள் தெரிந்து கொள்வதாகவும் (Thought Broadcasting) சில போலியான நம்பிக்கைகளை கொண்டிருப்பார்கள்.

### எதிர் அறிகுறிகள் (Negative Symptoms)

இவ்வறிகுறிகளை உடையவர்களின் செயற்பாடுகளும் உணர்வு வெளிக்காட்டும் தன்மையும் பெருமளவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

இவர்கள் உணர்ச்சிகளற்ற முகத்தையும் ஏற்ற இறக்கமற்ற ஒரே மாதிரியான பேச்சையுமே வெளிப்படுத்துவார்கள். இவர்களுக்கு ஏனைய விடயங்களில் ஈடுபடுவதற்கான ஆசையற்றிருப்பதுடன் ஒரு செயலை தொடங்குவதற்கும் அதனை செய்வதற்குமான ஆற்றலை இழந்தவர்களாகவும் இருப்பார்கள். மேலும் இவர்கள் குடும்பத்தினர் மத்தியிலும் வெளியிடங்களிலும் மற்றவர்களிடம் அதிகம் பேசாது ஒதுங்கியே இருப்பார்கள்.

மேற்கூறிய அறிகுறிகளில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு, ஒரு மாதகாலத்திற்கு அதிகமாக ஒருவருக்கு இருக்குமானால் அவருக்கு பிளவுபட்ட மனநோய் இருப்பதாக உறுதிப்படுத்தப்படும்.

### சிகிச்சை முறைகள்

இந் நோய்க்கான காரணங்கள் இதுவரை சரியாக இனங்காணப்படாததால் இந்நோய் வராமல் தடுப்பதற்கோ அல்லது பூரணமாக குணமாக்குவதற்கோ எவ்வித மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நோயின் அறிகுறிகளை கட்டுப்படுத்தி அதிலிருந்து விரைவாக நோயாளிகளை மீட்டெடுப்பதே இந்நோய்க்கென வழங்கப்படும் சிகிச்சைகளின் முக்கிய நோக்கமாகும்.

நோயாளிகளை வீட்டிலோ அல்லது வைத்தியசாலையிலோ வைத்து சிகிச்சை அளிக்கமுடியும். ஆனால் தீவிரமான புலன் பிறழ்வு நிலையிலுள்ளவர்களையும் தற்கொலை எண்ணங்கொண்டவர்களையும் தமது போலியான நம்பிக்கைகளால் மற்றவர்களுக்கு கெடுதல் விளைவிக்க முனைபவர்களையும் வைத்தியசாலையில் வைத்தே சிகிச்சை அளிக்க வேண்டும்.

இவர்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் (Antipsychotic Medication) முக்கியமாக புலன்பிறழ்வு நிலையையும் போலியான நம்பிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கே ஆகும். இதன்போது நோயாளிகளுக்கு இம்மருந்துகளை முறையாக தொடரவேண்டியதன் அவசியத்தையும் அதை குறிப்பிட்ட காலத்திற்கு முதல் நிறுத்தினால் இவ்வறிகுறிகள் மீண்டும் ஏற்படுவதுடன் முன்னரைவிட அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் தெளிவாக விளக்கவேண்டும்.

சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெரும்பாலானோர் தமக்கு ஏற்பட்டிருக்கும் நோய் தொடர்பாக தெளிவடைவதோடு தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் போலியானவை என்று உணர்ந்து கொள்வார்கள். ஆனால் சிலர் தமக்கு ஏற்படும் அனுபவங்கள் உண்மையென்று ஆழமான நம்பிக்கை கொண்டிருப்பதால் அவர்கள் இச்சிகிச்சை முறைகளால் நல்ல முன்னேற்றத்தை அடைவதில்லை என்பதோடு சிகிச்சையை தொடரவும் மறுப்புத் தெரிவிப்பார்கள். இவ்வாறானவர்களுக்கு சில கடுமையானதும் பல பக்கவிளைவுகளை ஏற்படுத்தக் கூடியதுமான மருந்துகளை பாவிக்கும் தேவையும் ஏற்படுவதுண்டு.

சிகிச்சை முறைகளை சிறப்பாக கடைப்பிடிப்பவர்களில் பொதுவாக 20 வீதமானவர்கள் பூரணமாக இந்நோயிலிருந்து குணமடைவதுண்டு. மற்றைய 20 வீதமானவர்கள் மீண்டும் மீண்டும் இந்நோயின் தாக்கத்திற்கு ஆளாகுகின்றார்கள். ஆனால் 40 வீதமானவர்கள் இந்நோயுடன் நீண்டகாலம் போராடவேண்டியிருப்பதுடன் எஞ்சியவர்கள் தற்கொலையும் செய்துகொள்கின்றார்கள்.

கணிதவியலாளரான பேராசிரியர் ஜோன் போர்ப்ஸ் நாஷ் (John Forbes Nash) கூட இந்நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஆனாலும் அவர் அதனுடன் போராடி வென்ற ஒரு மேதையாவார். ஏனெனில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமக்கு ஏற்படும் அசாதாரணமான அனுபவங்கள் நோயின் காரணமாகவே ஏற்படுகின்றதென ஆழ்ந்தறியும் உள்நோக்கு (Insight) பெருமளவில் காணப்படுவதில்லை. அவ் அனுபவங்கள் உண்மையானவைதான் என்பதில் உறுதியாக இருப்பார்கள். ஆனால் நாஷ் தனது நோயுடன் போராடி தனக்கு ஏற்படும் அனுபவங்கள் தனது நோயின் கூறுகள் என்பதைக் கண்டு அவற்றுடன் தொடர்ந்து வாழ்ந்து வெற்றிகண்டவர் என்பதுடன் பொருளாதார விஞ்ஞானத்திற்கான நோபல் பரிசினையும் வென்றவர்.

### பிளவுபட்ட மனநோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி பற்றிய மருத்துவக்குறிப்பு

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் 2008 ஆம் ஆண்டு நான் மனநல சிகிச்சைப் பிரிவில் பணிபுரிந்து கொண்டிருந்த போது சந்தித்த ஒரு நோயாளி பற்றிய சில விடயங்களை இங்கு பகிர்வது இந்நோய் பற்றிய சற்று விளங்கிக்கொள்ள பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன்.

நோயாளி முப்பது வயதுடைய திருமணமாகாத பெண்ணாவார். இவர் போதனா வைத்தியசாலையின் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவிற்கு ஒருநாள் காலை தனியாக வந்து, இரு வேற்றுலகவாசிகள் தன்னை தாக்கியதால் தனது இடதுபுற நெஞ்சுப்பகுதியில் பாரிய காயமேற்பட்டு குருதி பெருகுவதாக தெரிவித்து தனக்கு சிகிச்சை அளிக்குமாறு வேண்டினார். அவரை பரிசோதித்துப்பார்த்த வைத்தியர் அவருக்கு அவ்வாறான காயம் ஏதும் இல்லை என்பதை கண்டுகொண்டதோடு அவரது ஏனைய நோய் அறிகுறிகளை இனங்கண்டு அவரை உடனடியாக மனநல சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றினார்.

அங்கு இந்நோயாளியை சந்தித்து சில மணிநேரம் உரையாடியதன் பின்னர் அவரிடமிருந்து பின்வரும் தகவல்களை பெறக்கூடியதாக இருந்ததுடன் அவர் எவ்வகையான மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதையும் அறியக்கூடியதாக இருந்தது. அந்நோயாளி கூறுகையில், தான் உண்மையில் ஒரு வேற்று ஒரு கிரகத்தில் வாழ்பவர் எனவும் தான் கடவுள் மீது அதீத பக்தி கொண்டதன் காரணமாக தனக்கு பிரத்தியேகமான ஒரு சக்தி அளிக்கப்பட்டதாகவும் அச்சக்தியின் உதவியுடன் இப்பூமியிலுள்ள மனிதர்களின் மனங்களிலுள்ள அழுக்குகளை நீக்குவதற்காக இங்கு பிறப்பெடுத்திருப்பதாகவும் கூறினார். மேலும் தன்னோடு எப்போதும் இரண்டு வேற்றுலகவாசிகள் தொடர்பில் இருப்பதாகவும் தனது மனவாற்றலால் அவர்களோடு தான் உரையாடுவதாகவும் அவர்கள் தன்னைக் கட்டுப்படுத்த முனைவதாகவும் தெரிவித்தார்.

மேலும் தனது நெஞ்சுக்கூட்டினுள் 'மின்சுற்று' ஒன்று இருப்பதாகவும் அது ஒரு நாள் தானாக அடிவயிற்றுப் பகுதிக்கு இறங்கிவிட்டதாகவும் தனக்கு அதன் பின்னரே பசியின்மை மற்றும் மூச்சுத்திணறல் போன்ற உபாதைகள் இடையிடையே ஏற்படத்தொடங்கின எனவும் கூறினார். அம்மின்சுற்று இவ்வுலகத்தையே கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஆற்றலுடையதென அவர் தீவிரமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த வேற்றுலகவாசிகள் ஏதோவொரு காரணத்திற்காக தன்மீது கோபம்கொண்டு இன்று தனது நெஞ்சுப்பகுதியை ஒரு இயந்திரத்தால் வெட்டி தனது இருதயத்தில் ஒரு துளையை ஏற்படுத்திவிட்டதாகவும் அதிலிருந்து குருதி பெருகியதாலேயே தான் வைத்தியசாலைக்கு வந்ததாகவும் கூறினார். இவ்வாறாக அந்நோயாளியுடனான உரையாடல் மூலம் அவரது போலியான நம்பிக்கைகள் பற்றி அறிய முடிந்தது. மேலும் அவரது பெற்றோர்கள் கூறுகையில், அவருக்கு இதேபோன்ற அறிகுறிகள் இரண்டு வருடங்களுக்கு முன்னரும் ஏற்பட்டதென்றும் ஆனால் அவர் அதற்கென கொடுக்கப்பட்ட மருந்துகளை சரியான முறையில் எடுக்கவில்லை என்றும் கூறினார்கள். பின்னர் வைத்தியசாலையில் வைத்து அந்நோயாளிக்கு சில நாட்கள் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பின்னர் அவரது போலியான நம்பிக்கைகள் பெருமளவு குறைவடைந்து முன்னேற்றமடைந்தார்.

வைத்தியர் பி.மனோகரன்